
புண்ணிய பூமியில் புனித யாத்திரை



வானதி பதிப்பகம்

வி.என். சிதம்பரம்

புண்ணிய பூமியில் புனித யாத்திரை

வி. என். சிதம்பரம்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை · 17

முதற்பதிப்பு : செப்டம்பர், 1980

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 5-00

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14.

33-1

மதிப்புரை

இயற்கை வளம் மிகுந்தது நம் இந்திய பூமி. இமயம் முதல் குமரிவரை அது கொண்டுள்ள அழகுச் செல்வங்கள் ஏராளம்; ஏராளம். அருள் செல்வங்கள் நிரம்பிய பூமி நம் பாரத பூமி. இறைவனின் அன்புக் கருணையினால் நம் இந்திய பூமியில் இனிய நீர்ப்பெருக்கும் இன்கனிவளமும் மலைச்சிகரங்களும் கூடகோபுரங்களும் மாடமாளிகைகளும் காணற்கரிய கலைச் செல்வங்களும் நிறைந்து காணப்பெறு கின்றன.

பாரத புண்ணிய பூமியைப் பாரதி தம் பாட்டுத் திறத்தால் பாராட்டிப் போற்றிப் பாடியுள்ளதைச் சற்றே நினைவுகூர வேண்டும்.

பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே;
போற்றுவம் இஃதை எமக்கில்லை ஈடே...
....
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர்பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே
....
கன்னலும் தேனும் கனியும் இன்பாலும்
    கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
    ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே!

என்று நம் பாரத நாட்டை வியந்து வியந்து பாடியுள்ளார். பாரதி மட்டுமல்ல, பாரிலுள்ளோர் அனைவரும் நம் இந்தியத் திருநாட்டைப் புண்ணிய பூமி என்று போற்றுகிறார்கள். அதனாலேயே ஆண்டுதோறும் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எண்ணற்ற மக்கள் சுற்றுலாப் பயணிகளாக பாரதபூமிக்கு வருகிறார்கள். ஆனால் பாரத மண்ணில் பிறந்த நாம் நம் நாட்டை, இந்தியா முழுவதையும் எத்தனை பேர் சுற்றிப் பார்த்திருக்கிறோம், என்று கணக்கிட்டால் அது மிக மிகக் குறைவான எண்ணிக்கைக்குள்தாம் அடங்கும். ஆனால் நம்மிடமுள்ள இந்த அலட்சியப்போக்கு மாறவேண்டும். நாமிருக்கும் நாட்டை நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் ஆர்வமேலீட்டால் இந் நூலாசிரியர் திரு வி.என். சிதம்பரம் அவர்கள், தம் நண்பர்

குழாத்துடன் இந்தியத் திருநாட்டின் பல பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து அந்தச் சுற்றுப் பயணத்தில் அவர் கண்ட எண்ணற்ற எழிற் காட்சிகளையும், நுகர்ந்த இன்பங்களையும், கண்ட அற்புதங்களையும், கிடைத்த அநுபவங்களையும் பெற்ற இன்பங்களையும் யாவரும் பெற, சுவையான முறையில் ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற அடிப்படையிலே எழுதியுள்ளார். இந்நூலைப் படிக்கும் பொழுது அவருடன் நாமும் அவர் கூடவே செல்கிறோம் என்ற உணர்வினைப் பெறுகிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு அழகாக ஒவ்வோர் இடத்தையும் அங்குள்ள ஒவ்வொரு விஷயத்தையும் சித்திரித்துக் காட்டுகிறார். அவருக்கே இயல்பான நகைச்சுவை நயத்தோடு, அவர் பார்த்த, கேட்ட விஷயங்களை நமக்கு எடுத்துச் சொல்கிறார். அவை படிக்கச் சுவையாக உள்ளன.

''பணம் ஒன்றையே பெரிதெனமதித்து அல்லும்பகலும் அயராது உழைக்கும் மனித சமுதாயம் அற்ப நேரத்தில் அழியும் செல்வத்தை விட்டு அழியாத நித்தியப் பொருளான அருள் செல்வத்தைப் பெறவேண்டும்; இந்தியத் திருநாட்டின் இயற்கைச் செல்வத்தைக் கண்டு களித்து அதனை ஆராதிக்கவேண்டும்'' என்ற நற்கருத்துடனேயே நண்பர் திரு வி. என். சிதம்பரம் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். சுற்றுலாப் பயணத்தில் அவருக்குக் கிடைத்த சுவையான அநுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் என்றே சொல்லவேண்டும். இது வாசகர்களுக்கு மிகவும் பயனுள்ள பயண இலக்கியமாகத் திகழ்கிறது. இந்நூலுக்கு திரு முருக கிருபானந்தவாரியார் அவர்கள் மனம் கனிந்து அணிந்துரை அளித்துள்ளார்கள். வாரியார் அவர்கள் ஒரு நாளைக்கு ஓர் ஊரில் இருப்பவர்கள் என்பது உலகம் அறிந்த ஒன்று. நடமாடும் பல்கலைக் கழகத்தின் முத்திரையாக அணிந்துரை இந்நூலுக்குக் கிடைத்துள்ளது பெருஞ் சிறப்புக்குரியது.

இந்நூலை எழுதிய ஆசிரியர் திரு வி. என். சிதம்பரம் அவர்களுக்கும். அணிந்துரை நல்கிய நடமாடும் பல்கலைக் கழகம் உயர்திரு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கும் வானதி பதிப்பகத்தின் சார்பிலும் வாசகர்கள் சார்பிலும் நன்றி.

வானதி ஏ. திருநாவுக்கரசு

உ

முருகா

அணிந்துரை

எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இறைவன் உறைகின்றான். பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறை கின்ற பரிபூரணானந்தமே'' என்கின்றார் தாயுமானார்.

ஒரு மன்னவன் சபையில் பல புலவர்கள் கூடியிருந் தார்கள். மன்னவன் தன் கையில் ஒரு மாம்பழம் வைத் திருந்தான். ''புலவர்களே! இறைவனுடைய உறைவிடம் இது என்று கூறினால் இந்த மாம்பழத்தைத் தருகின்றேன்'' என்றான். புலவர்கள் கைலாசம் என்று கூறலாமா? வைகுண்டம் என்று கூறலாமா? என்று கருதி மௌனமாக இருந்தார்கள். ஒரு பெண் குழந்தை அறிவுள்ள சிறுமி எழுந்து, ''அரசர் பெருமானே! கடவுள் இருக்குமிடத்தைக் காட்டினால், ஒரு மாம்பழம் தருகின்றேன் என்றீரே! இல்லாத இடத்தை நீர் காட்டும். உமக்குப் பன்னிரண்டு மாம்பழங்களைத் தருகின்றேன்'' என்று கூறினாள். அரசனும் புலவர்களும் அப்பெண்மணியின் அறிவின் திறத்தைக் கண்டு வியந்தார்கள்.

ஆதலால் எங்கும் இறைவன் நிறைந்துள்ளான். ஆனால் ஆலய வழிபாடு ஏன், என்று தோன்றும். பசுவின் உடம்பு முழுவதும் பால் பரந்து இருப்பினும் கொம்பைப் பற்றி இழுத்தால் பால் வருமா? வாலைப்பற்றி வருடினால் பால் கிடைக்குமா? கிடைக்காது. பல்தான் கிடைக்கும். மடியில் கைவைத்தால்தான் பால் கிடைக்கும்.

அதுபோல் இறைவன் கருணை எங்கும் நிறைந்திருந் தாலும் திருக்கோயில் பசுவின் மடிபோன்றது ஆகும். மந்திரயந்திரத்துடன் கூடியதும் ஆன்றோர்கள் வழிபட்டது மாகிய ஆலயத்தில் உள்ள மூர்த்தியை என்புருக அன்புடன் வழிபட்டால் இறைவனுடைய கருணை கிடைக்கும்.

தெற்கு நமனுடைய திசை, வடக்கு சிவனுடைய திசை. தெற்கு நோக்கிப் போவது மரணயாத்திரை; வடக்கு நோக்கிப் போவது சரணயாத்திரை. கோலார் தங்க வயலில் எங்கு வெட்டினாலும் தங்கக் கொடி வடக்கு நோக்கியே ஓடுகின்றது என்று தங்கச் சுரங்க அதிகாரி கூறினார். அதனால்தான் நாம் வடக்கு நோக்கி அமர்ந்து வழிபாடு புரிகின்றோம்.

தீர்த்தங்களில் சிறந்தது கங்கை.

மலைகளில் சிறந்தது இமயம்.

மணிகளில் சிறந்தது உருத்திராட்சமணி.

சிவபெருமானுடைய சடாமுடியில் விளங்கும் கங்கை புனிதமானது. பகீரதன் தவஞ்செய்து நிலவுலகிற்குக் கொணர்ந்தான். கங்காஸ்னானம் எல்லார்க்கும் கிட்டாது. பண்டைத் தவம் இருந்தால்தான் கிடைக்கும்.

பாவங்களைத் தீர்ப்பதனால் தீர்த்தம் எனப் பேர் பெற்றது. தீர்த்தம் சிவபெருமானுடைய வடிவு என்று உணர்தல் வேண்டும். "சென்றாடு தீர்த்தங்கள் ஆனான் கண்டாய்" என்கின்றார் அப்பரடிகள். "ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்கின்றார் மணிவாசகர்.

வெறுந் தண்ணீர் என்று முழுகினால் உடம்பிலுள்ள மாசுமட்டும் நீங்கும். அது சிவம் என்று கருதி நீராடினால் பிறவி மாசும், மனமாசும், வினைமாசும் நீங்கும். புண்ணியம் ஓங்கும். ஆதலால் தீர்த்தத்தில் முழுகுகின்றவர்கள் தீர்த்தத்தைச் சிவமாக எண்ணி, அதில் ஓம் சிவாயநம என்று எழுதி பத்து பஞ்சாட்சரம் கூறி நதியை எதிர்த்து நின்று முழுகவேண்டும். குளம் என்றால் வடக்கு நோக்கி முழுக வேண்டும்.

யாத்திரைகளில் உயர்ந்தது காசி யாத்திரை. அது பந்தங்களையகற்றுவது. யாத்திரையில் பற்பல திருத்தலங்களைத் தரிசித்தாலும் காசி யாத்திரை என்றுதான் கூறுவர். யாத்திரையில் தன் வீடு, தன் சுற்றம், தன் நாடு இவைகளை விட்டுப் புறப்படுவதால் பந்தம் குறையும். பல நாடுகள் சென்று பல மக்களுடன் பழகுவதனால் அறிவு விரிவு பெறும். அநுபவம் உண்டாகும்.

இந்தப் புனித யாத்திரையைப் பற்றி என் ஆப்த அன்பர் உயர்திரு V. N. சிதம்பரம் அவர்கள் இந்த நூலை எழுதி தன் அநுபவங்களை அள்ளி வழங்குகின்றார்.

வானதிப் பதிப்பகத்தார் இந்த இனிய நூலை அச்சிட்டுத் தமிழ் மக்களுக்குப் புத்தகமாக்கித் தருகின்றார்கள்.

எல்லாரும் படித்து இன்புறுவார்களாக!

குமரன் குன்றம்
குரோம்பேட்டை
சென்னை
27-8-80

அன்பன்

கிருபானந்தவாரி

ஆசிரியர் முன்னுரை

நான் யாத்திரை சென்றபோது இரவு நேரத்தில் ரயிலில் இருந்தபடியே அன்றாடம் பார்த்தவைகளை என் மகள் ஆனந்திக்குக் கடிதம் எழுதுவது வழக்கம். அந்தக் கடிதங்களை எல்லாம் ஒன்று சேர்த்து மேலும் சில புள்ளி விவரங்களுடன் இந்த நூலை எழுத ஆரம்பித்தேன்.

இந்த முறை சீக்கிரம் புத்தகம் எழுதித் தருமாறு மதிப்பிற்குரிய அண்ணன் வானதி திருநாவுக்கரசு அவர்களும் என்னை வற்புறுத்தினார்கள். எனது 'ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள்' நூலை வியாபார நோக்கின்றி மிகச் சிறப்பான முறையிலே உருவாக்கி நன்கு விளம்பரப்படுத்தி, என்னையும் நூலாசிரியனாக வானதி திருநாவுக்கரசு அவர்கள் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அந்த நல்அறிமுகமே அருள்மிகு மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு நான் அறங்காவலர்குழு தலைவராய் வருவதற்கு ஓர் ஏணிப்படியாக அமைந்தது.

வடநாட்டிலே புண்ணிய நதிகள் அதிகம். தென்னாட்டிலே ஆலயங்கள் அதிகம். முகம்மதியர்கள் வடநாட்டை ஆண்ட காரணத்தினால் சரித்திரச் சான்றுகள் அதிகம் இருக்கிறது. இந்த நூல் சரித்திரச் சான்றுகளோடு பார்க்கக் கூடிய கண்களுக்கும், ஆலய வழிபாட்டுக்குச் செல்கின்ற பக்தர்களுக்கும் பயன்படுகின்ற முறையிலே உருவாக்கப் பட்டு இருக்கிறது.

வாசகர்களைச் சந்திக்க மீண்டும் ஒரு வாய்ப்புத் தந்த அண்ணன் திருநாவுக்கரசு அவர்களுக்கும் என்னுடைய நூலுக்கு அணிந்துரை அளித்த அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலை அன்னை அங்கயற்கண்ணியின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கிறேன்.

அன்புள்ள

கமலா தியேட்டர்
சென்னை—26.

வி. என். சிதம்பரம்

யாத்திரையில் கண்ட நகரங்கள்

KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

எங்கள் புனிதப் பயணம்

நண்பர்கள் நாலைந்து பேர் அமர்ந்து அளவளாகிக் கொண்டிருந்தோம். விஷயங்கள் எதை எதையெல் லாமோ தொட்டு முடிவில் உல்லாசப் பயணங்களைப் பற்றிக் கொண்டது. எங்களில் ஒருவர் காலில் சக்கரத் தோடு பிறந்தவர். 'இம்'மென்றால் இங்கிலாந்துக்கும் 'அம்'மென்றால் அமெரிக்காவுக்கும் பறந்து போகக் கூடியவர். அப்படிப் பறந்து கொண்டே இருக்கும் அவரை, பல நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப் புடைய அவரை, நாங்கள் பாக்கியசாலி என்று கருதுவ துண்டு. அவர் பேச்செல்லாம், பாரிஸில், ஜெர்மனி யில், இத்தாலியில், ஸான்பிரான்சிஸ்கோவில், ரஷ்யா வில், துபாயில் என்றே இருக்கும். எங்களுக்கெல்லாம் அவர் கூறும் வக்கணையான விளக்கங்களில் ஒரு மயக்கம். ஐஃபல் டவரைப்பற்றியும், நயகாரா நீர் வீழ்ச்சியைப் பற்றியும் மார்ஸேல்ஸ் அரண்மனை பற்றியும் இன்னும் பல அற்புதங்களையும் அதிசயங் களையும் அழகுகளையும் பற்றிச் சொல்லும்போது, 'இவரைப் போல் உலகம் சுற்றும் பாக்கியம் நமக்கு ஏற்படாதா?' என்ற ஏக்கம் ஏற்படும்.

மென்று கேட்டுக் கொண்டார். எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியான மகிழ்ச்சி! எங்கள் பொழுதுபோக்குப் பேச்சு இப்படியொரு அரிய வாய்ப்பாக உருப்பெறு மென்று நினைக்கவே இல்லை.

யாத்திரை என்பது தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் ஒரு செயல். அதுவும் முக்கியமாக, பாரத மக்களுக்கும் யாத்திரைக்கும் ரொம்ப ஈடுபாடு உண்டு. அன்றும், இன்றும் என்றுமே யாத்திரைக்கு முக்கியத் துவம் தந்து பேணி வளர்க்கும் பழக்கம் இந்திய மக்களி டையே இருந்து வருகிறது. வடபுலத்தார் தென்னகம் நோக்கி இராமேஸ்வர யாத்திரை மேற்கொள்ளுவதும், தென்னகத்தார் இமயம் நோக்கிக் காசியாத்திரை மேற் கொள்ளுவதும் எத்தனை எத்தனை நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருகின்றன? இதிகாச காலந் தொட்டே என்றுகூடச் சொல்லலாம். அயோத்தி ராமன் தண்ட காரண்யம் நோக்கி வந்த கதை தெரியாதா நமக்கு? அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை கிளம்பிப் போய்ப் புரிந்த சாகஸங்களைப் படித்ததில்லையா நாம்?

யாத்திரைகளால் ஒருமைப்பாடு உண்டாகும். ஒருவரைப் பற்றி மற்றவர் உணர்ந்துகொள்ள முடியும். கலாசாரப் பரிவர்த்தனைக்கு யாத்திரையைப் போன்ற தகுதியான சாதனம் வேறெது? அண்டை நாட்டு மக்களோடும் மாநிலத்தவரோடும் அளவளாவலாமே. ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ள, பகை மறையும், நட்பு வளர, நல்லவை பல தோன்ற யாத்திரைகள் உதவும்.

ஒரு நாட்டின் சரித்திரம் படைக்கும் வல்லமையும் யாத்திரைகளுக்கு உண்டு என்பது நமக்குத் தெரியும். ஒரு யுவான் சுவாங்கும் பாஹியானும் இல்லை

யானல் ஹர்ஷவர்த்தனரின் அவையைப் பற்றியும் ஆட்சி முறை பற்றியும் யாருக்குத் தெரிந்திருக்க முடியும்?

ஒரு மார்கோ போலோ உலகம் சுற்றியதினல் தானே ஐரோப்பியர்களுக்குச் சீனவையும், இந்தியாவையும் இன்னும் பல நாடுகளையும் இங்குள்ள அதிசயங்களையும் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது.

இபின் படுடா என்ற ஆப்பிரிக்கர் இந்தியாவில் நகர்வலம் வந்ததினல்தான் மொகலாயர்களின் அந்தப்புரங்களையும், அந்தரங்கங்களையும் அரசியல் முறைகளையும் அறிய முடிகிறது.

எதையுமே இறை உணர்வோடு கலந்து செயல்படும் நாம் பிரார்த்தனை, வேண்டுதல் என்ற பெயரில் சுற்றுலாவைத் தல யாத்திரைகளைப் புனிதப் பயணங்களாக்கினலும் அதன் பின்னல் புதைந்து கிடக்கும் நற்செயல்கள் அன்றும் இன்றும் என்றுமே மாறப் போவதில்லை. இன்றுள்ள எத்தனையோ வசதிகள் ஏதுமே இல்லாத அந்த நாட்களிலேயே நாம் நாடுவிட்டு நாடு, தேசம் விட்டுத் தேசம் யாத்திரை செய்திருக்கிறோம். திருவிழாவும், மேளாக்களும், மகாமகங்களும் ஏற்பட்டது எதற்காக? பல்வேறு பிராந்திய மக்கள் பயணப்பட்டு ஓரிடத்தில் வந்து கூடுவதற்காகத்தானே? இத்தகைய பயணங்களால் பல்வேறு பகுதிகளின் பூகோள அமைப்பு, மக்களின் பழக்க வழக்கம், நாகரிகம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடிந்தது. ஒருவரோடு ஒருவர் கலக்கவும் ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ளவும் வழி வகுத்துக் கொடுத்தது. பிரயாணங்கள் இல்லையானல் இன்றைய மனிதன் இத்தனை முன்னேறி இருக்கமாட்டான்; நாகரிகமடைந்

திருக்கமாட்டான். இன்று சந்திர மண்டலத்தில் காலடி வைக்குமளவு அவன் உயர்ந்திருக்கிருனென்ருல் அது தொன்றுதொட்டு, வழிவழியாகப் பிரயாணப்பட்டு வந்ததினுல்தான்.

பிரயாணத்தைப் பற்றிய இந்தச் சிந்தனைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு இனி நாங்கள் மேற்கொண்ட அகில இந்திய சுற்றுப்பயணத்தைப் பற்றிக் கூறுகிறேன். ஹுவான் சுவாங்கும், பாஹியானும், மார்கோபோலோவும் ஊர் சுற்றிவிட்டுப் பேசாமலிருந்திருப்பார்களேயானுல் நமக்குச் சரித்திரம் கிடைத்திருக்காது. தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அவர்கள் குறிப்பெழுதி வைத்ததினுல்தான் வருங்கால சந்ததிகளுக்கு அவை எவ்வளவோ விஷயங்களைப் புரிய வைக்கும் பொக்கிஷங்களாக அமைந்தன. என் பிரயாண அனுபவங்களை நான் எழுதப்போவது அப்படிப் பொக்கிஷங்களாக விளங்கப் போகிறதென்பதற்காக அல்ல. அந்த உலகப் புகழ்பெற்ற யாத்திரிகர்களாகிவிட முடியுமா நான்? முடியவே முடியாது. என்னைப் போன்ற சராசரி மனிதன் பல ஊர்களுக்குப் போக நேரும்போது என் பிரயாண அனுபவங்கள் அவனுக்கு ஏதாவது ஒரு வகையில் 'துளியூண்டு' உதவலாமோ, பார்க்க வேண்டிய இடங்களைப்பற்றி முன்கூட்டியே தெரிந்துகொள்ள வகை செய்யுமோ என்ற ஆசையில்தான்; 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற சான்ருேரின் வாக்குப்படிக்குத்தான் நாங்கள் மேற்கொண்ட பிரயாணத்தைப்பற்றி எழுத முற்பட்டிருக்கிறேன்.

எங்கள் பிரார்த்தியப் பத்திரிகையான 'நகர மலர்' பத்திரிகையில் முதலில் இந்தப் பிரயாண அனுபவங்

களை 'எங்கள் புனிதப் பயணம்' என்ற தலைப்பில் தொடராக எழுதி வந்தேன். அந்தக் கட்டுரைகளைத் தான் இப்போது புத்தக வடிவிலாக்குவதற்காக வெட்டியும் ஒட்டியும், பல புதிய விஷயங்களை இணைத்தும் சிலவற்றை விரிவாகவும் இங்கு தொகுத்துள்ளேன். ஒரு வகையில் இவை முற்றிலுமே புத்தகத்துக்காகப் புதிதாக எழுதப்பட்டது என்றேகூடக் கூறலாம்.

'நாங்கள் நாங்கள்'—என்று பொதுவாகக் கூறி வருகிறேனே, அந்த 'நாங்கள்' யார் யார் என்பதை முதலில் உங்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டுப் பிறகு பிரயாணத்துக்கு ரயிலேறலாம் என்று நினைக்கிறேன். இந்த நாங்களிலே—என்னோடு பிரயாணப்பட்டவர்களாகப் பங்கு கொண்டவர்கள் என் குடும்ப நண்பர்களான ராயவரம் ராம. அ. ராமனாதன் செட்டியார் அவர்களும், அவரது சகோதரர் ப. வ. அழகப்பச் செட்டியார் அவர்களும், தங்கள் தங்கள் குடும்பத்துடன் மொத்தம் பதினொரு பேர்கள் யாத்திரை கிளம்பினோம்.

பழம் பெரும் வள்ளல் குடும்பமான ராயவரம் ப. வ. குடும்பத்தில் பிறந்து மேலும் அந்தக் குடும்பத்திற்கு அணிகலனாகத் திகழ்பவர்கள் ராமனாதன் செட்டியாரும், அழகப்ப செட்டியாரும். இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். என்னை உடன் பிறவா சகோதரனாகவே நடத்துபவர்கள். நாங்கள் மூவரும் ஒன்றாகவே படித்து மலேஷியாவில் ஒன்றாகவே வாழ்ந்து இங்கு பல தொழில்களில் பங்காளிகளாக இருக்கிறோம். அவர்கள் இருவரும் நட்பிற்கு இலக்கணம் வகுப்பவர்கள். புத்திக்கூர்மை, சிந்தனை, இரக்கம், விட்டுக் கொடுக்கும் தன்மை, சுறுசுறுப்பு, முகத்தில் எந்த நேரமும் மாறாத மலர்ச் சிரிப்பு—இது ஆண்டவன் அவர்

களுக்கு அளித்த வரப்பிரசாதம். இப்படிப்பட்ட நண்பர்களின் நட்பு மேலும் பலப்பட இந்தப் பயணம் உறுதுணையாக அமைந்தது. கப்பலுக்குக் காப்டன் இருப்பது போல இந்தச் சுற்றுப்பயணத்திற்கு ராமனுதன் செட்டியார் காப்டனுக அிருந்து வழி நடத்திஞர். இந்திரா காந்தி அம்மையாரைக் கடந்த 10 ஆண்டுகளாகப் பாரதப்பிரதமராக ஏற்றுப் பெண்ணுரி மைக்கு இந்தியா வழிகாட்டியிருக்கிறது. அன்பே உரு வான அழகப்ப செட்டியார் 1956ல் திருமணமான அன்றே தன் இல்லத்துக்கு, தன் இல்லத்தரசி மீனுவைப் பிரதமராக்கிப் பெண்ணுரிமை தந்து நகரத்தார் களுக்கே, வழிகாட்டியாக, ஏன் பாரதத்திற்கே வழி காட்டியாகத் திகழ்பவர். ராமாயணத்தில் ராமர் ஒரு கோடு போட, அந்தக் கோட்டைத் தாண்டியதால் சீதை அடைந்த துயரம் நமக்குத் தெரியும். ஆனுல் இங்கு மீனு ஒரு கோடு போட்டால் அந்தக் கோட்டை அழகப்ப செட்டியார் தாண்டமாட்டார். மீனுட்சி என்ருலே நினை விற்கு வருவது மதுரை அங்கயற்கண்ணி. மதுரை யில் மீனுட்சியின் ஆட்சிதானே. நடக்கின்றது. இப்படிப்பட்ட பாசமிக்க நண்பர்கள் குடும்பத்தோடு நானும் எனது மனைவி கமலாவுடன் பிரயாணத்தைத் துவக்கினேன்.

எங்களுக்கு உதவியாளராகப் பிரயாணத்தை இன்பமாக்கித் தந்தவர் பிஎல். டிஎல். அருணுசலம் அவர்கள். காரைக்குடியைச் சேர்ந்தவராஞலும் அவரை நாங்கள் பட்டினத்தார்—காவிரிப்பூம்பட்டினக் கதாநாயகன்—என்றுதான் அழைப்பது வழக்கம். இம் மாதிரிப் பயணத்தில் அவருக்கு முன் அனுபவம் உண்டு. அவரது திறமைக்கு ஒன்றே ஒன்றை மட்டும் கூறிஞலே போதும் என்று நினைக்கிறேன்,

அருணசலம் அவர்கள் எங்கள் பயணத்துக்குக் (சென்னையிலிருந்து) கவர்னர் கோச் ஒன்றையே ஏற்பாடு செய்து விட்டார்கள் என்ருல் பார்த்துக் கொள்ளுங்கள். அந்தக் கோச்சு எவ்வளவு வசதி மிக்கது, சிக்கனமானது, சௌகரியமானது என்பதை அதில் பிரயாணம் செய்து பார்த்தால்தான் உணர முடியும். ஊர்ஊராகத் தங்க விடுதிகளைத் தேடி அலைய வேண்டாம். ஹோட்டல் சாப்பாட்டைச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். வீட்டி லிருப்பது போல வீட்டுச் சாப்பாட்டை வாய்க்கு ருசியாக, சுசியாக, சுத்தமாக உண்டு மகிழலாம். தூக்கம் கெட்டுப் போயிற்று என்று அலுத்துக் கொள்ளவேண்டாம். ஓடும் ரயிலிலும் சுகமான தூக்கம். இத்தனையையும் அளிக்கும்படியாக அமைந்திருந்தது அந்த கவர்னர் கோச்.

நான்கு அறைகள், ஒன்பது படுக்கைகள், ஒரு டைனிங் ஹால், ஒரு சமையலறை, நான்கு பாத் ரூம்கள், இவை தவிர, சமையல்காரர்கள் தங்குவதற்குத் தனியாக த்ரீ டயர் பெட்—இத்தனையும் முதல் வகுப்பு வசதிகளுடன் கூடியது அந்தக் கவர்னர் கோச். ரயில் பிரயாணம் செய்கிருேம் என்ற நினைப்போ, வீட்டை விட்டு வெகு தூரம் போகிருேம் என்ற மலைப்போ இல்லாமல், அவசர காரியமாக அடுத்த ஊருக்குப் போகும் நினைப்பைக் கொடுத்தது வசதிமிக்க அந்தக் கவர்னர் கோச். இப்படியொரு ஏற்பாட்டைச் செய்த தற்காக அருணசலம் செட்டியார் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சமையல் கலையில் வல்லவர்களை நளமகராஜாவுக்கு ஒப்பிடுவார்கள் இல்லையா? சிறந்த சமையலை "நள

பாகம்' என்று பாராட்டுவார்கள். சுற்றுப்பயணத்தில் சுவைமிக்க சமையலுக்கு இரண்டு 'நளர்'களை அமர்த்திக்கொண்டோம். சுப்பையா, சிங்காரம் என்பது அவர்கள் பெயர். அதில் சுப்பையாவுக்கு ஒரு பட்டப் பெயரும் உண்டு. பண்டிதமணி சுப்பையா என்று. தமிழ் நாட்டில் எல்லாருக்கும் தெரிந்த ஒரே பண்டித மணி—கதிரேசன் செட்டியார் அவர்கள்தானே? இந்தப் பண்டிதமணி யார் என்ற சந்தேகம் வருகிறதல்லவா உங்களுக்கு? சுப்பையா சமையலில் புலி. தமிழ்ப்புலி யான பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களிடம் சமையல்காரராக இருந்த காரணத்தினால் பதார்த்த மணியான இவரை எல்லாரும் பண்டிதமணி சுப்பையா என்றே அழைக்கலானார்கள். சுப்பையா பண்டித மணி யானது இப்படித்தான்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து கவர்னர் கோச்சில் கம்பீரமாக மாலை 4–30 மணிக்கு எங்கள் புதுமையான பயணம்—புனிதமான பயணமும் கூட—தொடங்கியது. 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினைந்காம் தேதியை எங்கள் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

ஹைதராபாத்

மறுநாள் காலை ஒன்பது மணி அளவில் ஹைதரா பாத் வந்து சேர்ந்தோம். எங்களை வரவேற்க சௌத் இந்தியா கார்ப்பரேஷன் மானேஜர் வந்திருந்தார். எங்க ளுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்து தந்து ஊர் சுற்றிக் காட்டும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார் அவர்,

பிரிட்டிஷாரின் ஆட்சியில் பாரதம் இருந்தபோது இந்தியாவில் பல சமஸ்தானங்கள் இருந்தன. அப்படித் தனியரசு செய்த சமஸ்தானங்களில் ஹைதராபாத் சமஸ்தானந்தான் மிகப் பெரியது. அதன் மன்னரான நிஜாம் உலகின் பெரும் பணக்காரர்களுள் ஒருவராக விளங்கியவர். ஹைதராபாத், பேரார் ஆகிய இரு சமஸ்தானங்களுக்கும் அதிபதியாக விளங்கியவர் நிஜாம். 83,000 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டிருந்த நிஜாமின் ஹைதாரபாத் சமஸ்தானம், அதெல்லாம் பழங் கதை. ஆனால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம் ஹைதராபாத். அதை மறக்கவோ மறைக்கவோ முடியாதே.

அசோகரின் கல்வெட்டுக்களிலும் ஹைதராபாத் பிரதேசத்தைப்பற்றி (அப்போது அதற்கு வேறு பெயர்)க் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அது அப்போது ஆந்திர மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. 1294 வாக்கில் டெல்லி சுல்தான்களின் ஆட்சியில் அல்லாவுதீன் கில்ஜியினால் ஹைதராபாத் கைப்பற்றப்பட்டது. பாமினி மற்றும் குதப் ஷாஹி வம்சத்தினர் இந் நகரத்தை ஆட்சி செலுத்தினர். மொகலாயர்களின் ஆட்சி காலத்தில் ஔரங்கசீப் தக்காணத்தில் வெற்றிக் கொடி நாட்டியது நமக்கெல்லாம் தெரியும். இப்படி ஆந்திர மன்னர்களுக்குப் பிறகு இப்பிரதேசம் முஸ்லீம் மன்னர்களின் ஆட்சியில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலேயர்களின் ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஹைதராபாத் நிஜாம் தன் சமஸ்தானத்தில் தன் முத்திரை பதித்த நாணயங்களையும் நோட்டுக்களையும் வெளியிட்டவர். தபால் தலைகளும் தம் சமஸ்தானத்துக்குத் தனியே அச்சிட்டுக்

கொண்டவர். இதெல்லாம் தவிர இதற்கு இன்னும் பலமான சரித்திரப் பின்னணி உண்டு.

ஹைதராபாத் நகரம் இந்தியாவிலேயே நான்காவது பெரிய நகரம். 1589ல் கோல்கொண்டா மன்னரான முகமது குலி என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது இந்நகரம். மூசி நதிக்கரையில் அமைந்துள்ள ஹைதராபாத் நகரத்துக்குப் பன்னிரண்டு ஆசார வாசல்கள் இருந்தன. ஆதியில் அவற்றில் பல அழிந்து போனாலும் சில நினைவுச் சின்னங்களாக நிலை பெற்றிருக்கின்றன.

ஹைதராபாத்தின் முக்கியமான கட்டிடம் சார்மினார். சார் என்றால் உருதுவில் நான்கு. மினார் என்றால் கோபுரம். நான்கு கோபுரங்களைக்கொண்ட ஒரு கட்டிடம் —மான்யுமெண்ட். சதுரமான அமைப்புடைய நுழைவாயில் போன்ற கட்டிடம். ஒவ்வொரு பக்கமும் நூறு அடி அகலங்கொண்டது. 190 அடி உயரமுடைய மினார்களைக் கொண்டது. சார்மினார் கட்டிடத்துக்கு அருகிலேயே ஹைதராபாத்தின் பிரதான மசூதியான மெக்கா மசூதி இருக்கிறது. இதன் நுழைவாசல் அவுரங்கசீப்பினால் 1692ல் முடிக்கப்பட்டது. மெக்கா மசூதியின் முற்றத்தில் (கோர்ட் யார்டு) 1803ம் ஆண்டிலிருந்து இறந்து பட்ட நிஜாம் மன்னர்களின் சமாதிகள் இடம் பெற்றுள்ளன.

சார்மினாரின் தெற்கே சாமஹல்லா அரண்மனை உள்ளது. இது மஹாராஜா சந்துலாவினுடையது. அதை அடுத்து நவாப் தேஜ்ஜங் அவர்களின் அரண்மனை. இவை எல்லாம் அற்புதமான கலைப்பொக்கிஷங்களைக் கொண்ட கட்டிடங்கள். அவசியம் காணவேண்டியவையும்கூட,

மூஸி நதியின் தென்கரையில் ஹைகோர்ட் கட்டிடமும் அதற்கு எதிர்க் கரையில் உஸ்மானியா ஜெனரல் ஆஸ்பத்திரியும் உள்ளன. கண்ணுக்கும் விருந்தளிக்கும் கம்பீரமான கட்டிடங்கள்.

ஹைதராபாத் நகரிலிருந்து ஆறு மைல் தொலைவில் அமைந்திருக்கிறது, புகழ் பெற்ற உஸ்மானியா பல்கலைக் கழகம். இதன் பரப்பளவு 1500 ஏக்கராக்கள். இங்கு உருது மொழி கட்டாயப் பாடம்—ஆங்கிலத்துடன்தான் ஏராளமான மாணவர்கள் கல்வி கற்கிறார்கள் இங்கு.

நகரின் தெற்கே ஒரு குன்றின்மீது நிஜாமின் அரண்மனை—பலுக்னுமா பாலஸ்—உள்ளது. பொது மக்கள் போய்ப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லையானாலும் இது ஓர் அற்புதமான கலைக்கூடமாம். சலவைக்கல்லாலான மாடிப்படிகளும், சிலைகளும், லஸ்தர் விளக்குகளும் பிரமிப்பூட்டும் அழகுடையனவாம்.

சலவைக்கல் என்றதும் பிர்லா மந்திரும், வெங்கடாசலபதி கோயிலும் நினைவுக்கு வருகின்றன. பூராவும் சலவைக் கல்லினால் கட்டப்பட்டுச் சுத்தமாக அழகாக இருக்கிறது. இக்கோயிலும் ஒரு குன்றின் மீதே இருக்கிறது. இரவு மின் விளக்குகளின் ஒளியில் கோயில் ஒளி வெள்ளத்தில் குளித்து ஜ்வலிக்கிறது.

பாரதத்திலேயே புகழ் பெற்ற மிகப்பெரிய பொருட்காட்சிசாலையான ஜலார்ஜங் மியூஸியம் இருப்பது ஹைதராபாத்தில்தானே? நிஜாம் தம் வாழ்வின் குறிக்கோளாக உலகின் பல பகுதிகளிலிருந்தும் சேகரித்துக் குவித்திருக்கும் அருங்கலைப் பொருள்கள் பார்த்து மாளாதவை. பல நாள் பார்த்தாலும் பரிபூரணமாகக்

காண முடியாத கலைக்கூடம் இது. ஹைதராபாத் போகிறவர்கள் ஜலார்ஜங் மியூசியம் பார்க்காமல், அங்கு இருக்கும் அதிசய கடிகாரங்களைக் காணாமல், அற்புதச் சிலைகளைக் கண்டு சொக்கி மகிழாமல் திரும்ப மாட்டார்கள். நாங்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

ஹைதராபாத்தில் மற்றும் பூங்காக்கள், மிருகக் காட்சிசாலை ஆகியவற்றையும் கடைவீதியையும், சுற்றிப் பார்த்துவிட்டுச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோல்கொண்டாக் கோட்டைக்குப் பயண மானோம். நாவல்களிலும் திரைப்படங்களிலும் மட்டுமே படித்து, பார்த்த இந்தக் கோட்டையை நேரில் காணப் போகிறோம் என்றபோது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

குதப் ஷாஹி வமிசத்து மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது கோல் கொண்டா. ஹைதராபாத்துக்கு மேற்கே ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது இப் புராதனக் கோட்டை—நகரம். பஸ் வசதி உண்டு.

இங்கு ஒரு காலத்தில் வைரங்கள் ஏராளமாகக் கிடைத்ததாம். உலகப் புகழ் பெற்ற கோஹினூர் வைரம் கிடைத்தது கோல்கொண்டாப் பகுதியில் தானே? அதாவது கிருஷ்ணா ஜில்லாவிலுள்ள கொல்லூர் என்ற இடத்தில். கோல் கொண்டாவில் வைரங்கள் கிடைக்காவிட்டாலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் நிறையக் கிடைத்திருக்கிறது. ஆகவே வைரங்களை வெட்டி, சாணை பிடித்துப் பட்டை தீட்டுவோர் இங்கு நிறையப்பேர் வாழ்ந்தார்களாம்.

கோல்கொண்டா கோட்டை எதிரிகளால் வெல்ல முடியாதபடி கட்டப்பட்ட அற்புதமான அமைப்பு.

மூன்று மைல் சுற்றளவில் இக்கோட்டையைச் சுற்றி மதில் சுவர் எழும்பியுள்ளது. இதன் கற்களில் பல ஒரு டன்னுக்கும் மேலான எடையுடையவை. கோட்டைக்குள்—மலைமீது—குடிநீர் வசதி குழாய் மூலம்—நவீனமைப் லைன் அல்ல—அந்தக் காலத்திலேயே எல்லா இடங்களுக்கும் ஏற்பாடு செய்திருப்பது அதிசயம். தர்பார் ஹாலுக்கு அருகே ஒரு இடம். அங்கு நின்ருல் குளுமையான காற்று இனிமையாக வீசுகிறது. எங்கிருந்து வருகிறது என்று சொல்ல முடியவில்லை. அப்படி அமைத்திருக்கிருர்கள் கட்டிடக் கலை வல்லுநர்கள். கோட்டைக்குக் கீழே ஓர் இடத்தில் நின்று கொண்டு கைதட்டினுல் மலைமீதுள்ள கோட்டையில் துல்லியமாக அந்த ஒலி கேட்கிறது. எதிரிகளின் வரவை எச்சரிக்கை செய்யும் அற்புதமான சாதனை.

பர்தா அணிந்த கோஷா ஸ்திரிகளும் ராணிகளும் உல்லாசமாக ஓடி விளையாடிய அரண்மனைகளையும், குளிக்குமிடங்களையும், தர்பார் மண்டபங்களையும், ஆலோசனைக் கூடங்களையும் கண்டு வியந்து மகிழ்ந்தோம். கால்வலி எடுத்தாலும் மனத்துக்கு நிறைவாக இருந்தது.

பலம் பொருந்திய இக்கோட்டையைப் பலசாலியும் தந்திரசாலியுமான ஔரங்கசீப்பினுலேகூடக் (1687ல்) கைப்பற்ற முடியவில்லை. முடிவில் ஒரு மந்திரி துரோகியாக மாறி லஞ்சம் பெற்றுக் காட்டிக் கொடுத்துக் கோட்டைக் கதவைத் திறந்து விட்டதினுல் வெற்றி கண்டார் மொகல் மன்னர்.

பாஞ்சாரா வாசல் ஐம்பதடி உயரமுடையது. கருங்கல்லினுல் கட்டப்பட்டது. இதன் இரு வாசல்களின் கதவுகளும் உறுதியான தேக்குமரத்தினுல்

ஆனவை. இக்கதவுகளில் இரும்பு ஈட்டிகள் ஏராள மாகப் பதிக்கப்பட்டிருக்கின்றன. போர்க் காலத்தில் முற்றுகையின்போது யானைகளைக் கொண்டு முட்டிக் கோட்டைக் கதவுகளைத் தகர்ப்பது வழக்கம். இப்படி யானைகள் தங்கள் தலையால் கதவை முட்டிப் பிளக்கா திருக்கவே கதவுகளில் ஈட்டிகளைப் பதித்திருக்கிறார்கள்.

கோட்டைக்குள் ஒரு ஜம்மா மசூதியும் இருக்கிறது. சிறிய கட்டிடம். கோட்டைக்கு வடக்கே அரை மைல் தொலைவில் இருநூறு ஆண்டுகள் வரை கோல் கொண்டாவை அரசாண்ட குதப்ஷாஹி அரசர்களின் கல்லறைகள் இருக்கின்றன. இவற்றில் முகமது குலி யின் மசூதி அழகிய கட்டிடம். முஸ்லிம்கள் அதிக முள்ள ஹைதராபாத்தில் வளையல்களும், முத்துக்களைக் கொண்டு செய்த கைவினைப் பொருள்களும் நிறையக் கிடைக்கின்றன. ஹைதராபாத்தையும் கோல்கொண் டாவையும் பார்த்துக் கொண்டு ஷோலாப்பூருக்குக் கிளம்பினோம்.

ஷோலாப்பூர்

நெசவுத் தொழிலுக்குப் புகழ்பெற்ற இடமாயிற்றே இது. ஷோலாப்பூர் புடவைகள் பிரசித்தம். இங்கு சித்தேஸ்வரர் கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்தோம். நம் ஊர்க் கோயிலைப் போலில்லாவிட் டாலும் அமைதியான இடம். கோயிலின் இருபக்கமும் குளம் இருக்கிறது. இக்குளங்களில் விதவிதமான வண்ணங்களில் ஏராளமான மீன்கள் காணப்படு கின்றன. இவைகளைக் கண்டு மகிழவேண்டுமானால் கொஞ்சம் பொறியை அள்ளி நீரில் வீசினால் போதும்; ஆயிரக்கணக்கில் வண்ண வண்ண மீன்கள் வந்து

கூடுவது கண் கொள்ளாக் காட்சி. சபரிமலைக்குச் செல்லும் வழியில், குளத்துப்புழை என்னுமிடத்திலுள்ள குளத்திலும் இப்படி மீன்கள் கூட்டம் வருவதுண்டு. ஆனாலும் இவ்வளவு வண்ணங்களில் இத்தனை அழகிய காட்சியை அங்குக் காணமுடியாது.

கோயிலின் மூலஸ்தானத்து மூர்த்திக்குச் சில போது அலங்காரம் செய்வது அதிசயமாகவே இருக்கிறது. மனித முகம் போலவே மேக்கப் போட்டு அலங்காரம் செய்கிறார்கள்.

பண்டரிபுரம

'ஜே ஜே விட்டல்...ஹரிஹரி விட்டல்'— என்ற பஜனை கோஷ்டியின் குரல் காதில் விழுந்தால் உடனே பண்டரிநாதனும் பக்த விஜயத்துக் கதைகளும் நினைவுக்கு வரவேண்டுமே. அவ்வளவுக்குப் புகழ் பெற்றதாயிற்றே பண்டரிபுரம். வடநாட்டவரின் முக்கியமான வைணவத் தலம் இது. ஷோலாப்பூரிலிருந்து நாற்பது மைல் தொலைவில் தானிருக்கிறது இப் புண்ணிய பூமி. சந்திரபாஹா நதிக்கரையில் இருக்கும் இத்தலத்துக்கு ஒரு 'வான்' ஏற்பாடு செய்து கொண்டு எல்லோரும் போனோம். புண்ணிய தீர்த்தமான சந்திர பாஹா நதியில் நீராடிவிட்டுப் பண்டரிநாதர் கோயிலுக்குக் கிளம்பினோம். வழியில் பாண்டுரங்க பக்தர்களின் சமாதிக் கோயில்கள் பல இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது பக்த துகாராமின் கோயில். கோயிலுக்குப் போவோர் எல்லாம் கோஷ்டி கோஷ்டியாகப் பஜனை செய்து கொண்டே ஆடிப் பாடியபடி போவது பக்திப் பரவசமாக்கும் காட்சிகள். பகவான்

பாண்டுரங்கர் அழகாகக் காட்சியளிக்கிறார். பக்தர்கள் அவரது பாதகமலங்களில் தங்கள் சிரத்தை அழுத்தி வைத்து அவரது கால்களைப் பற்றிக் கொண்டு வணங்கலாம். அத்தனைக்கு ஆண்டவன் அங்கு பக்தனுக்கு மிக அருகாக வருகிறார். பண்டரிபுரம் தெருக்களிலெல்லாம் பஜனை கோஷங்கள் தான். நாளெல்லாம் பாட்டும் பஜனையும் பக்திப் பரவசமும்தான். ஆனால் பக்தர்கள் பண்டாக்களிடம் மட்டும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்களுக்குப் பணம் கொடுத்துக் கட்டுப்படியாகாது நம்மால்.

பண்டரிபுரம் போகிறவர்கள், ஓர் ஏழை தன் வாழ் நாளெல்லாம் உழைத்துப் பாடுபட்டுச் சேமித்த பணத்தில் ஆண்டவனுக்கு எழுப்பி இருக்கும் அற்புதமான மாளிகையைக் காணுமலிருக்க மாட்டார்கள். கைக்காடிம்காராஜா கோயில் என்று இதற்குப் பெயர். கைக்காடி என்ருல் என்னவோ ஏதோ என்று குழம்ப வேண்டாம். கையால் இழுக்கப்படும் ரிக்ஷா போன்ற ஒருவகை வண்டி. எளியவனுக்கு எளியவனுகிய எம்பிரான் ஓர் ஏழையின் மூலம் தனக்கு ஒரு கோயிலை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறுன். ரிக்ஷா வாலா ஒருவர் தன் வருமானத்தில் ஒரு பகுதியை ஆண்டவனுக்காக ஒதுக்கி அப்படிச் சேமித்த தொகையிலிருந்து ஒரு சிறிய விக்ரகத்தை உருவாக்கி இருக்கிறார். இது முதல்படி. இதன் பிறகும் தம் வருவாயில் தனது சாப்பாட்டுக்குப் போக மீதியையெல்லாம் ஆண்டவனுக்கே அர்ப்பணமாக உண்டியில் போட்டு வந்திருக்கிறார். தம் பக்தனின் உறுதியிலே உவப்புக்கொண்ட ஆண்டவன் அந்த எழைக்கு ஏராளமான வருவாயைக் கொடுத்துச் சோதித்திருக்கிறார். ஆனாலும் வருவாயின் பெருக்கத்திஞல் ஏழை ரிக்ஷா தொழி

லாளி மனம் மாறிவிடவில்லை. அடுத்தடுத்துப் பல சிலைகளை உருவாக்கிக் கொண்டே இருந்திருக்கிறார். மூன்று மாடிக் கட்டிடத்தையும் நிர்மாணித்து இதில் அந்தச் சிலைகளைக் கொலு போல வைத்துள்ளார். ரிக்ஷா இழுத்துப் பொருள் சேர்க்கும் ஏழையினால் உரு வான இந்தச் சிலைகளோ கலைக் கூடங்களிலும் காண முடியாத வனப்புடையவைகளாக விளங்குகின்றன. மூன்று மாடிகளிலுமுள்ள கடவுள்களின் சிலைகளைக் கண்டு களிக்க மூன்று மணி நேரமாகிறது. கைக்காடி மகாரர்ஜா கோயில் என்று மக்கள் இக்கொலுக் காட்சியை அன்போடு அழைக்கின்றனர்.

சிங்கப்பூரிலே பிரசித்தமாக விளங்கும் டைகர் பாம் கார்டனைப் போலிருக்கிறது இக்கோயில். அதை ஒரு சீனர் தாம் கோடீஸ்வரரான பிறகு அமைத்திருக்கிறார். ஆனால் கைக்காடி ராஜாவோ தாம் குசேலராக இருக்கும் போதே ஆரம்பித்து ஆண்டவனின் கருணையினால் பெரும் செல்வந்தராகி இக் கோயிலை முடித்திருக்கிறார். தம் சகல சொத்துக்களையும் இக்கோயிலுக்கே அர்ப் பணித்து இவர் அக்கோயிலின் ஒரு மூலையில் ஒரு கூரைக் குடிசை போட்டுக்கொண்டு, ஆதி நாட்களில் தன் வாழ்க்கையை எப்படி ஆரம்பித்தாரோ அதே மாதிரி ஒரு துறவி போலப் பற்றற்று வாழ்ந்து வரு கிறார். பழுத்த பழமான தொண்ணூறுக்கும் அதிக மான வயதுடைய அந்த மகானை நேரில் தரிசிக்கும் பாக்கியமும் எங்களுக்குக் கிடைத்தது. ரிக்ஷா (கைக் காடி) இழுத்தே மகாராஜா நிலைக்கு வந்ததினால் இவரைக் 'கைக்காடி மகாராஜா' என்றே எல்லோரும் அழைக்கிறார்கள். கைக்காடி மகாராஜா நிர்மாணித் துள்ள இக்கோயிலில் பூஜைகள் ஆராதனைகள் எதுவும் கிடையாது.

பண்டரிபுரத்திலிருந்து இரவு ஷோலாப்பூருக்கு வந்து அங்கிருந்து ரயிலில் புறப்பட்டு மறுநாள் புனு நகருக்கு வந்து சேர்ந்தோம்.

புனு

புனு போகும் வழியெல்லாம் கண் கொள்ளாக் காட்சிகள்! மேற்குத் தொடர்ச்சி மலையினூடே நாம் பிரயாணம் செய்வதினால் மன்னர் மராட்டிய மாவீரர் சிவாஜியின் வீரப்பிரதாபங்களெல்லாம் நம் நினைவுக்கு வருகின்றன. மலை எலி என்று புகழப்பட்ட, மொகலாயர்களின் கண்களிலே விரலைவிட்டு ஆட்டி வீரப் போர் புரிந்த அந்தக் கதைகளெல்லாம் நம் சிந்தையிலே மிதக்கின்றன.

மகாராஷ்டிர சரித்திர புருஷரான சிவாஜி பிறந்த இடம் சிவனேர். அவர் வளர்ந்தது புனுவில்தான். உலகம் மெச்சும் ஒப்பற்ற வீரனுகத் தம் மகனை ஜிஜாபாய் உருவாக்கியது புனு நகரில் இருந்து கொண்டு தான். அந்நியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த பாரத அன்னைக்கு விடுதலை வாங்கித் தரவும், இந்து தர்மத்தையும் மதத்தையும் காக்கவும் விடாது போரிட்டு முடிவில் வெற்றியும் கண்டு 1574ல் மகாராஜாவாக முடி சூடிக் கொண்டார் சிவாஜி. புனு நகரில் பழங்காலக் கோட்டைகள் இருக்கின்றன. சிவாஜி மகாராஜாவின் அரண்மனை உள்ளது.

இந்தியாவிலுள்ள முக்கியமான ராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் ஒன்று புனுவிற்கு அருகேயுள்ள கிாகி என்னுமிடத்திலுள்ளது. இது தவிர விவசாயப் பல்கலைக் கழகமும், நடிப்புக் கல்லூரியான பிலிம் இன்ஸ்டிடியூட்டும் முக்கியமானவை.

சிவாஜியின் தாத்தாவான மாலோஜி போன்ஸ்லேக்கு அகமது நகர மன்னர் 1599ல் புனு நகரை அன்பளிப் பாக அளித்தார். மாலோஜி அகமது நகர் மன்னரிடம் பணியாற்றியவர். 1750ல் புனு மராட்டிய சாம் ராஜ்யத்தின் தலைநகராகியது. 1817ல் கிர்கியில் நடந்த போரில் புனு நகரம் பிரிட்டிஷாரின் வசமாயிற்று. இதுதான் புனு நகரின் சரித்திரம்.

புனு நகரம் விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. மகாத்மாகாந்தி அடிகளை 21 மாதம் சிறை வைத்திருந்த ஆகாகான் மாளிகை இங்கு தானிருக்கிறது. கஸ்தூரிபாவும், மகாதேவ தேசாயும் மரணமடைந்தது இங்குள்ள ஆகாகான் மாளிகையில் தான். கஸ்தூரிபாயின் புனித உடல் அடக்கம் செய்யப்பட்டிருப்பது இந்த அரண்மனையின் பின் பக்கத்தில்தான். எரவாடா சிறைச்சாலையும் இங்கு தானிருக்கிறது அந்த அடிகளை அடைத்து வைத் திருந்த அந்த அறையைப் போய்ப் பார்த்தபோது கோயிலுக்குச் சென்று வந்த புனித உணர்வு ஏற் பட்டது.

பெங்களூரைப் போன்ற சீதோஷ்ண நிலையை உடையது புனு. மகாராஷ்டிரப் பிரதேசத்துக்கு, புனு மலை வாசஸ்தலம் போன்றது. நிறையக் கல்லூரி களும் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கு நகரின் மையப் பகுதியில் கௌன்சில் ஹால் உள்ளது. இங்கு புகழ் பெற்ற ஆண் பெண்களின் பெரிய பெரிய படங்கள் அழகு செய்கின்றன. ரேஸ் கோர்ஸ், மகாராணி பூங்கா, ஸெயிண்ட் பாட்ரிக் கத்தோலிக்க சர்ச், டெக்கான் காலேஜ் ஆகியவை மற்றும் பார்க்கக் கூடிய இடங்கள்.

புனு நகருக்குள் லாயிட்ஸ் பாலத்தின் வழியாகத் தான் நுழையவேண்டும். சிவாஜி ஹாலின் வாயிலில் குதிரைமீது அமர்ந்த நிலையில் சிவாஜி மகாராஜாவின் வெண்கலச் சிலை கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இதன் நிறை எட்டரை டன்கள். புனு நகரம் பத்தொன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியையும் பேட்டை (பேத்) என்று அழைக்கிறார்கள். புதவார் பேட்டையில் பழைய மராட்டிய அரண்மனைகள் பல இருக்கின்றன. ராஸ்தோப்பேட்டையில் தமிழர்கள் அதிகம் வசிக்கிறார்கள்.

பிரபாத் ஹில் என்பது பார்வதி மலையாகிவிட்டது. ஏனென்றால் அங்கு பார்வதி தேவியின் கோயில் இருக்கிறதினால். புனுவிற்கு அழகும் அருளும் அளிப்பது பார்வதி கோயில்தான். வெள்ளியினாலான சிவபிரானின் தொடையில் தங்கத்தினால் ஆன பார்வதியும் கணேசரும் அமர்ந்திருக்கும் அழகு அற்புதமானது. ஏராளமான நகைகளும், ஆபரணங்களும் கொண்டது இக்கோயில். தீபாவளி சமயத்தில் ஏராளமான விளக்குகளில் (லக்ஷ்தீபம்) இக்கோயில் ஜாஜ்வல்யமாக ஜ்வலிக்குமாம்.

பார்வதி மலையில் தேவி தரிசனம் செய்த பிறகு பஞ்சபாண்டவர்கள் வழிபட்ட பாதாள ஈஸ்வரர் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்தோம். பிறகு கத்தர் சிங் மாதாஜி கோயில், ஜங்கிலிமகாராஜா சமாதி ஆகியவைகளையும் பேஷ்விக்குகளின் கோட்டை, பார்க், மிருகக் காட்சி சாலை எல்லாம் சுற்றிப் பார்த்தோம். சர்க்கரையினால் செய்யப்படும் இனிப்புப் பண்டங்களுக்குப் புகழ் பெற்ற இடம் புனு. அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே சைக்கிள்களை மக்கள் அதிகமாகப்

பயன்படுத்தும் இடங்கள் புனுவும் ஹைதராபாத்தும் தான்.

பித்தளைப் பாத்திரங்களுக்குப் புகழ் பெற்ற ஊர் புனு. ஆகவே புனு வந்ததன் ஞாபகார்த்தமாக தராசுத் தட்டும் பித்தளை வாளியும் வாங்கிக் கொண்டோம். மறு நாள் பம்பாய்க்குக் கிளம்புவதற்கான ஏற்பாடு களைச் செய்ய விடுதிக்கு வந்து சேர்ந்தோம்.

பம்பாய்

முதல் நாள் இரவு புனுவில் ரயிலேறிக் காலையில் பம்பாய் வந்ததினுல், புனு டு பாம்பே—மலைப்பகுதி ரயில் பயணத்தின் அழகை ரசிக்க முடியவில்லை. இரவு வேளையில் எதைப் பார்க்க முடியும்? பம்பாய் ரயில் நிலையத்தில் எங்களை வரவேற்கக் கடியாரப்பட்டி திரு கே. எம். வெங்கடாஜலம் அவர்கள் தம் துணைவி யாருடன் வந்திருந்தார்கள். வெஸ்டர்ன் பேப்பர் லைன் யார்ன் பிரைவேட் லிமிடெட்டின் எக்ஸிகியூடிவ் டைரக்டர். நகரின் நாகரிகப் பகுதியான மலபார் ஹில்ஸில் தனிப்பங்களா. எங்களைத் தம்முடைய மலபார் ஹில்ஸ் பங்களாவிற்கு அழைத்துப் போனுர். விருந்தோம்பலில் தம் தந்தையார் பி. கு. நா. சத்தி செட்டியார் அவர்களையும் மிஞ்சிவிட்டார். பம்பாயில் நண்பர்களால் அன்போடு 'வெங்கி' என்று அழைக்கப் படும் வெங்கடாஜலம் என் பள்ளித் தோழர். இடையில் பல ஆண்டுகள் தொடர்பில்லாமலிருந்தது; சந்திக்கும் வாய்ப்பில்லாமலிருந்தது. இப்போது பம்பாயில் எங்களை இந்தப் புனிதப்பயணம் சேர்த்து வைத்ததில் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

மூன்று நாட்கள் பம்பாயின் எல்லா இடங்களையும் எங்களுடன் கூடவே வந்து சுற்றிக் காட்டியதை எங்களால் மறக்கவே முடியாது.

பம்பாயைச் சுற்றிப் பார்க்கக் கிளம்புமுன் பம்பாயின் சரித்திரப் பின்னணி என் மனத்தில் திரைப்படம் போல ஓடலாயிற்று.

கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த பாரத மக்கள் அந்தக் காலத்தில் கட்டுமரங்களில் ஏறிக் கடல் பிரயாணம் செய்தார்கள். கிழக்குக் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பர்மா, இந்தோசீனு, மலாயா ஆகிய நாட்டுக்குப் போய் வாணிபம் செய்தனர். குடியேறினர், குடும்பம் நடத்தினர். அதே போல மேற்குக் கடற்கரை வாசிகள் அரேபியா, பாரசீகம், ரோமானிய சாம்ராஜ்யங்களுடன் வணிகத் தொடர்பு கொண்டனர். பாரசீகர்களும், அராபியரும் ரோமானியரும் பட்டுப் பட்டாடைகளையும் பொன் நகைகளையும், ரத்தினக்கற்களையும் இந்திய வணிகர்களிடமிருந்து பெற்றுச் சென்றனர். இந்தியப் பொருள்களின் அழகும், அருமையும் அந்நியர்களை இந்த நாட்டிற்கு வந்து இதன் செல்வச் செழிப்பைக் காணும் ஆவலைத் தூண்டியது. இப்படி இங்கு வந்தவர்களில் அராபியர்கள் முதலாவதானார்கள். மேற்குக் கடற்கரையோரத்து நகரங்களுடன் வாணிபம் செய்ய அடிக்கடி கடல் வழியே வந்து போயினர் அராபியர்.

முடிவாக ஐரோப்பியர் பாரதத்துக்குக் கடல் வழி காண முற்பட்டனர். வாஸ்கோடகாமா என்ற போர்த்துகீசிய மாலுமி இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் காண ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு வந்த கதையெல்லாம் நமக்குத் தெரிந்தது தானே? வியாபாரம்

செய்ய வந்த போர்ச்சுகீசியர் கோவாவில் தங்கள் பண்டகசாலையை அமைக்கக் கால் ஊன்றினார்கள். இப்படிக் கால் ஊன்றியவர்கள் வேரூன்றிய கதையும் நாம் படித்திருக்கிறோம், சரித்திரப் புத்தகங்கள் மூலமாக.

1534ல் குஜராத்தை ஆண்ட சுல்தான், போர்த்து கீசியர்களுக்குப் பெரும்பாலும் மீனவர்களே வசித்து வந்த பம்பாயைப் பரிசாக வழங்கினார். அப்போது அதற்கு மும்பாய் என்று பெயர். முண்டகக்கண்ணி, மகமாயி போன்று மராட்டியருக்கு 'மும்பாயி' என்று கடலோரத்து மக்களைக் காக்கும் ஓர் தேவியின் பெயர் அது.

இங்கிலாந்தின் மன்னர், இரண்டாம் சார்லஸ், 1661ல் போர்ச்சிகீசிய மன்னரின் மகளை மணந்து கொண்டார். இளவரசிக்குச் சீதனமாக சார்லஸ் மன்னருக்குப் போர்ச்சுகீசிய மன்னர் பம்பாயை வழங்கினார். பின்னால் சார்லஸ் மன்னர், பம்பாய் நகரை கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் குத்தகைக்குக் கொடுத்தார். வருஷத்துக்குப் பத்துப் பவுன்கள் குத்தகைப் பணம்! விந்தையாக இல்லையா?

வருஷம் பத்துப் பவுன் வாடகை கொடுத்து அனுபவித்து வந்த பம்பாய் நகரம் இன்று மிகப்பெரிய துறைமுகப் பட்டினம். கேட் வே ஆஃப் இந்தியா என்று புகழப்படும் இந்தியாவின் நுழைவாயிலாக விளங்குகிறது. இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாக வந்தவர், வருகிறவர்கள் எல்லாரும் அனேகமாக பம்பாய் துறைமுகத்தில் வந்துதான் இறங்குவார்கள். இந்தியாவிலிருந்து அந்நிய நாட்டுக்குப் போகிறவர்களும் பம்பாய் துறைமுகத்தில் வந்துதான் கப்பலேறு

கிறார்கள். ஆகவேதான் இதற்கு—இந்தியாவின் தலை வாசல் என்று பெயர். கல்கத்தா, சென்னை, கராச்சி, கொச்சி ஆகியவை முக்கிய துறைமுகமானாலும் பம்பாய்க்குத் தனி மவுசு உண்டு.

பம்பாயில் பலதரப்பட்ட இனத்தவரும் வாழு கிறார்கள். இந்து, முஸ்லிம், பார்சிக்காரர், ஆப்கானியர், யூதர்கள், பாரசீகர்கள், பர்மியர் ஐரோப்பியர் எல்லாரை யும் காணலாம்.

நெருப்பை வழிபடும் பார்சிகள் 1670 வாக்கில் பாரசீகத்திலிருந்து பம்பாயில் வந்து குடியேறியவர்கள். தொழில் அதிபர்களான இவர்கள் பெரும் பணக் காரர்கள். பார்சிக்காரர்களில் ஏழைகளும் உண்டு. ஆனால் தம் இனத்தவரான ஏழைகளைக் கஷ்டப்பட விட மாட்டார்கள் பணக்காரப் பார்சிக்காரர்கள். தருமம் செய்வதில் தன்னிகரற்று விளங்குபவர்கள் பார்சிக் காரர்கள். பார்சி இனத்தவர் இருப்பது இங்குதான். வேறு எங்கும் கிடையாது. இறந்தவர்களைப் புதைக் கவோ எரிக்கவோ மாட்டார்கள். ஒருமலைமீது 'டவர்ஸ் ஆஃப் சைலன்ஸ்' என்ற பெயரில் கட்டிடங்களை கட்டி இருக்கிறார்கள். இறப்பவரின் உடல்களை வானம் பார்த்தபடி உள்ள இதற்குள் தள்ளிவிடுவார்கள். மனிதன் இறந்தபிறகு அவன் உடல் பறவைகளுக்கு உணவாய் பயன்படவேண்டும் என்ற கொள்கை யுடையவர் இந்த பார்சிகள். கழுகுகளுக்கு உணவாகிக் காயும் சூரிய வெப்பத்தில் காஷ்டமாகி இயற்கையோடு காய்ந்துவிடும்.

பார்ஸி இனப்பெண்கள் மிக்க அழகுடையவர்கள். அவர்கள் அணியும் ஆடையும் அழகானவை. ஆண் மக்கள் தலையில் ஒருவிதமான குல்லாய் அணிவர்,

சிவந்த உடலும் கம்பீரமான தோற்றமும் கொண்டவர்கள். பார்சி இனத்தவரில் பலர் மிகப் பிரபலமான தொழிலதிபர்கள். முக்கியமானவர் ஜே. என். டாட்டா.

அப்போலோ பாந்தரில் கடற்கரையோரமாக கருங்கல்லினால் ஒரு கட்டிடம்—ஆர்ச்—கம்பீரமாக நிற்கிறது. இதுவே கேட் வே ஆஃப் இந்தியா. கடல்நீரைத் தொட்டுப் பல படிகள் உண்டு. அந்தக் காலத்தில் வி. ஐ. பி. எனப்படும் ராஜாக்கள், வைசிராய்கள், கவர்னர்கள் எல்லாம் இந்த இடத்தில் வந்துதான் கரையேறுவார்களாம். 1911–ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், மேரி ராணியும் இங்குதான் முதன் முதலில் கப்பலில் வந்து இறங்கினார்களாம்—பீரங்கிகள் கர்ஜிக்க, கூடிஇருந்த கூட்டத்தினர் கரகோஷம் எழுப்ப அதை நினைவு படுத்தவே எழுப்பப்பட்டது இந்தக் கல்லாலான வளைவு—ஆர்ச்.

இந்த நுழைவாயிலுக்கு அருகிலேயே உள்ளது புகழ்பெற்ற தாஜ்மகால் ஹோட்டல். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பாரதம் வரும் அயல் நாட்டினர் தங்கி மகிழக்கூடிய ஹோட்டல் இது

எங்களை இரண்டு கார்களில் அழைத்துப் போய் முக்கியமான இடங்களையெல்லாம் காட்டினார் நண்பர். இது தவிர டூரிஸ்ட் பஸ்ஸிலும் சென்று பம்பாய் நகரைச் சுற்றிப் பார்த்தோம்.

பம்பாய் நகரத் தெருக்களில் பல்வேறு இனத்து மக்களையும் காணலாம். விதவிதமான ஆடையணிகள், மொழிகள், நாகரிகங்கள் எல்லாம் காணக் கண் கொள்ளாக் காட்சி. மனிதர்கள் யந்திரங்களைப் போல சுறு சுறுப்பாகச் சதா இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். செல்வம் கொழிக்கும் நகரம் பம்பாய், மகாலக்ஷ்மி

கோயில் கொண்டிருக்கிறாள். ஆகவே அவள் அருள் பூரணமாக இருக்கிறது. மகாலக்ஷ்மி கோயிலில் சதா கூட்டம்தான். கோயில் என்பது தென்னகத்தைப் போலிருக்காது—ஏதோ ஒரு பங்களாவிற்குப் போய் (மாடிவீடு) வருவதுபோல் தானிருக்கிறது. சுவாமி தரிசனத்துக்கு 'க்யூ' முறை கிடையாது. ஒரே கூட்டம். நிம்மதியாகத் தரிசனம் செய்ய முடியாது. பனஸ் வாடியிலுள்ள பெருமாள் கோயில்தான் தென்னாட்டுக் கோயிலைப் போலிருக்கிறது. ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த பட்டர்தான் இங்கு குருக்களாகப் பூசை செய்கிறார்.

பம்பாயின் துறைமுகம் பல தீவுகளால் ஆனது. இவற்றில் மிகவும் பிரபலமானது எலி:பெண்டா தீவு. இங்குதான் புகழ்பெற்ற எலி:பெண்டா குகைக்கோயில்கள் உள்ளன. மோட்டார்ப்படகில் ஒரு மணிநேரம் பிரயாணத்தில் எலி:பெண்டா தீவை அடையலாம். இங்குள்ள குகைக் கோயில்கள் மிகவும் புராதனமானவை. உறுதியான பாறைகளைக் குகைக் கோயில்களாகக் குடைந்திருக்கிறார்கள். எட்டாவது நூற்றாண்டில் குடையப்பட்ட குகைக் கோயில்களாகும் இவை. இங்குள்ள சிவபிரானின் கம்பீரமான முகம் அற்புதமான கலைக் கருவூலம். கடல்மட்டத்திலிருந்து 250 அடி உயரத்தில் இம்மலைகள் உள்ளன. இக்கோயில்களை அடைய வரிசையாகப் படிகள் உண்டு. படிகளைக் கடந்து மேலே ஏறும்போது மூச்சு வாங்கும். ஆனால் அந்த சிரமம் மேலே ஏறியதும் காணும் காட்சியில் கரைந்துவிடும். விசாலமான கூடங்களும் தூண்களும் கண்கவர் சிலைகளும் எலி:பெண்டாக் குகையின் விசேஷங்கள். பம்பாய் நகரில் கலகலப்பையும் நெரிசலையும் துறந்து இங்கு வருபவர்களுக்கு அமைதியும் ஆனந்தமும் ஆரோக்கியமும் கிட்டும்.

பம்பாயில் பல அற்புதமான கட்டிடங்கள் உள்ளன. இந்தியக் கட்டிடக் கலையின் உன்னதமான நிலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவை. வேல்ஸ் இளவரசரின் பெயரால் உள்ள பொருட்காட்சி சாலை—பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் மியூசியம், முனிசிபல் பில்டிங், ஜெனரல் போஸ்டாபிஸ், ரயில்வே காரியாலயக் கட்டிடங்கள் ஆகியவை அவசியம் பார்க்க வேண்டியவை.

சென்ட்ரல் ரயில்வே நிலையம் கடற்கரைக்கு அருகாமையில் உள்ளது. பம்பாயிலுள்ள அற்புதமான கட்டிடங்களுள் ஒன்று விக்டோரியா டெர்மினஸ்ஸில் உள்ளது. இங்குதான் ரயில்வே நிர்வாக அலுவலகங்கள் உள்ளன. விக்டோரியா டெர்மினஸுக்கு அருகே க்ராஃபோர்டு மார்க்கெட் உள்ளது. இங்கு கிடைக்காத பழ வகைகள், காய்கறிகள், பூக்கள் கிடையாது.

பம்பாயில் வாழ்பவர்கள் சென்னை வாசிகளைப் போலவே பாக்கியசாலிகள். நீண்ட கடற்கரை உண்டு—காலாற நடந்து செல்லும் தூரத்தில். பம்பாய்த் தீவின் தென் கோடி முனையில்தான் கொலாபா இருக்கிறது—கடலுக்குள் துருத்திக் கொண்டு. ராணுவ முகாம் இங்கு முக்கியமானாலும் சாதாரண மக்களும் வசிக்கிறார்கள். கொலாபாவின் தெற்குப்பகுதியில் இருப்பது ப்ராங்க்ஸ் ரீஃப்—இங்குதான் லைட் ஹவுஸ் இருக்கிறது. இங்கு உள்ள லைட் ஹவுஸின் உயரம் 160 அடிகள் கடலில் பதினெட்டு மைல்கள் வரை இதன் வெளிச்சம் தெரியும். கொலாபாவின் வடகிழக்குப் பகுதிக்கு பேக்பே என்று பெயர். ஜனத்தொகைப் பெருக்கத்துக்கேற்ப கடலிலிருந்து நிலத்தைத் தூர்த்துக் குடி ஏற்றத்துக்கு ஏற்பச் செப்பனிடப்பட்டுள்ள பகுதிதான் பேக்பே (Back Bay). ஒரு காலத்தில் கடலாக இருந்த பகுதிகளான இங்கு இன்று கட்டிடங்களாக இருக்கின்றன,

பம்பாயின் முக்கிய பகுதியான மலபார் ஹில் பார்க்காவிட்டால் பம்பாயைப் பார்த்ததாக ஆகாதே. பெரிய பெரிய பங்களாக்களும் கவர்னர் மாளிகையும் இங்குதானிருக்கின்றன. பார்சி இனத்தாரின் மயான பூமியான 'டவர் ஆஃப் ஸைலன்ஸ்' இங்குதானிருக்கிறது. செல்வந்தர்கள் வசிக்கும் பகுதி இந்த மலபார் ஹில்.

பம்பாய் துணி ஆலைகளுக்குப் புகழ் பெற்றதாயிற்றே! ஏராளமான மில்கள் இருக்கின்றன. புகழ் பெற்றதோர் மில்லைப் போய்ப் பார்த்தோம். பேல் பேலாகத் துணிகள் லாரிகளில் ஏற்றப்படுவதற்குமுன் அவை எப்படியெல்லாம் யந்திரங்களில் புகுந்து மாற்றம் பெறுகின்றன என்பது மாயாஜாலம் போலிருக்கிறது. காண்பதற்குப் பஞ்சாக உள்ளே ஓரிடத்தில் நுழைந்து பளபளப்பும் வழவழப்பு மிக்க துணியாக மறுமுனையில் வரும் விந்தையை நேரில் கண்டுதான் களிக்கமுடியும். எத்தனை யந்திரங்கள், எவ்வளவு நுணுக்கமான வேலைப்பாடுகள்!

பம்பாயில் நாங்கள் பார்த்த—மற்றவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடங்கள், யுனிவர்ஸிடி ஹால், மிண்ட் ஹைகோர்ட், துறைமுகம் ஆகியவை. ஆரே பால் பண்ணை அவசியம் பார்க்க வேண்டிய இடம்.

பம்பாய் நகரைவிட சுற்றுவட்டாரப் பகுதிகள் குளுமையாகவும் ஆரோக்கியமாகவுமிருக்கின்றன. இவற்றில் பிரசித்தமானது பாண்ட்ரா. பம்பாயிலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ளது இப்பகுதி. இங்கு கோவாக்காரர்கள் அதிகம். செல்வந்தர்களான இந்துக்கள், முகமதியர், பார்சிகள், ஐரோப்பியார் எல்லாம் கடற்கரையை ஒட்டி அழகான பங்களாக்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஜனசந்தடி மிக்க பம்பாய் நகர் கசமுசாவிலிருந்துவிடுபட்டு குளிர்ந்த காற்றும், அமைதி

யான சூழலும் அனுபவிக்க பாண்ட்ரா போகவேண்டும். கடல் அலைகள் கரையில் வந்து மோதி அழியும் இனிய ஓசையைக் கேட்டு மகிழலாம். காற்றில் சண்பக மலரின் மணம் கலந்து வந்து மகிழ்விக்கும்.

பாண்ட்ராவிலிருந்து மூன்ருவது மைலில் இன்னுமொரு அழகான இடமிருக்கிறது. அதுதான் ஜுஹு கடற்கரை. கடல் குளியலைக் களிப்புடன் அனுபவிக்கும் கூட்டம் இங்கு அதிகம். பொழுது போக்குக்கு ஏற்ற இடம். வாடகைக் குதிரைகள் கிடைக்கும் சவாரிசெய்ய. இந்த வாடகைக் குதிரைகளில் ஏறிக்கொண்டு ஜுஹு கடற்கரையில் சுற்றலாம். இப்படிக் குதிரைச் சவாரி செய்ய ஆசைப்பட்டார் என் நண்பர் திரு. பவ. அழகப்ப செட்டியார். அவருக்குக் குதிரை சவாரி செய்து பழக்கமுண்டு. அவர் குதிரை சவாரி செய்ததை அவரது திருமணத்தின்போது மாப்பிள்ளைக் கோலத்தில் கண்டதுதான். அப்போது அதைப் புகைப்படமெடுக்கவில்லை. ஆகவே அந்தக் குறையைத் தீர்த்துக் கொள்ள இப்போது படமெடுக்கக் காமிராவுடன் தயாரானேன். ஆனுல் என்ன துரதிர்ஷ்டம். காமிராவைக் கண்டு குதிரை மிரள, குதிரையைக் கண்ட நான் அரள— இனிய நண்பர் அழகப்ப செட்டியார் குதிரையின் லகானை இழுத்துப் பிடிக்க குதிரை நாட்டியமாடத் தொடங்கிவிட்டது! ஒரு வழியாகக் குதிரையை அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பினேம்.

விலை கூடுதலானுலும் எல்லாப் பொருள்களும் பம்பாய்க் கடை வீதிகளில் கிடைக்கின்றன. பணத்தைப் பற்றிக் கவலைப்படாத மக்கள் பம்பாய் வாசிகள். அவர்களுக்கு நேரம்தான் முக்கியம். நம்பிக்கையும் நாணயமும் பேணப்படுகின்றன. டாக்ஸிக்காரர்கள்

ஏமாற்றுவதில்லை. கார்களின் வேகம் நமக்குப் பீதியைக் கொடுக்கும்படியாக இருக்கிறது.

நாசிக்—பஞ்சவடி

இராமாயணத்துக்கும் பாரதத்துக்கும் தொடர்புடைய இரண்டு இடங்களைக் காண்பதற்காகப் பம்பாயிலிருந்து இரவு பயணமானோம். மறுநாள் காலை ஏழு மணிக்கு நாசிக் ரோடு என்ற இடத்துக்கு வந்தோம். நாசி என்றால் மூக்கு என்று உங்களுக்கெல்லாம் தெரியும். ராமாயணத்தில் மூக்கறுபட்டவள் சூர்ப்பணகை. இவளது மூக்கை, இளைய பெருமாளாகிய இலக்குமணன் அரிந்தது இந்த இடத்தில்தானும். அதனால் தான் இதற்கு நாசிக் என்று பெயராம். இங்கிருந்து நான்கு மைல் தொலைவில் பஞ்சவடி என்ற இடம் இருக்கிறது. பஞ்ச பாண்டவார் வனவாசத்தின்போர் து தங்கிய ஐந்து குகைகள் இங்கு இருக்கின்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தாரின் விடுதி ஒன்று இங்குள்ளது. எங்கள் வரவை அறிந்த விடுதியின் ஏஜண்ட் அழகப்ப செட்டியார் அவர்கள் ரயில் நிலையத்திலேயே எங்களை வரவேற்க வந்திருந்தார்கள். நாசிக் ரோடு ரயில் நிலையத்திலிருந்து ஏழு கல் தொலைவிலிருக்கிறது நகர விடுதி. ஆகவே நாங்கள் எல்லோரும் டாக்ஸியில் சென்றோம். விடுதிக்கு அருகிலேயே கோதாவாரி நதி இருக்கிறது. அந்தப் புண்ணிய நதியில் நீராடினோம். விடுதியிலேயே வழிபாட்டுக்கு விநாயகர், முருகப் பெருமான் ஆகியோருக்குக் கோயில் இருக்கிறது. யானை முகனையும் வேல் முருகனையும் தரிசனம் செய்து கொண்டோம். விடுதி ஏஜண்ட் திரு. அழகப்ப செட்டியார் அவர்கள் முருகப்பெருமானுக்குத்

தமிழிலேயே அர்ச்சனை செய்த அந்தக் கம்பீரமான அழகு எங்கள் உள்ளத்தைத் தொட்டது.

விடுதியிலிருந்து இரண்டு டாக்ஸிகளில் நாசிக் பஞ்சவடியிலுள்ள புராண முக்கியத்துவம் மிக்க புனித மான இடங்களையும் கோயில்களையும் காணப் புறப்பட் டோம். ஆதிகோதாவரி அம்மன் கோயில், கபிலேஸ் வரர், ராமர் கோயில்களைப் பார்த்துக்கொண்டு சீதா தேவியின் குகைக்கு வந்தோம். ராமாயணத் தொடர் புடைய இடங்களெல்லாம் இங்குள்ளன. பொய் மானாக வந்து மாரீசன் விளையாடிய இடம், போலிச் சந்நியாசி யாக வந்து சீதையிடம் ராவணன் பிச்சை ஏற்ற இடம், சூர்ப்பணகை மூக்கறுபட்ட இடம் என்று ஒவ்வொன்று கக் காட்டுகிறார்கள். பக்தியும் நம்பிக்கையும் உள்ளவர் களுக்குப் பரவசமூட்டும் இடங்கள். கபிலை நதியும் கோதாவரி நதியும் சங்கமமாகும் இடம் கண் கொள்ளாக் காட்சி. அந்தப் பிராந்தியம் முழுதுமே இயற்கை அழகு கொஞ்சும் பகுதிகள். அங்கிருந்து கிளம்ப மனமே வரவில்லை.

இந்திய அரசு ரூபாய் நோட்டுக்களை அச்சிடுவது இங்குதான். இங்கிருந்து பதினெட்டாவது மைலில் தான் கோதாவரி புண்ணிய நதி உற்பத்தியாகிறது என்று கூறினார்கள் நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் காணக் கொடுத்து வைத்திருக்கவேண்டும். ஆகவே திரியம்பகம் என்ற அந்த ஊருக்குச் சென்றோம். நதியின் உற்பத்தி ஸ்தானத்தை அடைய 700 படிகள் ஏறிப் போகவேண்டும் என்றார்கள். மலை சூழ்ந்த கானகம். நாங்கள் மலை ஏறக் கலங்கவில்லை. மனதில் உறுதியும் உள்ளத்தில் உற்சாகமும் இருக்குமானல் எதைத்தான் சாதிக்க முடியாது?

மலைமீது ஒரு நந்தியின் வாயிலிருந்து கோதாவரி நதி நீர் ஊற்றாக விழுந்து உற்பத்தியாகிறது. இதை எழுத்தில் படிக்கும்போது உங்களுக்கு எவ்வித உணர்வும் ஏற்படாது. நேரில் பார்த்தால்தான் உடலில் புல்லரிப்பு ஏற்படுவதை உணரலாம். உற்பத்திப் பகுதியில் ஆடையில்லாத சாமியார்கள் பலரைப் பார்க்க நேர்ந்தது. மலையடிவாரத்தில் கோதாவரி நதி நீர் தேங்கிய குளமும் தீர்த்தமும் இருக்கின்றன. பாரதத்திலுள்ள பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களுள் ஒன்று இங்கு இருக்கிறது.

நாசிக் பஞ்சவடியில் பார்க்க வேண்டிய இடங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு ரயிலுக்குக் கிளம்பும் சமயத்தில் அவ்வூரிலுள்ள கோடீஸ்வரர் ஒருவரின் அன்பு அழைப்பு எங்கள் பிரயாணத்துக்குத் தடை விதித்து விட்டது. கேமல் பீடி அதிபரின் மானேஜர் எங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார். விசாரித்தபோது அவரது முதலாளி எங்களுக்கு விருந்து கொடுத்து உபசரிப்பதற்காகக் காத்துக் கொண்டிருப்பதாகவும் எங்களையெல்லாம் கையோடு கூட்டிவரக் கார்களுடன் தன்னை அனுப்பி இருப்பதாகவும் கூறினார் அந்த ஏஜண்டு அன்பர். எங்களுக்கு வியப்பான வியப்பு! பம்பாயில் திருவெங்கடாசலத்தின் நண்பர் குழாமில் ஒருவராக இருந்து எங்களுக்குக் கார் முதலிய பல வசதிகளும் செய்து கொடுத்து உதவியவர் இந்த கேமல் பீடி அதிபர். அதற்காகவே நாங்கள் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருந்தோம்—அது போதாதென்று தம் சொந்த ஊரில் நாசிக்கில்—எங்களுக்கு ஒரு பெரிய வரவேற்பும் விருந்தும் கொடுக்க முன்வந்திருப்பதைக் கண்டு அவரது விசாலமான இதயத்தையும் பண்பையும் பெருந்தன்மையையும் எண்ணி எண்ணிப் புளகித

மடைந்தோம். அந்த அன்பு அழைப்பைத் தட்ட முடியுமா?

கேமல் பீடி அதிபரும் அவரது சகோதரர்களும் தங்கள் மாளிகையின் வாயிலிலேயே எங்களை எதிர் பார்த்து வரவேற்கக் காத்திருந்ததைப் பார்த்து எங்க ளுக்குச் சங்கடமாக இருந்தது. விருந்தோம்பலில் தான் எவ்வளவு விருப்பம், அடக்கம், அன்பு! அன்று இரவு எங்கள் ரயில் கிளம்பும்வரை உடன் வந்திருந்து வழியனுப்பி வைத்தார்கள். மறுநாள் காலை ஔரங்கா பாத் வந்து சேர்ந்தோம்.

ஔரங்காபாத்

சரித்திர முக்கியத்துவமும், புகழும் பெற்ற நகரம் ஔரங்காபாத். ஔரங்கசீப்பின் நினைவாக இந்நகருக்கு இப்பெயரிடப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். இதற்கு வேறு பெயர் இருக்கலாம். இந்நகரில் இந்து மன்னரின் மிகப் பெரிய கோட்டையொன்று உள்ளது. பிறகு வந்த கில்ஜி மன்னர்களும் தக்காணத்தை ஆண்ட சுல்தான்களும் கட்டிய கோட்டைகளும் உள்ளன. தக்காணம் முஸ்லீம்களின் ஆட்சிக்குட் பட்டிருந்தபோது ஔரங்காபாத் நகரமே தலைநகராக விளங்கியது. நிஜாமின் சமஸ்தான ஆட்சியின்போது இந்நகரம் செல்வச் செழிப்புடன் விளங்கியது. கோதுமை, பருத்தி வியாபாரக் கேந்திரமாக விளங் கியது. ஔரங்காபாத்திலும் அதன் சுற்றுவட்டாரத் திலும் காண்பதற்குச் சுவையான இடங்கள் பல இருக் கின்றன.

நகரின் வடகிழக்குப் பகுதியில் பேகம் ராபியாவின் சமாதி இருக்கிறது. இவர் மொகல் மன்னர் அவுரங்க

சீப்பின் துணைவியார். தம் தாயாரின் சமாதியை அவுரங்கசீப்பின் மகன், தன் தாத்தா தம் மனைவியான மும்தாஜுக்கு ஆக்ராவில் எழுப்பிய தாஜ்மகாலைப் போலவே கட்டவேண்டுமென்று அதே மாதிரி இதைக் கட்டி இருக்கிறார். ராஜபுதனத்திலிருந்து சலவைக் கற்களைக் கொண்டுவரச் செய்து முழுதும் சலவைக் கற்களாலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது இது. டாவர் னியர் என்ற அயல்நாட்டு யாத்திரிகன் தம் புத்தகத்தில் அவுரங்காபாத்திலுள்ள பேகம் ராபியாவின் சமாதியைப் பற்றிய குறிப்பில்—நான் அவுரங்காபாத் போகும்போது வழியில் சலவைக்கற்கள் ஏற்றப்பட்ட முன்னூறு வண்டிகளைச் சந்தித்தேன். அவற்றில் மிகச் சிறிய வண்டியை பன்னிரண்டு எருதுகள் இழுத்துச் சென்றன. இப்படி எழுதி இருக்கிறார். அப்படியானால் இங்கு டூப்ளி கேட் தாஜ்மகாலைக் கட்ட எவ்வளவு பொருள் செலவாகி இருக்குமென்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

இதன் ஆசார வாசல் கதவு பித்தளைத் தகடு கொண்டு மூடப்பட்டிருக்கிறது. கதவின் ஓரங்களில்—பித்தளை கவசத்தில—எழுத்துக்கள் பொறிக்கப்பட் பட்டுள்ளன. இவ்வெழுத்துக்களின் அருகே ஒரு பறவை யின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் வாசி களிடம் "நாங்கள் பேகம் ராபியாவின் சமாதியைப் பார்த்து விட்டோம்" என்று கூறினீர்களானால் அவர் கள் உடனே உங்களை ஒரு கேள்வி கேட்பார்கள். 'கதவில் ஒரு அழகான பறவையின் உருவம் பொறிக் கப்பட்டிருக்கிறதே, அதைப் பார்த்தீர்களா?' என்று. நீங்கள் 'இல்லையே' என்றுதான் கூறுவீர்கள். உடனே அவர்கள் நீங்கள் சமாதியைக் காணவே இல்லை என்று மடக்குவார்கள். இப்படியொரு பழக்கம் உண்டு.

கல்லறையைக் காணப் போகுமுன் நாம் அழ கான நந்தவனத்தைக் கடந்துதான் செல்லவேண்டும். தாஜ்மகாலை அணுகுமுன் எப்படி பூந்தோட்டம் குறுக் கிடுகிறதோ அதே போல. பேகம் ராபியாவின் கல்ல றைக்கு அருகாமையிலேயே பாபா ஷா முஸா..்பாரின் சமாதி இருக்கிறது. சேஸ்தி குடும்பத்தினரும், அவுரங்க சீப்பின் ஆத்மீக ஆலோசகருமாவார் இந்த பாபா. இதை பான் சக்கி என்றழைக்கிறார்கள். முஸ்லிம் சாதுவான இவரது அழகிய சலவைக் கல்லாலான கல்லறையைச் சுற்றி ரம்யமான பூந்தோட்டம். இதை அடைய ஏராளமான குழாய்களை—நீர் நிலைகளைக் கடந்து போயாகவேண்டும்.

அவுரங்காபாத்தின் தென்கிழக்குப் பகுதியில் மன்னர் அவுரங்கசீப்பினால் கட்டப்பட்ட கோட்டையின் ஒரு வாயில் பகுதி மட்டுமே உள்ளது. இக்கோட்டை வாசல் வழியாகத்தான் ராஜபுதனத்து அரசகுமாரர்கள் பெரும் படையுடன் சக்கரவர்த்தி ஔரங்கசீப்பிற்கு வணக்கம் செலுத்த வந்தார்களாம். ஔரங்கசீப் டில்லியைப்போலவே ஔரங்காபாத்திலும் சபை கூட்டி இருக்கிறார். அவுரங்காபாத்தில் உள்ள குகைகள் காண வேண்டியவை. பேகம் ராபியாவின் கல்லறைக்கு அரு காமையிலே உள்ளன இக்குகைகள். இவற்றில் ஒன்பது குகைகள் முக்கியமானவை; புத்தமதத் தொடர்புடை யவை. தியான மண்டபங்களையும், விவாத அரங்கு களையும் கொண்டவை. எல்லோராவிலுள்ள குகைக் கோயில்களைப் போலவே இருக்கின்றன இவையும்.

ஔரங்காபாத்துக்கு அருகாமையில் ரஸா (Rauza) என்று ஒரு நகரம் உயரமான மதில் சுவர் களால் சூழப்பட்ட இந்நகருக்கு ஒன்பது வாசல்கள்,

இந்நகரில்தான் சக்கரவர்த்தி அவுரங்கசீப் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறை உள்ளது. மொகலாய மன்னர்களுக்கும் மகாராணிகளுக்கும் எழுப்பப்பட்டிருக்கும் கல்லறைகளோடு இதை ஒப்பிடும்போது வியப்பே ஏற்படும். படாடோபமோ பகட்டோ ஏதுமில்லா எளிமையான கல்லறை இது. ஔரங்கசீப் பெரும் சாம்ராஜ்யாதிபதியானாலும் எப்படி எளிமையாக வாழ்ந்தாரோ அதே மாதிரி தம் சமாதியையும் மிக மிக எளிமையாக அமைத்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்களுக்குச் சிக்கனத்தைப் போதித்தவராயிற்றே. தமது குருவின் சமாதிக்குப் பக்கத்திலேயே தன் உடலும் அடக்கம் செய்யப்படவேண்டும் என்ற அவரது வார்த்தைக் கிணங்க அதன்படியே நிறைவேற்றி இருக்கிறார்கள்.

எல்லோரா

தென்னாட்டைவிட வடநாடு பரந்தது இல்லையா? அதே போல் அங்கு ஆண்ட மன்னர்களும் பல தரப்பட்டவர்கள். ஆகவே அங்கு ஏராளமான கோட்டைகளையும் கொத்தளங்களையும் அரண்மனைகளையும் அரண்களையும் இடிபாடுகளையும் நிறையக் காண முடிகிறது.

சரித்திர ஆர்வமுடையவர்களுக்கும், சித்திரம் சிற்பம் ஆகிய கலைகளில் ஈடுபாடுடையவர்களுக்கும் முக்கியமான இடங்கள் எல்லோரா, அஜந்தா குகைகள். இவ்விரண்டும் ஔரங்காபாத்துக்கு அருகாமையில் தானிருக்கின்றன. முப்பது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எல்லோரா குகைக் கோயில்களை முதலில் காணத் தீர்மானித்தோம். வாடகைக் காரில் கிளம்பினோம். இக்குகைக் கோயில்களின் காலம் நான்காம் நூற்றாண்டு

என்று ஆராய்ச்சியாளர் அனுமானிக்கின்றனர். இங்கு மொத்தம் முப்பத்திநான்கு குகைகள் இருக்கின்றன. இவற்றில் பன்னிரண்டு குகைகள் புத்த மதச் சார்பாகவும், பதினேழு, இந்து மதத்தின் பெருமையை விளக்குவதாகவும், ஐந்து ஜைன மதத்துக்குரியவை யாகவுமிருக்கின்றன. சாய்வான குன்றுகளின் பக்கங்களைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கின்றன இக் குகைக்கோயில்கள். அஜந்தா குகைகள் செங்குத்தான மலைச்சுவரைக் குடைந்து உருவாக்கிய குகைகளாகும். எல்லோரா பகுதி மலைகள் சரிவான நிலையிலிருப்பதினால் ஒவ்வொரு குகையின் முன்னாலும் விசாலமான முற்றம் அமைந்திருக்கின்றது. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாசுதி என்ற அராபிய யாத்ரிகர் இக்குகைகளை யாத்திரிகர்களின் சொர்க்கம் என்று வர்ணித்திருக்கிறார். பத்தாவது குகைக்கு தச்சனூர் குகை—கார்பெண்டர்ஸ் கேவ்—என்று பெயர். இதன் காலம் கி. பி. 700. இக் குகையின் வராந்தாவில் தூண்கள் குடையப் பட்டுள்ள அழகு அற்புதமானவை. குதிரை லாடத்தைப் போன்ற ஜன்னல் அமைப்பு அழகுவாய்ந்தது. உள்ளே விசாலமான கூடமும் அறைகளும்; நடுவே கம்பீரமான பெரிய புத்தரின் உருவம்.

இந்து மத சம்பந்தமான குகைக் கோயில்களில் புகழ் பெற்றது கைலாசநாதர் கோயில். பெரும் பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டிருக்கிறது இக் கோயில். 2,00,000 டன்கள் எடை கொண்ட பாறைகளைக் குடைந்து வெளியேற்றி இருக்கவேண்டும் இக் கோயிலை உருவாக்க என்று மதிப்பிடுகிறார்கள். புராதன இந்தியர்களின் புனிதமான நினைவுச்சின்னமாகும் இது.

இம் மலைப்பகுதியின் மையத்திற்குப் பல வழிகள் போகின்றன. வழியெல்லாம் மண்டபங்கள், கூடங்கள்,

வராந்தாக்கள். ஒரு கோயிலின் சுவரில் ராவணனைக் குடைந்திருக்கிறார்கள்—பத்துத் தலைகளுடன்—கைலாச மலையைத் தன் தோளினால் அசைத்துத் தூக்குவது போல. இப்படி இங்கு கண்டு களித்து, மெய் மறந்து நிற்கப் பல குகைகளும், சிற்பங்களும் உண்டு.

இப்படி வியப்பு மேலிட்டுப் பார்த்துக்கொண்டே வரும்போது, ஓரிடத்தில் ஒரு ஆங்கிலேயரின் சிலையைப் பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது. புத்தர் காலத்திலேயே—காமிராவும் கையுமாக நிற்கும் ஆங்கிலேயரின் சிலையை இங்கு எப்படிச் செதுக்கினார்கள் என்று என் நண்பர் திரு ராமனாதன் செட்டியாரிடம் கிசுகிசுத்த போது அவர், "அது சிலையல்ல அப்பனே! வெளி நாட்டிலிருந்து நம் எல்லோராக் குகைகளைப் பார்க்க வந்தவர் இவற்றின் அற்புத எழிலில் மயங்கிப் போய் அப்படிச் சிலையாக நிற்கிறார்!" என்றார். அப்படி உயிருள்ள நபர்களைச் சிலைகளாக மாற்றி நிற்க வைக்கும் திறன்படைத்த சிற்பச் செல்வங்களை எல்லோராவில் கண்டு எல்லையில்லா ஆனந்தம் கொண்டோம்.

முப்பத்திமூன்றும் எண்ணுள்ள ஜைனக் குகையில் இருக்கும் இந்திர சபை சிற்பம்தான் அங்குள்ளவற்றிலேயே மிகப் பழமையானதாம். இக்குகையினுள்ளளே இருக்கும் நடுக் கூடத்தில் பன்னிரண்டு தூண்களோடு கூடிய மண்டபமுள்ளது. இதன் சுவர்களிலெல்லாம் ஜைன தீர்த்தங்கரர்களின் சிலைகள் குடையப்பட்டிருக்கின்றன. எல்லோராக் குகைகளை விட்டு எழுந்து வரவே மனமில்லைதான். ஆனாலும் அஜந்தாவின் நினைவு எங்களை அங்கிருந்து அழைத்தது,

அஜந்தா

எல்லோராவிலிருந்து ஔரங்கபாத்துக்குத் திரும்பி வந்து இரவு ஓய்வு எடுத்துக் கொண்டு மறுநாள் காலை மண்மாட் என்ற இடத்திலிருந்து 115 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் அழியா ஓவியங்களைக் கொண்ட அஜந்தா குகைகளைக் காணக் கிளம்பினோம். அவுரங்காபாத்திலிருந்து அஜந்தாக் கலைக் கூடங்களுக்குப் போகப் பஸ் வசதியுமிருக்கிறது. அஜந்தா என்ற ஊரிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள மலைப்பகுதியில்தான் அழியா ஓவியங்களைக் கொண்ட குகைகள் உள்ளன. மலையடிவாரத்தில் வாகோரா என்ற சின்னஞ்சிறிய நதி ஓடுகிறது. இந்த நதியின் ஒரு கரையில் சுவர் எழுப்பியது போன்ற நெடுதுயர்ந்தமலைகள்—அரை வட்டவடிவமாக. இவற்றின் உயரம் இருநூற்றைம்பது அடிகள். பிரும்மாண்டமான இந்த மலைப்பாறைச் சுவர்களைக் குடைந்து குகைக் கோயில்களை உருவாக்கி இருக்கிறார்கள், அமர சிற்பிகள். கலைக்கூடம் என்ற சொல்லுக்கு அஜந்தா குகைகள்தான் சரியான விளக்கமாக அமைந்துள்ளன. சித்திரமும் சிற்பங்களும் ஒருங்கமைந்த ஒப்பற்ற படைப்புக்கள். இவற்றின் காலம் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்டதாகக் கருதுகிறார்கள். கி. மு. 200 லிருந்து கி.பி. 650க்குள் இங்குள்ள அமரசிருஷ்களை உருவாக்கி இருக்க வேண்டும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள்.

இந்தக் குகைக் கோயில்கள் முதன் முதலில் நாகரிக மனிதர்களின் பார்வைக்குத் தென்பட்டது 1839ல் தான். அதுவும் எப்படி? தற்செயலாக ஒரு பிரிட்டிஷ் உயர் அதிகாரி புலி வேட்டைக்காகக் காட்டிற்குப்

போயிருக்கிறார். அவர் இந்த வாகோரா நதிக்கரைக்கு வந்திருக்கிறார். பிறைவடிவமான மலையில் ஏதோ பளிச் சென்று மின்னுவதைக் கண்டிருக்கிறார். உடனே அவருக்கு அங்கு ஏதோ இருக்கவேண்டுமென்று ஓர் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அருகாமையிலிருந்த கிராமத்திலிருந்து சிலரை உதவிக்கு அழைத்துக் கொண்டு மலைமீதேறி ஆராய்ந்திருக்கிறார். அவருக்கு ஏற்பட்ட வியப்பான வியப்பு—திகைப்பான திகைப்பு அற்புதமான அஜந்தாக் குகைகள் புதர் மண்டி மூடிக் கிடப்பதைக் கண்டு பிடித்துவிட்டார் அந்த ஆங்கிலேயர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சுவற்றில் தீட்டிய ஓவியங்கள் இன்று எழுதியது போலக் காலத்தினாலும் அழிக்க முடியாதபடி உருவாக்கி இருக்கிறார்கள் நம் பாரதப் புதல்வர்கள். புத்தம் புதிய திரைச் சீலையில் தீட்டிய ஓவியங்களைப் போல நிறம் மங்காத வண்ணங்களைப் பயன்படுத்தி இருக்கும் அதிசயத்தை இன்னமும்கூட யாராலும் கண்டுபிடிக்க இயலவில்லை. இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகர் ஹுவான் சுவாங் (கி. பி 640 ல்) அஜந்தா ஓவியங்களின் அருமை பெருமைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

அஜந்தாக் குகைகளில் இருவிதம்—ஒன்று விகாரங்கள்—பௌத்த பிட்சுக்கள் தங்கிக் கல்வி பயிலுவதற்கான வசதிகளைக் கொண்டது மடாலயங்களைப் போல மற்றது சைத்யங்கள்—அதாவது கடவுளை வணங்கும் கூடங்கள். பழங்காலத்தில் புத்த பிட்சுக்கள் இந்த விஹாரங்களில் தங்கி இருந்திருக்கிறார்கள். தாங்கள் தங்கி இருந்த இவ்விஹாரங்களின் சுவர்களில் கௌதம புத்தரின் வாழ்க்கைச் சரித்திரத்தை அழியாதவண்ணங்களில் அற்புதமான ஓவியங்களாகத் தீட்டி அழகு படுத்தி இருக்கிறார்கள்.

மொத்தம் முப்பது குகைகள் இருக்கின்றன. இயற்கை வெளிச்சமான சூரியனின் ஒளிக் கதிர்கள் சில மணி நேரங்களில் இக்குகைகளில் முழுதும் வீசி ஒளிமயமாக்குகிறது. மற்ற வேளைகளில் இக்குகையில் இருள் ஆட்சி புரிகின்றது. அப்படியொரு கோணத்தில் இக் குகைகளைக் குடைந்து உருவாக்கியுள்ளார்கள்.

இந்தக் குகைகளைக் குடைந்த சமயத்தில் புத்தகங்கள் இல்லாத காலம். ஆகவே ஓவியக் கலையையும் சிற்பத்தையும் மாணவர்களுக்குக் கற்றுத்தர இக் குகைக் கோயிலின் சுவர்களையே காகிதமாகப் பயன் படுத்தி இருக்கிறார்கள். இந்திய ஓவியத்தின் பிறப்பிடம் இந்த அஜந்தாக் குகைகள் என்று கூறினால் அதில் தவறில்லை என்றே எண்ணுகிறேன். தூரிகையையும் சிற்றுளியையும் வைத்துக்கொண்டு எத்தனை எத்தனை அற்புதங்களைச் செய்திருக்கிறான்—மனிதன் அந்தக் காலத்திலே.

ஒரு குகையில் ஒரு சிலை. தியான நிலையில் அமர்ந்திருக்கிறார் புத்தர். சிலையின் உயரம் 25 அடிகள்! சிலையை நேராகப் பார்த்தால் தியான நிலையின் ஆழ்ந்த அமைதியான முக பாவம். சிலையை அதன் இடது புறத்திலிருந்து பார்ப்போமானால் சோகம் கப்பிய முக பாவம்.வலப்புறத்திலிருந்து நோக்கும்போது அதே சிலை மந்தஹாசமாகச் சிரிக்கிறது. இப்படி ஒரே சிலையில் ஒரே முகத்தில் வெவ்வேறு கோணங்களில் நின்று காணும்போது மூன்றுவிதமான படிவங்களைத்தோற்றுவிக்கும்படியாக அமைத்திருக்கும் 'த்ரீ டைமண்ஷனல்' முறையை எண்ணிப் பார்க்கும்போது, 2000 ஆண்டுகளுக்கு முன்பே நாம் நாகரிகத்தில் எவ்வளவு உயர்ந்து விளங்கினோம் என்பது தெரிகிறது.

புத்த மதம் உன்னத நிலையில் இருந்த காலத்திலே, அஜந்தாவின் இக்குகைகளில் புத்த பிக்ஷுக்கள் தங்கி மகோன்னதமாக வாழ்ந்திருக்க வேண்டும். புத்த மதம் க்ஷீணநிலை அடைந்தபிறகு இக்குகைகளை மிருகங்களும் பறவைகளும் தங்குமிடமாகக் கொண்டிருக்கின்றன. பல்லாண்டுகள் இத்தனைச் செல்வங்கள் கானகத்திலே யார் கவனத்தையும் கவராத நிலையில் புதர், செடி கொடிகள் மூடியபடி மறைந்து கிடந்திருக்கின்றன. தாமரைத் தடாகம், யானைகள், மான்கள், பறவைகள், ராஜாக்கள், ராணிகள், தோழிகள், ராஜகுமாரிகள், அரச குமாரர்கள் எல்லாம் உயிருள்ளஓவியங்களாக பேசுகின்றன. புத்த மதத்தின் வரலாற்றை அற்புதமான வண்ணக் கலவைகளில் இங்கு காண்கிறோம். குகைகளின் அமைப்பும் தூண்களும் செதுக்கியுள்ள சிற்பங்களும் வார்த்தைகளின் வர்ணனைக்கு அப்பாற்பட்டவையாகும்.

எல்லாக் குகைகளையும் எல்லா நேரத்திலும் கண்டு களிக்க வசதியாக ஒளியை வெள்ளமாக வழியவிடும் மின்விளக்குச் சாதனங்களை அமைத்திருக்கிறார்கள். இதற்குத் தனிக் கட்டணம் செலுத்தினால் இருளை வெற்றி கொண்டு இங்குள்ள அற்புத ஓவிய உலகைக் கண்டு மகிழலாம். விளக்கம் தருவதற்கு வழிகாட்டி (கைடு)கள் இருக்கிறார்கள்.

கலைக்கண் இல்லாத சிலசுயவர்களின் வெறிக்கு ஆட்பட்டு அஜந்தா எல்லோராக் குகைக் கோயில்களில் உள்ள சில அழகு சிலைகளைப் பின்னப்படுத்தி அலங்கோலமாக்கி இருப்பதையும் கண்டு வேதனைப்படாமலிருக்க முடியவில்லை.

நாங்கள் பிரயாணம் செய்தது பிராட்கேஜ் உல்லாசக் கோச். நாங்கள் போக விரும்பும் எல்லா இடங்களுக்கும் இக்கோச்சைக் கொண்டு போக

முடியாதே. ஆகவே மீட்டர் கேஜ் வழிகளில் வேறு தனிக் கோச்சில் சமையல் சாப்பாட்டுடன் பிரயாணம் செய்து திரும்பிவந்து மறுபடி எங்கள் உல்லாச கோச்சிற்கு மாறிக்கொள்ளுவோம். இப்படி ரயில் கம்பார்ட்மெண்டிலேயே தங்கிக்கொண்டு பிரயாணம் செய்வதில் ஒரு பெரிய அசௌகர்யம். ஸ்டேஷன் போர்டில் எங்கள் கம்பார்ட்மெண்டில் ஓய்வாகத் தங்கி இருக்கும்போது மற்ற ரயில் வண்டிகளின் சத்தம் காதைத் துளைக்கும். அமைதியாக இருக்க முடியாது. அது மட்டுமல்ல—அதிகமான ரயில்கள் வரும் பரபரப்பான வேளைகளில் எங்களது கம்பார்ட்மெண்டை வெகு தொலைவில் பல லைன்கள் தள்ளி ஒதுக்குப்புறமாகக் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள். சில வேளைகளில் ஸ்டேஷனிலிருந்து அரைமைல் ஒருமைல் தொலைவிற்குக் கூட எங்கள் கோச்சைக் கொண்டு போய் நிறுத்திவிடுவார்கள். ஊர் சுற்றிப் பார்க்க வெளியே போய்விட்டுத் திரும்பி வரும்போது, எங்கள் கோச் விட்டுச் சென்ற இடத்தில் இருக்காது. சுற்றி அலைந்து தேடிக் கண்டு பிடிப்பதே பெரும் பாடாகிவிடும். ஆகவே ரயில் கிளம்புவதற்கு முன்னதாகவே—கோச்சைக் கண்டு பிடித்து ஏறிக்கொள்ள வசதியாக—ஸ்டேஷனுக்கு வந்துவிட வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் சாமான்களை ஏற்றி இறக்கி வண்டி மாறி, இடம் தேடியலைந்து ஏறிக் கொள்ளும் அசௌகரியங்களெல்லாம் இல்லாததைப் பார்க்கும்போது கோச் இடம் மாறி எட்டப் போய் நிற்கும் அசௌகரியம் ரொம்ப ரொம்பச் சொற்பமானதுதான்.

ஜான்ஸி

ஔரங்காபாத்திலிருந்து ஜான்ஸி வந்து சேர்ந்தோம். பிரிட்டிஷாருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியு

வீராங்கனை லக்ஷ்மிபாய் செங்கோலோச்சிய இடமல்லவா ஜான்ஸி. கணவனை இழந்து, நம்பியவர்களால் துரோகம் செய்யப்பட்டு, அரியணைக்கு உரியவனான குழந்தையையும் முதுகில் கட்டிக்கொண்டு போர்க் களத்தில் பிரிட்டிஷாரைக் கதிகலங்க வைத்த வீர மங்கை லக்ஷ்மி பாய் வாழ்ந்த கோட்டையைப் போய்ப் பார்த்தோம். உயிர் பிரியும்போதும் தன் உடலை அன்னியன் தீண்டக் கூடாது என்று கேட்டுக்கொண்ட அந்த மானங் காத்த மங்கையின் மகத்தான வாழ்க்கைக் காட்சிகள் நிழற் படங்களாக எங்கள் நினைவிலே வந்து போயின. நாங்கள் கோட்டை மீதிருந்து ஊரைப் பார்க்கும்போது, நாட்டுக்காக, நாட்டு விடுதலைக்காக, தன்மானத்துக்காக நம் மூதாதையர் எப்படியெல்லாம் வாழ்ந்து, போராடி, உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போதெல்லாம் எங்கள் நெஞ்சம் ஆர்வத்தால், பெருமையால், விம்மிப் புடைத்தது.

கஜுராஹோ

ஜான்ஸியிலிருந்து கஜுராஹோ போய் அங்குள்ள சிற்பச் செல்வங்களைக் கண்டு களிப்பதென்று தீர்மானித்தோம். ஜான்சியிலிருந்து 115 மைல் தொலைவிலிருந்தது கஜுராஹோ. ஆகவே ஒரு வான் ஏற்பாடு செய்துகொண்டு எல்லோரும் புறப்பட்டோம். நாங்கள் காணப்போகும் இடம் எவ்வளவு பழைமையானதோ அதோ போன்றிருந்தது ஏற்பாடு செய்த வானும். டிரைவருக்கு அருகில் நானும், நண்பர் ராமனாதன் செட்டியார் அவர்களும் உட்கார்ந்திருந்தோம். நண்பர் ராமனாதன்செட்டியார் கதவைப் பத்திரமாகப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று பலமுறை கூறினார்கள். எனக்கு

இது என்னவோ போலிருந்தது. என் மீதுள்ள அக்கறையினுல் அவர்கள் இப்படிக் கூறுவதாக நினைத்து, 'நான் விழுந்துவிட மாட்டேன்; தைரியமாக இருங்கள்' என்றேன். அப்போதுதான் அவர்கள் கூறியதிலுள்ள நகைச்சுவை எனக்குப் புரிந்தது. இல்லை — புரிய வைத்தார்கள்.

"சிதம்பரம்! நான் பயப்பட்டது நீங்கள் விழுந்து விடுவீர்களோ என்பதினுல் அல்ல! வேன் கதவு விழுந்து விடப் போகிறதே என்றுதான் அதைப் பத்திரமாகப் பிடித்துக் கொள்ளச் சொன்னேன்!" என்றுரே பார்க்கலாம். எங்களுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. இந்த வேனைப் பற்றி ராமனுதன் செட்டியார் மதிப்பிட்டதைப் போலவே டிரைவர் கொஞ்ச தூரம் போனதும் 'ஹார்ன் வேலை செய்யவில்லை' என்ருர். நாங்கள் "இந்த வேனின் மற்ற பாகங்கள் போடும் சத்தமே போதும்; ஹார்ன் வேறு தனியாக எதற்கு?" என்ருேம்.

எப்படியோ, ஒரு வழியாக எங்களைக் கஜுரஹோவிற்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டது, அந்த வேன்.

அஜந்தா எல்லோராவில் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை உருவாக்கி இருக்கிருர்கள். கஜுரஹோவிலோ கருங்கற்களைக் கொண்டு மாபெரும் கோயிலகளைச் சமைத்திருக்கிருர்கள். நம்மைவிட வெளிநாட்டவருக்குத்தான் இக்கோயிலைப்பற்றி அதிகம் தெரிந்திருக்கிறது. அயல் நாட்டவர்களின் கூட்டம் தான் இங்கு ஆண்டு முழுதும். மொத்தம் முப்பது கோயில்கள் இருக்கின்றன. கஜுரஹோவின் வர்ணனைக்கு அப்பாற்பட்ட அற்புதப் படைப்புகள். கி.பி. 1000வது ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டவை இக்கோயில்கள்.

காந்தார்ய மஹாதியோ கோயிலில் மட்டும் 800 சிலைகள் இருக்கின்றன என்றால் அதன் சிறப்பையும் அழகையும் நீங்களே யூகித்துக் கொள்ளலாம். சைவ, வைணவ, ஜைன மதங்களுடன் சம்பந்தப்பட்ட கோயில்கள் கட்டிடக் கலையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவை. நுழைவாயில்கள், விசால மான முற்றம், மண்டபங்கள், மஹாமண்டபங்கள்— இப்படி அடுக்கடுக்காகவும் அணி அணியாகவும் அழகாகவும் அடக்கமாகவும் விளங்குகின்றன.

கஜுரஹோ கோயில்களின் சிற்பங்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை சமய விதிகளுக்கு உட்பட்ட சிலைகளைக் கொண்டவை.

இரண்டாவது வகையில் தெய்வங்களின் சிற்பங் கள். முதல் வகையிலிருப்பது மாறுபட்டு அலங்காரம், அணிகள் ஆகியவையும் பல கைகளையுடையதாகவும் காட்சியளிக்கின்றன.

மூன்றாவது வகைச் சிற்பங்கள்தான் எல்லாரது கவனத்தையும் கவரக்கூடியவை. சூரசுந்தரிகள், அப்ச ரஸ் என்று கூறப்படும் நடன நாரீமணிகளின் சிற்பங் கள் ஏராளம். முதல் இரண்டு வகைச் சிற்பங்களான கடவுளர்களுக்கு சுற்றுப்புறத் தேவதைகளாக இச் சுந்தரிகளை உருவாக்கி இருக்கிறார்கள்! இவற்றின் அழகு அமைப்பு, பலவித பாவங்கள் அபாரம். பார்த் துக் கொண்டே இருக்கச் செய்யும் மாயா சக்தி கொண் டவை. தாமரை மலர் ஏந்தியவள், கண்ணாடி கொண்டு அழகு பார்த்துக் கொள்ளுகிறவள், ஒயிலாக இடையில் கை வைத்து நிற்கிறவள், கைகளைக் கட்டியபடி நிற்பவள்—இப்படிப் பலவிதமான பாவங்களைக் கொண்ட ஒயிலான சிற்பங்கள். எவ்வளவு முறை பார்த்தாலும்

திகட்டாத அலுக்காத—இன்னும் சற்றுப் பார்ப் போமே என்ற இச்சையை எழுப்பும் ஏந்திழையாளின் எழில் வடிவங்கள்.

நான்காவது வகை உலகப் புகழ் பெற்றவை. உலகில் வேறு எந்த நாட்டிலுமே காணமுடியாத காம சாஸ்திரத்தைக் கல்லிலே வடித்துக் காட்டி இருக்கும் சிலைகள். ஆண் பெண் உறவில் எத்தனை வகை, எத்தனை முறை, எவ்வளவு இன்பம்—கலைக் கண்களோடு கண்டால் சிற்பியின் கற்பனை சக்தி பிரமிப்பூட்டுவதாக இருக்கும். காமக்கலை மனிதனின் வாழ்வில் ஓர் அங்கம் என்ற நினைப்போடு இச்சிலைகளை அணுகினால் ஆபாசம் தோன்றாது: அவற்றை எழுத்துக்களால் விளக்கும் வல்லமை பேனாவிற்குக் கிடையாது. நேரில் போய்ப் பார்த்துப் பிரமிக்க வேண்டிய காட்சிகள். துணைவி யரோடு போனால் இன்னும் விசேஷம்!

ஐந்தாவது பிரிவில் விலங்குகளின் வடிவங்களைக் கல்லிலே வடித்திருக்கிறார்கள். இவையும் சிற்பியின் கைத்திறனுக்குக் கட்டியங்கூறும் வகையில் இருக் கின்றன. கஜுரஹோவின் கனவுலகில் கண்களையும் மனதையும் பறிகொடுத்துவிட்டு மாலையில் கிளம்பி இரவு பத்து மணியளவில் ஜான்ஸி வந்து சேர்ந்தோம். எங்கள் கோச்சில் புகுந்து படுத்ததுதான் தெரியும். நல்ல செமித்தியான தூக்கம். கோயில்களைச் சுற்றிய அலைச்சல், வானின் குலுக்கல் எல்லாமாகச் சேர்ந்து ஆழ்ந்த உறக்கத்தைக் கொடுத்தன. எங்கள் சுகமான நித்திரையில் ரயில் இரவு ஆக்ராவை நோக்கிப் போய்க் கொண்டிருந்ததுகூட எங்களுக்குத் தெரியாது. விடிந்து வெகு நேரம் கழித்தே கண்விழித்தோம். பகல் இரண்டு மணிக்கு ஆக்ராவுக்கு வந்தோம்.

ஆக்ரா

ஆக்ரா...

உலக அற்புதங்களுள் ஒன்ருன தாஜ்மகால் இருக்குமிடம் ஆக்ரா.

யமுனை நதிக்கரையில் நிலவுக்கல் கனவு மாளிகை இருக்குமிடம் ஆக்ரா.

ராஜபுதனத்தின் பாலைவனங்களிலிருந்து சூடான மணல் காற்று எப்போதும் வீசும் இடம் ஆக்ரா.

முகலாயப் பேரரசர்களின் முக்கிய நகரமாகவும் அக்பரால் தலைநகராகவும் பெருமைப்படுத்தப்பட்ட நகரம் ஆக்ரா.

பாபரின் மைந்தன் ஹுமாயூன் 1526ல் ஆக்ராவை முதன் முதலில் தம் வசமாக்கிக் கொண்டார். இவருக்குப் பிறகு இவரது மகன் அக்பர் 1555ல் சக்கரவர்த்தியானுர். பட்டமேற்ற மூன்ருவது ஆண்டில் ஆக்ராவைத் தலைநகராகமாற்றினுர். ஆக்ராக் கோட்டை அதற்கு முன்பு இந்து அரசர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அக்பர் இக்கோட்டையைப் புதுப்பித்து விஸ்தரித்துக் கட்டினுர். நெடுதுயர்ந்த இதன் கோட்டைச் சுவர்கள் சிகப்பு சுக்காங்கற்களால் (Red sand Stone) ஆனது. இன்றும்கூட ஆக்ராக் கோட்டை நல்ல நிலையில் உறுதியாக இருக்கிறது.

ஆக்ராக் கோட்டையில் இன்று நாம் காணும் சலவைக்கல் மாளிகைகளைக் கட்டியது ஷாஜஹான். கம்பீரமான 'திவானி ஆம்', 'திவானி காஸ்' இவைகளெல்லாம் பிரமிப்பூட்டக்கூடிய கலைக்கூடங்கள். மன்னர் ஷாஜஹானும் மந்திரி பிரதானிகளும் தொழுகை நடத்துவதற்காக மோதி மஸ்ஜித் (முத்து மசூதி) கட்டப்பட்டிருக்கிறது. சலவைக் கற்களில் ஆன பிரும்மாண்ட

மான தூண்களையுடையது இந்த முத்து மசூதி. இதைக் கட்ட அந்தக் காலத்திலேயே மூன்று லட்ச ரூபாய் ஆயிற்றும்.

முத்து மசூதிக்கு அருகிலே எட்டுப் பட்டைகளை யுடைய கோபுரம் கொண்ட முஸ்ஸம்மான புர்ஜ் என்ற கட்டிடமுள்ளது. சலவைக் கற்களில் அற்புதமான வேலைப்பாட்டுடன் விலையுயர்ந்த கற்களிழைத்து அழகு படுத்தப்பட்ட அற்புதக் கட்டிடம் இது. மச்சிபவன் ஷிஷ்ம கால் மற்றும் பல கட்டிடங்களைக் கோட்டைக் குள் கண்டு மகிழலாம். செங்கோட்டை என்றே கூறக் கூடியபடி சிகப்பு மணற் கற்களால் ஆன கோட்டை நம் மனத்தைவிட்டு அழியாத ஓவியமாகப் பதிந்துவிடும்.

கோட்டைக்குள்ளே முத்து மசூதியானால், கோட் டைக்கு வெளியே ஜும்மா மசூதி இருக்கிறது. ஒரே சமயத்தில் பல்லாயிரம் மக்கள் கூடித் தொழுகை நடத் தும் அளவுக்கு விசாலமான மசூதி இது. இதுவும் ஷாஜஹானால் கட்டப்பட்டதுதான்—1648ல். மிகப் பெரிய மூன்று 'டோம்'களைக் கொண்டது இந்த ஜும்மா மசூதி. கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பார்த்தாலே ஜும்மா மசூதி தெரியும்.

ஆக்ராவிற்குப் பெருமை அங்குள்ள தாஜ்மஹாலி னால்தான். காதல் மாளிகையான இது கண்கவர் வனப் புடையது. தன் மனைவி மும்தாஜின் நினைவாக மாமன்னர் ஷாஜஹான் உருவாக்கிய ஒப்பற்ற கலைக் கூடம், இக்கட்டிடம் உலக அதிசயங்களில் ஒன்று. ஷாஜஹான் பேரரசர் மட்டுமல்ல கலைஞர், கட்டிடக் கலை யிலும் வல்லுனர். நல்ல உள்ளம் படைத்தவர். இத்தனை யும் ஒருங்கே கொண்ட அறிவாளி; தீர்க்கதரிசி. 20,000 தொழிலாளிகளின் உழைப்பால் 22 ஆண்டுகளில் இந்த

நினைவாலயத்தைப் பூர்த்தி செய்திருக்கின்றார் ஷாஜஹான். நல்ல கணவன் என்ற முறையிலே மனைவியை எவ்வளவு நேசித்தார் என்பதற்குச் சரித்திரச் சான்று தாஜ்மஹால். இது வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மை. அது மட்டுமல்ல, தன் மனைவியின் நினைவாலயம் என்ற பெயரால் 20,000 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்புத் தந்தது, நல்ல அரசன் என்பதற்கு எடுத்துக் காட்டு. இன்று ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் தாஜ்மகாலைப் பார்த்து வருகின்றார்கள். பவுர்ணமியில் லட்சக்கணக்கானவர்கள் கண்டு களிக்கின்றார்கள். அதில் பல ஆயிரம் பேர் வெளி நாடுகளிலிருந்து வருகிறார்கள். ஷாஜாஹான், தன்னுடைய காலத்தில் தம் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும் இதனைக் கட்டினார். நல்ல எண்ணம், மட்டுமிருந்தால் அந்த எண்ணத்திற்கு முதுமையும், இறப்பும் கிடையாது. மனிதனுடைய உடலுக்குத் தான் முதுமையும், இறப்பும் உண்டு. அவர் செய்த நல்ல காரியம் அவர் உயிரோடு இருந்த காலத்தில் மட்டுமல்ல, அவருடைய எண்ணம் இன்றளவும் செயல் பட்டு வருகிறது.

டில்லி, ஆக்ராவைச் சுற்றியுள்ள பல ஹோட்டல் தொழிலாளிகளுக்கு:வேலை வாய்ப்பு கிடைத்திருப்பது, பல டாக்சிகள் ஓடுவது, கைடுகள் பிழைப்பது, புகைப் படம் எடுப்பவர்கள், பல வியாபாரங்கள் நடப்பது, இப்படி இன்னும் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதும் ஷாஜஹானின் நல்ல எண்ணத்தினால் உருவான தாஜ்மஹாலினால்தான். அது மட்டுமல்ல, வெளி நாட்டுப் பயணிகள் தாஜ்மஹாலைப் பார்க்கவே இந்தியாவிற்கு வருவதால் நம் அரசாங்கத்திற்கு, அந்நிய செலவாணியும் கிடைத்து வருகின்றது.

தாஜ்மஹாலைப் பார்ப்பதற்கு அனுமதிக் கட்டணத்தின் மூலமாகவும் அரசிற்கு வருவாய் கிடைக்கிறது.

வெள்ளைச் சலவைக் கற்களாலேயே அற்புதமான முறையில் அமைந்திருக்கும் இக்கட்டிடத்தை உருவாக்க பிரான்ஸ், இத்தாலி, பாரசீகம், துருக்கி ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் சிற்பிகளும் கட்டிடக்கலை வல்லுநர்களும் வந்திருக்கிறார்கள். இந்தியக் கலைஞர்களுடன் ஒத்துழைத்து இந்த உன்னதமான நினைவுச் சின்னத்தை உருவாக்கியுள்ளார்கள். விலையுயர்ந்த கற்களெல்லாம் பல தேசங்களிலிருந்தும் தருவிக்கப் பட்டிருக்கின்றன. சலவைக் கற்கள் இத்தாலி நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. தாஜ்மகாலின் முன்னே நீண்ட நீர்த்தடாகமும் அருகே பூந்தோட்டமும்—கட்டிடத்தின் நிழல் தடாகத்தில் தெரியும்படியாக அமைத்திருக்கும் முறையும் பிரமாதம். கட்டிடத்தின் மேல் பகுதியில் (டோம்) கண்ணாடிகளை அமைத்து பௌர்ணமி நிலவு அதன் வழியே உள்ளே புகுந்து கனவு உலகில் சஞ்சரிக்கும் பிரமையை ஏற்படுத்துகின்றது. கட்டிடத்தின் நடுமையத்தில் நடுவே மும்தாஜின் சமாதியையும் அருகே ஷாஜஹானுடையதும் இறப்பிலும் இணைபிரியா ஜோடிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

அன்பு மனைவிக்காக எழுப்பிய அற்புதக் காதல் மாளிகையான தாஜ்மகாலை மன்னர் ஷாஜஹான் கோட்டையிலிருக்கும் முஸ்ஸம்மான புர்ஜ் என்ற அரண்மனையிலிருந்து பார்த்துக் கொண்டே காலங் கழித்தார். காரணம், ஔரங்கசீப் தன் தந்தையைக் கடைசி காலத்தில் பல வருஷங்கள் சிறையில் வைத்திருந்தாரே. அப்படிச் சிறைப்பட்ட நிலையிலும் தாஜ்

மகாலைக் காணும் வசதியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார் ஷாஜஹான். மனைவியை நினைத்தவாறே அவளது சமாதியான தாஜ்மகாலைப் பார்த்தபடியே பல வருஷங்கள் கைதியாகக் காலங் கழித்துக் கண்ணை மூடினார், அற்புதமான கட்டிடங்களைக் கட்டிய மன்னர் ஷாஜஹான்.

தாஜ்மகாலை பௌர்ணமி நிலவில் காணவேண்டும். காணக் கிடைக்காத காட்சி அது. அதன் கம்பீரமான டோமைச் சுற்றி வெள்ளி ஒளி வீசும். அதன் சுவர் களில் பிங்கிஷ் ஹியூ—ஊதா வண்ணம் ஜ்வலிக்கும். அடிவாரமோ நெடுதுயர்ந்த மரங்களின் கரும் பச்சை நிற நிழலில் மூழ்கிக் கிடக்கும். எல்லாவற்றுக்கும் விதானமாக நட்சத்திரம் மினுக்கும் நீலவானம்.

நீண்ட தடாகத்தின் கரையில் அமர்ந்து தாஜ் மகால் நிலவில் குளிக்கும் அழகைக் கண்டு களிக்கக் காத்திருந்தோம். மெள்ள மெள்ள பூரண நிலவு மேலெழும்பிக் கொண்டிருந்தான். சந்திரன் மேலே வரவர, அதன் ஒளிக்கதிர்கள் தாஜ்மகாலின் பலவேறு பகுதிகளில் பட்டு டாலடிக்கலாயிற்று. பிரதான நுழைவாயிலில் பதிக்கப்பட்டுள்ள வண்ணக் கற்களில் நிலவொளி பட்டுத் தகதகாய்க்கலாயிற்று. அங்கு ஒரு பளீர்! இங்கு ஒரு சுளீர். ஆஹா! மினார்களிலும், டோம்களிலும் வெண்ணொளி பட்டு என்னமாக ஒளிக் கோலங்களை அள்ளி வீசுகின்றன? கண் கொள்ளாக் காட்சி! வாழ்நாளில் ஒவ்வோர் இந்தியனும் கண்டு மகிழ வேண்டிய காட்சி.

விசாலமான சலவைக் கல்லினால் உயரமாக எழுப்பப்பட்டுள்ள மேடைமீதுதான் இந்த அழகு மாளிகையான தாஜ் எழுப்பப்பட்டிருக்கிறது. இதன்

நுழைவாயிலுக்குப் போகப் பல படிகளை ஏறி மேலே போகவேண்டும். மும்தாஜ், ஷாஜஹான் சமாதிகள் கட்டிடத்தின் கீழேயுள்ள இருட்டான பகுதியில்தான் இருக்கின்றன. நிஜமான கல்லறைகள் இவைதான். ஆனல் அதே போல நகல் சமாதிகள் மேல் பரப்பில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. சலவைக்கல் சமாதியில் ஏராளமான வேலைப்பாடு களோடு கற்கள் பதிக்கப்பட்டிருப்பதை, கைடு நமக்குக் காட்டுகிருர். ஓவியக் கலையும் சிற்பத் திறமையும் தன்னிகரற்று விளங்குகின்றன. அந்த வேலைப்பாடு களில் ஒரு சின்ன பூவேலையில் ஐம்பதுக்குமதிகமான கற்கள் இடம் பெற்றிருக்கின்றன என்றுல் பார்த்துக் கொள்ளுங்கள். நகல் சமாதியைச் சுற்றி சலவைக் கல்லினுல் பூவேலை செய்யப்பட்ட மறைப்புக்கள் உள்ளன.

முதியவரான ஒரு முஸ்லிம் காதிம் மறை ஓதுகிருர். அவரது கம்பீரமான அந்தக் குரல் நெடுதுயர்ந்துள்ள டோமிலும் சுவர்களிலும் பட்டு எதிரொலிக்கிறது; நாம் பிரமிப்படைகிறோம்.

சில பல படிகள் இறங்கிக் கீழே போய் நிஜமான சமாதிகளையும் காண்கிறோம். மின்விளக்குகள் இருளை அகற்றிச் சூழ்நிலையை உணர்த்துகிறது. பின்னல் போன்று பல வழிகள்; கூடங்கள். அந்தக் காலத்தில் இங்கு மன்னரும் மற்றையோரும் எப்படியெல்லாம் இங்கு வாழ்ந்திருப்பார்கள், நடமாடி இருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது மெய்சிலிர்ப்பு ஏற்பட்டது.

டெல்லிக் கோட்டை, ஆக்ராக் கோட்டையிலுள்ள அழகுக் கட்டிடங்கள், தாஜ்மஹால் மற்றும் அற்புத

மான அரண்மனைகளை உருவாக்கிய கலையுள்ளம் கொண்ட ஷாஜஹான் மன்னர் அமைதியாகத் தூங்கும் அந்தச் சமாதியைப் பார்த்து விட்டு மேலே ஏறி வெளியே வருகிறோம். பேரழகியும், ராணியும், பல குழந்தை களுக்குத் தாயாருமாகிய மும்தாஜின் நினைவும் பௌர்ணமி நிலவின் குளுமை போல நெஞ்சைக் குளிர் விக்கிறது.

சரித்திர மாணவனான என்னால் பகலில் கண்டு களித்த ஆக்ராக் கோட்டையின் அழகை மறக்க முடிய வில்லை. நினைவில் சுழன்று சுழன்று வந்து கொண் டிருந்தது, ஒன்றரை மைல் சுற்றளவுள்ள அந்தக் கோட்டை. அகழியின் அகலமோ நாற்பதடி. அதன் இருகரைகளிலும் 20 அடி உயரமான சுவர் எழும்பி நிற் கிறது. கோட்டையினுள்ளே எத்தனை எத்தனை விதமான மாளிகைகள்! இந்துமத ராணிகளுக்கும் முஸ்லிம் பேகம்களுக்குமாக அவரவர் கலாசாரப்படி அமைத்துக் கொடுத்துள்ள அரண்மனைகள்; நீராழி மண்டபங்கள்; ஜலக்ரீடை செய்த இடங்கள். அழகிகள் நீராடும்போது அதை அரசர் பார்த்து மகிழும்வண்ணம் மண்டபத்தின் மேல் கூறையிலும் பக்கத்துச் சுவர் களிலும் கண்ணாடிக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கும் விந்தை. யமுனை நதியின் தண்ணீரை அரண்மனைக் குள்ளே எல்லாம் வீசச் செய்து பயன்படுத்திக் கொண் டிருக்கும் பாங்கு! தண்ணீர் ஒரு பக்கம், வெந்நீர் ஒரு பக்கம்; பாலிலே குளிக்கப் பளிங்குத் தடாகம் மற்றொரு பக்கம்—இப்படி அந்தப்புரத்திலே எத்தனை எத்தனை வசதிகள்; சிங்காரங்கள்! சிற்றின்ப சுகத்துக்கான எண்ணிலடங்காத வசதிகள். ஒலியையும், ஒளியையும், காற்றையும் எப்படியெல்லாம் கணக்கிட்டுத் தங் களுக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை

ஒவ்வொரு கட்டிடமும் கதை கதையாகக் கூறுகின்றன. ஒரு நாளில் பார்த்துவிட முடியாதவை ஆக்ராவும் தாஜ் மகாலும். பல நாள் தங்கி இருந்து பார்த்து மகிழ வேண்டியவை.

ஒரு வழியாகத் திருப்திப்படாவிட்டாலும் பார்த்து விட்டோம் என்ற முடிவோடு ஆக்ராவைவிட்டுக் கிளம்பலானோம். என் நண்பர்கள் ராமனுதன் செட்டியாரும் அழகப்ப செட்டியாரும் ஆக்ராக் கடை வீதியையே விலைபேசிக் கொண்டிருந்தார்கள். ஆமாம், சாமான்கள் வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அன்று இரவு அங்கு ரோட்டரி சங்கக் கூட்டமிருப்பதையும் அதற்கு எங்களை அழைத்திருப்பதையும் அவர்களுக்கு நினைவுபடுத்தினேன். அப்போது கடை முதலாளி என்னைக் கவலைப்படாதிருக்கச் சொன்னார். "அவர்கள் சாவகாசமாகப் பொருள்களை வாங்கட்டும் சார். ரோட்டரி சங்கத்தின் காரியதரிசி நான்தான். உங்களை நானே அழைத்துக் கொண்டு போகிறேன் என் காரிலேயே" என்றார்.

அன்று பௌர்ணமி. ஆகவே நிலவில் தாஜ்மகாலின் நிழலில் ரோட்டரி சங்க அங்கத்தினர்கள் கூடி விருந்துண்டார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் தங்கள் இல்லத்திலிருந்து ஒவ்வொரு விதமான உணவைத் தயாரித்து எடுத்து வந்திருந்தார்கள் தங்கள் மனைவி மக்களுடன். ஆகவே எங்களுக்குப் பலமான பலவிதமான சுவைகளோடு கூடிய விருந்து. கனவு மாளிகையின் மடியிலே ஆடிப்பாடி விருந்துண்டு மகிழ்ந்தோம்.

மறுநாள் காலை ஆக்ராவிலிருந்து இருபத்தி நாலு மைலிலுள்ள மொகலாயப் பேரரசின் தலைநகராக

அக்பரால் நிர்மாணிக்கப்பட்டு, அங்கு குடி பெயர்ந்து சில வருஷங்களிலேயே அதைப் புறக்கணிக்கப்படும் நிலைக்காளாகி இன்று பாழடைந்த பெரும் நகராக விளங்கும் ஃபதேபூர் சிக்ரியைப் போய்ப் பார்ப்பதாக முடிவு செய்து தூங்கப் போனோம்.

ஃபதேபூர் சிக்ரி

காலையில் கண் விழித்தும்கூட தாஜ்மகாலின் நினைவும் காட்சிகளும் கண்களை விட்டு அகலவில்லை. ஆக்ராவிலேயே இன்னும் காண வேண்டிய இடங்கள் பல இருந்தன. ஆனால் நேரமில்லாமையால் நாங்கள் அவற்றைப் பார்க்கவில்லை. ஆக்ரா ஆர்ட் காலேஜ் பார்த்திருக்கலாம்; பார்க்கவில்லை. ராதா ஸ்வாமி இயக்கத்தினரின் புகழ் பெற்ற தன்னிறைவு பெற்ற காலனியான தயாள் பாக் பார்க்கவேண்டிய இடமாம்; பார்க்கவில்லை. கணவனைப் பொம்மையாக வைத்துத் தானே ஆட்சி நடத்திய நூர்ஜஹான், தன் தந்தையான மிர்ஸா கியாஸ் பெக்கின் நினைவாக ஒரு அழகான சமாதி எழுப்பி இருக்கிறார். இதமத் தெளலா மசூதி என்று பெயர். ஜஹாங்கீரின் பொக்கிஷதாரராக விளங்கியவர் இந்த மிர்சா கியாஸ் பெக். அப்போது இவருக்கு இதமத் தெளலா என்று பட்டப் பெயர். இந்தப் பட்டப் பெயரிலேயே சமாதி உள்ளது. இதன் சுவர்கள் வெள்ளைச் சலவைக் கற்களால் ஆனவை யாம்; ரொம்ப அழகாக இருக்குமாம். பார்க்கவிலலை. ஆகவே ஆக்ராக் கோட்டையையும் தாஜ்மஹாலையும் மட்டுமே பார்த்தோம். அதன் நினைவாக ஆளுக்கொரு தாஜ்மகால் பொம்மை—சலவைக் கல்லிலும் வெள்ளை மாக்கல்லிலும் கிடைக்கின்றன—வாங்கிக் கொண் டோம். கம்பளங்கள் இங்கு விசேஷம். தங்கம் வெள்ளி

யினுல் பூ வேலை செய்யப்பட்ட காலணிகள் பிரசித்த மாம். பார்த்தோம்; வாங்கவில்லை.

சிக்ரி என்பது ஒரு கிராமமாக இருந்தது. அக்பருக்கு முன்னே இங்கே இந்து அரசரின் கோட்டை இருந்திருக்கலாம். ஆனுல் ஃபதேபூர் சிக்ரியாக இது புகழ்பெற்றது அக்பரால்தான். வெற்றித் திருநகர் என்பதே ஃபதேபூர் சிக்ரியின் பொருள். அக்பரின் காலத்தில் இங்கு ஒரு முஸ்லிம் சாது வசித்து வந்திருக்கிறுர். அவர் பெயர் ஷேக் சலிம் சேஸ்தி. அக்பருக்கு நீண்ட காலமாகப் புத்திரபாக்யம் இல்லாதிருந்தது. ஒரு முறை அக்பர் இவ்வழியாக டெல்லியிலிருந்து ஆக்ரா வரும்போது இந்தச் சாதுவைச் சந்தித்துத் தம் பிள்ளை இல்லாக் குறையைக் கூறி இருக்கிறுர். சேஸ்தி அக்பருக்கு விரைவிலேயே அவரது இந்து மனைவி மூலம் குழந்தை பிறக்கும் என்று அருளி இருக்கிறுர். அதன்படியே அக்பருக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறுன். அவனுக்கு அந்த சாதுவின் பெயரையே சலீம் என்று வைத்திருக்கிறுர் அக்பர். இந்த சலீம்தான் பின்னுல் ஜஹாங்கீராகப் பட்டமேறியவர்.

ஷேக் சலீம் சேஸ்தியின் வாக்குப் பலித்ததையும் அவரிடம் தமக்குள்ள பக்தியையும் வெளிப்படுத்த சிக்ரியில் ஒரு பெரு நகரை நிர்மாணிக்க முடிவு செய்தார் அக்பர்—மொகல் சக்ரவர்த்தி. அதுவும் அக்பர் நினைத்தால் நடக்காத காரியம் உண்டா? நகரம் தோன்றலாயிற்று. ஆறு மைல் சுற்றளவிற்கு உயர்ந்த மதில் சுவர்கள் எழுந்தன-இந்நகரின் மூன்று பக்கங்களை மதில் சுவர்களாலும் ஒரு பக்கத்தை ஒரு பெரிய செயற்கை ஏரியையும் அரணுக அமைத்தார் அக்பர். சுவர்களின்

அகலம் பதினேரடி. உயரமோ, 32 அடிகள்! இக்கோட்டையுள்—நகரில்—நுழைய பதினேரு வாயில்கள்! இப்படி வளைக்கப்பட்ட நகரினுள், மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும், மசூதிகளும் புகழ் பெற்ற சிற்பிகளின் கை வண்ணத்தில் உருவாகின. இதன் பிரதான நுழை வாயிலுக்குப் பெயர் புலந்த் தர்வாஸா—வெற்றி வாசல்—என்று பெயர். தரை மட்டத்திலிருந்து 130 அடிகள் உயரத்தில் இதன் கோபுரங்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றன. சலவைக் கற்களாலும் சிவப்புச் சுக்கான் பாறைகளாலும் உருவாக்கப்பட்டது இந்த நுழை வாசல். புலந்த் தர்வாஸாவை எட்டிப் பிடித்து உள்ளே நுழைய ஏராளமான படிகளை ஏறிக் கடக்க வேண்டும். அதன் கம்பீரத்துக்கு இதுவும் ஒரு காரணம்.

கோட்டையினுள்ளே ஏராளமான கட்டிடங்கள்! அத்தனையும் புதுமை மாருமல் நேற்றுக் கட்டியவை போல இருக்கின்றன. ஏன்? இவ்வளவு பாடுபட்டு உருவாக்கிய வெற்றித் திருநகரைத் தலைநகராக்கி அதிக காலம் இங்கு ஆட்சி நடத்தவில்லை அக்பர். தண்ணீர்ப் பஞ்சத்தினுல் இந்த அழகு நகரைக் கைவிட்டு ஆக்ராவுக்குத் திரும்பிவிட்டார். ஆசையோடு உருவாக்கிய புது நகரம் நிராசையின் நிழலாகப் பாழடைந்தது.

ஃபதேபூர் சிக்ரியில் சலீம் சேஸ்தியின் சமாதி காண வேண்டியவைகளுள் ஒன்று. சலவைக் கல்லிலே குடைந்து உருவாக்கிய அற்புத வேலைப்பாடமைந்த மறைப்புக்களோடு இருக்கிறது. சிக்ரியிலுள்ள பல அழகுக் கட்டிடங்களுள் முக்கியமானது திவான் சிகாஸ்—சின்னஞ்சிறிய கட்டிடமானுலும் சிறப்பான அமைப்பு. அற்புத வேலைப்பாடமைந்த பெரிய தூண்

ஒன்று. அதன் உச்சியிலே மன்னர் அக்பர் அமர ஒரு பளிங்கு மேடை; அதிலிருந்து கட்டிடத்தின் நான்கு பக்கத்துக்கும் போகும் காலரிகள். கட்டிடத்தின் நான்கு பக்கமும் ஆளோடிகள் போலக் காலரிகள்—நடுத்தூண் உச்சியிலிருந்து பிரியும் நான்கு காலரிகளும் இவற்றுடன் இணைகின்றன. இந்தியா முழுவதிலிருந்தும் மற்றும் கிழக்கு மேற்குப் பகுதிகளிலிருந்தும் வந்து கூடும் அறிவாளிகள் இந்தக் காலரிகளில் அமர்ந்திருப்பார்கள். அக்பர் நடுமையத் தூண் உச்சிப் பளிங்கு மேடையில் அமர்ந்திருப்பார். சர்ச்சைகள் நடக்கும்; அவர்களோடு அக்பரும் கலந்துகொண்டு விவாதிப்பார். கீழேயும் மக்கள், மற்றும் அதிகாரிகள் இருப்பார்கள். எத்தகைய ஏற்பாடு. அங்கு நின்றுகொண்டு நடுவில் பொன்னும் மணியும் வைரமும் வைத்திழைத்த பட்டும் பகட்டுமான ஆடையணிந்த அக்பர் சக்கரவர்த்தி! நான்கு வழிகளும் சுற்றிலுமுள்ள காலரிகளில் அறிவாளிகள் பலர்—கற்பனை செய்து பார்த்தபோது என் உடல் புல்லரித்தது, மகோன்னதமாக விளங்கிய மொகலாயர்களின் ஆட்சிக் காலத்துக் காட்சிகள்.

இதே மாதிரி அக்பர் அழகிகளைக் காய்களாக நிற்க வைத்து செஸ் விளையாடிய இடமும் அற்புதமான காட்சிப் பொருள். தரையிலேயே வெள்ளை—கறுப்புச் சலவைக்கல் பதிக்கப்பட்ட சொக்காட்டான் அமைப்பு. நடுவில் அக்பர் அமரப் பளிங்கு மேடை. உயிருள்ள அழகுப் பதுமைகளை கட்டங்களில் காய்களாக நிற்கச் செய்து ஆட்டத்திற்கு ஏற்ப அவர்களைக் கட்டங்களில் மாறி நிற்க உத்தரவு பிறப்பித்தபடி விளையாடுவாராம்!

அடுத்தது பஞ்ச மஹால்! அடுக்கடுக்காக ஐந்து உப்பரிகைகளைக் கொண்ட கட்டிடம். கீழுள்ளதுக்கு

அடுத்து மேலே கொஞ்சம் சிறியது; அதற்கடுத்தது அதைவிடச் சிறியது; உச்சியிலுள்ள ஐந்தாவது சின்னஞ் சிறியது. அக்பரின் அவையிலிருந்த ஒரு சீன சிறபி இதை வடிவமைத்திருக்க வேண்டுமென்று சிலர் நினைக் கிறார்கள்.

சிக்ரியில் இருக்கும் குதிரை லாயம் மிகப் பெரியது; நூற்றுக்கணக்கான குதிரைகளுக்கு இடமளிக்கும் வகையில் மிக அழகாக அற்புதமாகக் கட்டி இருக் கிறார்கள். குதிரைகளைப் பிணைக்கக் கல்லிலேயே வளையங்களை அமைத்திருப்பது அபாரம்.

மொகலாய மன்னர்களிலேயே மிகத் திறமையாக வும் சிறப்பாகவும் அரசாண்டவர் அக்பர். இஸ்லாமைத் தவிர பிற மதங்களையும் மதித்த பண்பாளர். பகை மையை மறந்து ஒற்றுமையாக வாழவேண்டும் இந்துக் களும் முகமதியர்களும் என்று விரும்பியவர். பல சீர்திருத்தங்களை ஆட்சி முறையில் செய்த இவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்கிறார்கள். வியப்பான செய்திதான்.

சிக்ரியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் மதுரா போகும் மார்க்கத்தில் சிக்கந்தரா என்னுமிடத்தில் அக்பரின் சமாதி இருக்கிறது. இந்தச் சமாதியை பெரிய நந்தவனம் சூழ்ந்திருக்கிறது. தோட்டத்துக்குள் நுழையும் வாசல் சிகப்பு சுக்கான் கல்லால் கட்டப் பட்டிருக்கிறது—இடைஇடையே வெள்ளைச் சலவைக் கற்களைப் பலவிதமாக அமைத்து அழகுபடுத்தப்பட் டிருக்கிறது. நான்குமாடிகளைக்கொண்ட கட்டிடம் இந்த சமாதி. ஒவ்வொரு மூலையிலும் வெள்ளைச் சலவைக் கல்லாலான மினாரட் எனப்படும் கோபுரங்கள். சமாதி யின் உயரம் 74 அடிகள். இதைக் கட்டி முடிக்கப்

பதினைந்து லட்ச ரூபாய்கள் ஆயிற்றும்—அப்போதே! மாமன்னர் அக்பருக்குப் பொருத்தமான நினைவுச் சின்னம்தான். அவரது நிஜமான சமாதி கட்டிடத்தின் கீழ்தளத்தில் இருள் நிறைந்த பகுதியில் இருக்கிறது. அதே மாதிரியான நகல் சமாதியே நான்காம் மாடியின் உச்சியிலிருக்கிறது—வெள்ளைச் சலவைக் கல்லால் ஆன இதில் ஆண்டவனின் 99 திருநாமங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆக்ராவிலிருந்தும் ஃபதேபூர் சிக்ரியிலிருந்தும் கிளம்ப மனமின்றிக் கிளம்பி மதுரா வந்து சேர்ந்தோம். கண்ணன் பிறந்த இடமாயிற்றே. கதைகள் பல கேட்டிருக்கிறோம்; அவற்றைக் கண்ணால் காணப் போகிறோம் என்ற களிப்புடன் பயணப்பட்டோம்.

மதுரா

நம் தமிழகத்தில் இருப்பது மதுரை—வடநாட்டில் இருப்பது—மதுரா—வட மதுரை. பாகவதப் பிரியர்களுக்கும் வைணவப் பக்தர்களுக்கும் விருப்பமான இடம் மதுரா. கண்ணன் அவதாரம் செய்து விளையாடி, அற்புதங்கள் பல செய்த க்ஷேத்திரமாயிற்றே. யமுனா நதி தீரத்தில் இருக்கிறது மதுரா. கம்சனைக் கொன்ற இடம், கம்சனின் கோட்டை, காளிங்க நர்த்தனம் நிகழ்த்திய மடு ஆகிய புராணப் புகழ் பெற்ற இடங்களைக் காட்டுகிறார்கள். பக்தியோடு பார்ப்பவர்களுக்குப் பரவசமேற்படும். கம்சனைக் கொன்றதினால் ஏற்பட்ட களைப்புத் தீரக் குளித்து ஓய்வெடுத்துக் கொண்டதாக ஒரு இடமிருக்கிறது. இதற்கு விச்ராந்திகாட் என்று கூறுகிறார்கள்—யமுனை நதிக் கரையில்தான். கண்ணனோடு தொடர்புடைய இடங்களெல்லாம் யமுனை நதிக்கரையில் இல்லாமல் வேறு எங்கே இருக்கும்? கண்ணன் அவ

தரித்த இடத்துக்கருகிலேயே மொகலாயர்கள் ஒரு மசூதியைக் கட்டியிருக்கிறார்கள்.

கண்ணனைக் காட்சிப் பொருளாக்கிக் கடைச்சரக் காக்கிக் காசு பண்ணப் பார்ப்பவர்கள் அங்கு ஏராளம். வீட்டுக்கு வீடு கண்ணன் சிலைகள், ஆடல் பாடல்கள், பஜனைகள், கொலு வைப்பதுபோலப் பல பளிங்குச் சிலைகளை வைத்து அழகுபடுத்தி, வீதியில் போவோரை யெல்லாம் வருந்தி அழைத்துத் தரிசனம் செய்துவிட்டுப் போகும்படி கூறுகிறார்கள். தரிசனம் என்றால் சும்மாவா? காணிக்கை, உண்டியல், இத்யாதிகளுக்கு பணம் வசூலிக்கிறார்கள். இதனாலெல்லாம் நிஜமான பக்திக்கு மாசு ஏற்பட்டு வருகிறது. அவர்கள் கூறும் பலவிதமான கதைகள் கண்ணனின் வாழ்வில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளையும் போலியாக்கி விடுகின்றன. இப்படிப் பணம் பிடுங்கும் உத்தியை உதறிவிட்டு யாத்திரிகர்களிடம் உண்மையோடு நடந்து கொண்டால் நாட்டுக்கும் அவர்களுக்கும் நல்லது. ஆனால் அப்படிச் செயல்பட்டால் அவர்கள் வாழ முடியாது. இதை நம்பியே அல்லவா வாழ்கிறார்கள்.

மதுராவிலிருந்து ஏழு மைல் தொலைவில் யமுனை நதிக்கரையில் பிருந்தாவனம் இருக்கிறது. புண்ணிய பூமி. கண்ணன் வளர்ந்ததெல்லாம் பிருந்தாவனத்தில் தானே? ஆநிறைகளைக் குழலூதி மேய்த்த இடம் இது தான். கோபிகைகளோடு குலாவித் திரிந்த இடம். அவர்களின் ஆடைகளைக் கவர்ந்து அழ வைத்து ஆனந்தித்த இடம் எல்லாம் கண்டு களித்தோம். பிருந்தா வனம் போகும் வழியிலேயே பிர்லா டிரஸ்டினர் கட்டி இருக்கும் பிர்லா மந்திர் என்ற கண்ணன் கோயில் உள்ளது. அழகிய பெரிய கிருஷ்ணன் சிலையோடு கோயில் மிக மிகச் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரு

கிறது. நவீன கோயிலானாலும் நன்கு பராமரிக்கப் பட்டு வருகிறது.

தென்னாட்டுப் பாணியில் திரு ரெங்காச்சாரியார் என்ற ஐயங்கார் ஒருவரால் கட்டப்பட்டுள்ள விஷ்ணு ஆலயத்துக்குப் போய் தரிசனம் செய்தோம். ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த அர்ச்சகர்தான் அங்கு பூஜை செய்கிறார். நாங்கள் பரஸ்பரம் சந்தித்துப் பேசிக்கொண்டதில் அவருக்கும் எங்களுக்கும் மகிழ்ச்சி. இருக்காதா பின்னே? அன்றிரவு மதுராவிலிருந்து கிளம்பிமறுநாள் காலை டெல்லி போய்ச் சேர்ந்தோம்.

டெல்லி

பாரதத்தின் தலைநகரும் பல சாம்ராஜ்யங்கள் பிறந்து வளர்ந்து அழிந்த இடமுமான டெல்லியில் எங்களை வரவேற்கப் புகை வண்டி நிலையத்துக்கே புடைசூழ வந்திருந்தார்கள் நண்பர்கள். நண்பர் ராமனாதன் செட்டியார் அவர்களின் பங்காளி அரிமழம் மாணிக்கம் அவர்கள், டெல்லி இந்தியன் வங்கியில் பணிபுரிகிறார்கள். அவர் தம் துணைவியர் திருமதி சாலா அவர்களுடன் ரயில் நிலையத்திலேயே எங்களை எதிர்கொள்ள வந்து விட்டார்கள். உபசரிப்பும் விருந்தோம்பலும்; டெல்லியைச் சுற்றிக் காண்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் மாணிக்கம் அவர்கள்.

பஞ்சாப், ராஜபுதனம், மத்தியப் பிரதேசம் ஆகியவற்றுக்கு இடையில் இருக்கிறது டெல்லி. நீண்ட நெடுங் காலத்திலிருந்தே டெல்லி பாரதத்தின் தலைநகராகவோ அல்லது முக்கிய பங்கு வகித்தோ வந்திருக்

கிறது. பிரிட்டிஷாரின் ஆட்சியில் ஆரம்பத்தில் கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்டிருந்தாலும் பிறகு 1911ல் டெல்லியையே தங்கள் தலைநகராக மாற்றிக் கொண்டார்கள் கல்கத்தாவைவிட டெல்லி நாட்டின் நடுவில் இருப்பதாலும் சரித்திர பாரம் பரியம் மிக்கதாக விளங்குவதாலும் டெல்லி மீண்டும் தலைநகராகும் தகுதியைப் பெற்றது. இன்றோ இந்தியாவில் எல்லாப் பாகங்களையும் இணைக்கும் ரயில், ரஸ்தா, விமானப் போக்குவரத்துக்களுக்கு மத்திய கேந்திரமாக விளங்குகிறது.

மகாபாரத காலத்திலிருந்தே டெல்லி புகழ் பெற்று விளங்குகிறது. தருமபுத்திரரான யுதிஷ்டிரர் முதன் முதலில் இன்றைய டெல்லி நகரை நிர்மாணித்தவர். அப்போது அதற்கு இந்திரப்ரஸ்தம் என்று பெயர். அதன் பிறகு எத்தனையோ நூற்றாண்டுகள்—அடுத்து அடுத்துத் தோன்றிய மன்னர் பரம்பரைகள்—பாரதத்துக்கே அன்னியமானவர்களும்கூட இதை வென்று ஆண்டு சண்டையிட்டு அழிந்து மறுபடி எழுந்திருக்கிறார்கள் இந்த இந்திரப்ரஸ்தத்திலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும். அப்படி அவர்கள் வெற்றி கண்டு வாழ்ந்தபோது கோட்டைகளையும் மாடமாளி கைகளையும் கட்டி இருக்கிறார்கள். எதிரிகள் இவர்களை வெற்றி கொண்டபோது இவர்கள் நிர்மாணித்த கட்டிடங்கள் அழித்துத் தரை மட்டமாக்கி இருக்கிறார்கள். அப்படி எழுந்து அழிந்த கோட்டை கொத்தளங்களின் இடிபாடுகள் நினைவுச் சின்னங்களாக இப்பகுதிகளிலும் இறைந்து கிடப்பதைக் காணலாம். இப்படியான புராதன நினைவுச் சின்னங்கள் மட்டும் இன்றைய டெல்லியைச் சுற்றிலும் நாற்பது மைல்கள் வரை வியாபித்திருக்கின்றன.

பதினாறும் நூற்றாண்டில் மொகலாயர்கள் டெல்லி யில் வலுவாகக் காலூன்றியபோது இது மிக முக்கிய மான நகரமாக விளங்கியது. மொகலாய அரசர்கள் கோலாகலமாகக் கொலுவீற்றுச் சபை கூட்டி நாட்டை நிர்வாகம் செய்யக் கம்பீரமான கண்கவர் கட்டிடங்கள் தேவைப்பட்டன. பொக்கிஷங்களையும், விலையுயர்ந்த பொருள்களையும் பாதுகாக்க வேண்டாமா?

டெல்லியிலுள்ள கோட்டையும் அதனுள் இருக்கும் கட்டிடங்களும் உருவாக ஆரம்பித்தது 1638 ம் ஆண்டில். அற்புதமான கட்டிடங்களை எழுப்பும் ஆற்றலும் கலையுள்ளமும் கொண்ட மன்னர் ஷாஜஹான்தான் இதை நிர்மாணிக்கத் திட்டமிட்டவர். அவர் கனவு — கட்டிடங்களாக நினைவாக ஒன்பது ஆண்டுகளாயின. இன்றும் நல்ல நிலையிலே, நானிலத் தோர் எல்லாம் கண்டு மகிழும் கலைப்படைப்புக்களாக விளங்குகிறது. ஆக்ராவிலிருந்த தலைநகரை டெல்லிக்கு மாற்றியவர் ஷாஜஹான்தான். வளர்ந்து பெருகிய மொகல் சாம்ராஜ்யத்தின் நிர்வாக அமைப்புக்கு அதிக இடம் தேவைப்பட்டது. ஆக்ராவில் பற்றாக்குறையோடு அதிக வெப்பமும் குறுகலான வீதிகளும், சமதளமாக இல்லாத மேடுபள்ளமான பூமியும் ஆக்ராவைக் கைவிட்டு டெல்லித் தலைநகரை மாற்றும்படிச் செய்தது.

டெல்லிக் கோட்டையும் அரண்மனைகளும் சிகப்புக் கற்களால் கட்டப்பட்டிருப்பதால் இதற்குச் செங் கோட்டை என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது. செங் கோட்டையில் கண்டுகளிக்க வேண்டிய பகுதிகள் பலப்பல. திவானி ஆம் என்ற தர்பார் ஹால் அவற்றில் ஒன்று. மக்களுக்குப் பேட்டி தரும் முறையில் சபை

கூட்டித் தரிசனம் தரும் ஹால் இது. மக்களின் குறை களைக் கேட்பதும், வழக்குகளுக்குத் தீர்ப்பளிப்பதும் இந்த ஹாலில் அமர்ந்து கொண்டுதான். மிகவும் ஏழை எளிய குடிமகனும்கூட மன்னரைச் சந்திக்கலாம்; தன் குறையைக் கூறலாம். இந்த திவானி ஆமில் மன்னரின் அரியணை உயர்ந்ததோர் பீடத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. எல்லாரும் அவரைக் காணும் படியாக மன்னரின் இந்த அரியணையின் கீழே அதிகாரிகள் நின்றுகொண்டிருப்பார்கள், மன்னரின் கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்ற. சிம்மா சனத்திலிருந்து சற்றுத் தள்ளி—இருபுறமும் ஒருவரை ஒருவர் பார்க்கும்படியாக வரிசையாக இளவரசர்களும் பிரபுக்களும் அமர்ந்திருப்பார்கள்—கம்பீரமான ஆடை யாபரணங்கள் அணிந்து கொண்டு—இடையில் வாள் துலங்க. அந்த தர்பார் எப்படிக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும் என்பதை நாங்கள் திவானி ஆமில் நின்று கற்பனை செய்து பார்த்து மகிழ்ந்து போனோம்.

திவானி காஸின் அழகையும் அமைப்பையும் பார்க் கும்போது திவானி ஆம் ஒன்றுமே இல்லை என்று கூறி விடலாம். திவானி காஸ் என்பது மன்னர் முக்கிய ஆலோசனை நடத்தும் கூடம்; 90 அடி நீளமும் 67 அடி அகலமும் கொண்டது இந்த ஹால். ஷாஜஹான் நிர்மாணித்த பல அற்புதக் கட்டிடங்களுள் இதுவும் ஒன்று. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் வண்ண வண்ண படுதாக்களும், விரிப்புக்களும் அழகுபடுத்தப் பட்ட நிலையில் இது ஓர் சுவர்க்கபுரியாகவே இருந் திருக்கும். இதன் நெடுதுயர்ந்த வளைவு விதானங்களில் (ஆர்ச்சஸ்) பாரசீக மொழியில் இப்படியே பொறிக்கப் பட்டுள்ளது. "நில உலகில் ஓர் சொர்க்கம் உண்டானால் அது இதுதான், இதுதான், இதுதான்!"

இந்தக் கம்பீரமான கூடத்திலேதான் உலகப் புகழ் பெற்ற மயிலாசனம் வைக்கப்பட்டிருந்ததாம். கட்டித் தங்கத்தினுல் செய்து அதில் வைரங்களும் வைடூர்யங் களும் வைத்து இழைக்கப்பட்ட அற்புதமான அழ குடைய ஆசனம் அது. மயில் போன்ற அமைப்புக் கொண்டது. கற்களிழைக்கப்பட்ட தூண்களை நிறுத்தி அதன்மீது விதானமெழுப்பி அதன் கீழே இந்த அற்புத மயிலாசனம் வைக்கப்பட்டிருந்ததாம்; தூண் களிலும் மயிலின் தோற்றம். இந்தப் புகழ் பெற்ற மயிலாசனத்தை உருவாக்க ஏழு ஆண்டுகளாப யிற்றும். இதன் மதிப்பு பன்னிரண்டு மிலியன் பொற்காசுகள். இவ்வளவு மதிப்பும் மகிமையும் பெற்ற இந்த அரிய மயிலாசனத்தை நாதிர்ஷா, 1739ல் டெல்லியை வெற்றி கொண்டு புகுந்தபோது பல கொள்ளைப் பொருள்களுடன் இதையும் தன்னுடன் பாரசீகத்துக்குக் கொண்டு போய் விட்டான். அன்று நம்மை விட்டுப் போன இந்த மயிலாசனம் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை.

ராணிகளின் அந்தப்புரமான ரங்மஹால் மற்று மோர் ஒப்பற்ற கலைக்கூடம். நதியை நோக்கியபடி இருக்கும் இதன் அழகான உப்பரிகைகளிலிருந்து ராணிகளும், ராஜகுமாரிகளும் கோட்டை வாசலில் பரந்த மணற்பரப்பில் நிகழும் யானைச் சண்டையைப் பார்த்து மகிழுவார்களாம். மன்னரின் பொழுது போக்குக்காக ஏற்பாடு செய்யப்படும் கேளிக்கைகளில் ஒன்று யானைச் சண்டை.

கண்களை மூடியபடிக் கற்பனை உலகிலே சஞ்சரிக் கும் வல்லமை இருக்குமானுல் அற்புதமான காட்சியிலே நீங்கள் மிதக்க முடியும். திவான் இ காஸ் கூடம்—மயி லாசனத்திலே மாமன்னர் ஷாஜஹான் அமர்ந்திருக்

கிறார்—பிரபுக்களும், பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த அரச குமாரர்களும் பட்டும் பகட்டுமான ஆடையணி களிலே வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். போர் வீரர்கள், ராஜபுத்திர தளபதிகள்—அத்தர் மணம் கமழு கிறது. சந்தணமும் ஜவ்வாதும் அகிற்புகையும் கம கமக்கின்றன. அரசகுமாரர்களும் பிரபுக்களும் ஒவ் வொருவராகத் தங்கள் பட்டாடைகள் சரசரக்க மயிலா சனத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் ஷாஜஹானின் முன்னே போய் இடுப்பை வளைத்துச் சிரம் தாழ்த்தித் தங்கள் மரியாதையைத் தெரிவிக்க வணங்குகின்றனர். வீணையும் சிதாரும் ஙளினமாக இசைக்கின்றன. தபாலாக்கள் தடதடக்கின்றன. இனிமையான மெல்லிசை, கந்தர்வாகனம், மன்னர் ஷாஜஹான் மயிலா சனத்திலிருந்து எழுந்திருக்கிறார். அவையோரும் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து சிரம் தாழ்த்தி வணங்கி— மன்னர் செல்ல அனுமதியளிக்கிறார்கள். வெண்சாமரம் வீசுவோர் பின்தொடர ஷாஜஹான் ஜஞுஞுவிற்குள் நுழைகிறார்—இப்படி அவர் வாழ்ந்த காலத்துக் காட்சி களில் நம்மைப் பறிகொடுத்துப் போய்ப் பரவசமாக லாம்.

செங்கோட்டையிலிருந்து கிளம்பி சாந்தினி செளக் எனப்படும் பொற்கொல்லர் வீதிக்கு வருகிறோம். அன்று எப்படியோ, இன்று டெல்லியின் கோலாகலமான கடை வீதி சாந்தினி செளக்தான். அன்றுமே கூட இந்த அங்காடியில் பொன்னும் பொருளும் முத்தும் மணியும் அம்பாரி கட்டி வியாபாரம் நடந்ததாம். ஒட்டகங்கள் பூட்டிய வண்டிகள் நமக்குப் புதுமை. குதிரைகள் பூட்டிய டோங்கா, பட்பட் எனப்படும் ஆட்டோ, சொகுசுக் கார்கள், எப்போதும் ஜேஜே என்றிருக்கும் கடைவீதி.

இந்தியாவிலேயே மிகப் பெரிய மசூதி டெல்லி ஜும்மா மசூதி. சிகப்புக் கற்களாலும், வெள்ளைச் சலவைக் கற்களாலும் கட்டப்பட்டது இது. இதன் மினரட்டுகளையும் டோம்களையும் பல மைல்களுக்கு அப்பாலிருந்தே காணமுடிகிறது. இதுவும் ஷாஜ ஹானல் கட்டப்பட்டதுதான். மன்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தொழுகைக்கு இங்கு வருவாராம் தம் பரிவாரங்கள் சூழ. அவர் நுழையும் வாசல் கம்பீரமாக—பல படிக்களைக் கடந்து மேலே ஏறும்படியாக உள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் மசூதியின் பரந்த முற்றத்திலே வரிசையாக மண்டியிட்டமர்ந்து தலை தரையில் படியக் குனிந்து பிறகு நிமிர்ந்து நமாஸ் செய்யும் காட்சியை இன்றும் கண்டு மகிழலாம்.

டெல்லியைச் சுற்றி ஏராளமான நினைவுச் சின்னங்கள், இடிபாடுகள், சரித்திர முக்கியத்துவம் பெற்ற பகுதிகள் உள்ளன. இவற்றில் புராணகிலா முக்கியமானது. இந்து அரசர்கள் கட்டிய கோட்டைகளும் அரண்மனைகளும் இங்குண்டு. இந்திரப் பிரஸ்தம் எனப்படுவது இம்மசூதியே. இப்போது அங்கு காணப்படும் கட்டிடங்கள் ஹுமாயூன் மன்னரால் ஆரம்பிக்கப்பட்டு ஷெர்ஷாவினல் முடிக்கப்பட்டவை. புராண கிலாவின்; நடுவில் வட்ட வடிவமானதோர் கட்டிடம். இதை ஷேர் மகால் என்கிறார்கள். மன்னர் ஹுமாயூன் இதில் தனது வாசக சாலையை நிறுவி இருந்தாராம். இதன் படிகளில் கால் இடறி விழுந்து கழுத்தெலும்பு முறிந்து இறந்தார் ஹுமாயூன். ஹுமாயூனின் சமாதி மிகப் பெரிய தோட்டத்தினுள்ளே காணப்படும் பிரும்மாண்டமான கட்டிடம். தன் சமாதிக்கான இந்த இடத்தை அவரே தேர்ந்தெடுத்திருந்தாராம்.

நாங்கள் கண்டுகளித்தவைகளில் முக்கியமானது குதுப்மினுர் கோபுரம். புராதனமான இந்துக் கோயிலே இடித்து அதன்மீது எழுப்பப்பட்டது, இந்த மினுர். அடிமை வமிசத்து அரசனுன குதுப்புதீன் ஐபக் என்பவரால் 1200ம் ஆண்டில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது இக் கோபுரம். இதன் உயரம் 280 அடிகள். இதன் அடிப் பாகம் சிகப்புச் சுக்கான் கற்களால் ஆனவை இதில் பெரிய பெரிய அரபி எழுத்துக்களேச் செதுக்கி இருக்கிருர்கள். இவை குரானிலுள்ள பெயர்களாம். இதன் உச்சி வரை போக மாடிப்படிகள் உட்புறமாக அமைக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 379 படிகளேக் கடந்து உச்சிக்குப் போகலாமாம். ஆனுல் இதில் ஏறிக் கீழே குதித்துத் தற்கொலே செய்து கொள்ளுவோர் அதிகமாகிவிடவே இப்போது யாரையும் மேலே அனுமதிப்பதில்லே.

குதுப்மினுர் கோபுரத்துக்கு அருகிலேயே புகழ் பெற்ற இரும்புத் தூண் உள்ளது. 1630 ஆண்டுகளுக்கு முன்னே சந்திரா என்ற இந்து மன்னனுல் நிறுவப்பட்டது, இத்தூண். 24 அடி உயரமுள்ளது இத்தூண். வெட்ட வெளியில் இத்தனே காலமாக நின்றிருந்தும் அதில் துரு ஏருதது அதிசயம். துருப்பிடிக்காத இரும்பை உருக்கி வார்க்கும் விதத்தை அன்றே நமது மூதாதையர் அறிந்திருக்கிருர்கள் என்பது எத்தனே பெருமைக்குரியது.

அண்ணல் காந்தியடிகள் அமைதியடைந்த இடமான ராஜ்கட்டைப் பார்க்காமல் இருக்க முடியுமா? டில்லிக் கோட்டையிலிருந்து நான்கே பர்லாங் தூரத்திலிருக்கிறது ராஜ்கட். அழகான தோட்டத்தின் நடுவே அமைந்துள்ளது சமாதி மேடை. வெள்ளிக்கிழமை

தோறும் பஜனைகள் உண்டு. காந்திஜி பிறந்த, இறந்த தினங்களில் விசேஷமான விழா நிகழ்ச்சிகள் நடத்து கிறார்கள்.

இரும்புத் தூணைப் போலவே அசோகரால் நிறுவப் பட்ட மற்றோர் தூண் இருக்கிறது. அதையும் பார்த் தோம். 32½ அடி உயரமுள்ள இத்தூண் 1715ம் ஆண்டில் மின்னல் தாக்கிப் பின்னப்பட்டுப் பிறகு பிரிட்டிஷார் புதுப்பித்திருக்கிறார்கள்.

நாட்டின் முக்கிய இடங்களில் கோயில் எழுப்பும் குலமகனை பிர்லா அவர்கள் டெல்லியிலும் ஒரு கோயில் எழுப்பியுள்ளார். இது மிகவும் புகழ் பெற்றது. பிர்லா மந்திர் எனப்படும் இது ராஜா பால தேவ பிர்லாவால் 1938ல் கட்டப்பட்டதாகும். இங்கு லக்ஷ்மி நாராயணர், சிவன், துர்கை ஆகிய மூர்த்தங் களுக்குத் தனித்தனியே கோயில்கள் உள்ளன. கிருஷ்ண பகவானின் மிகப்பெரிய உருவச் சிலையும் உள்ளது. சுவரின் மேல் பகுதியில் மகாபாரத நிகழ்ச்சி கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. மந்திரின் மற்றோர் பகுதியில் புத்தர் கோயிலும் அவரது உப தேசங்களைக் கொண்ட சுவரோவியங்களும் உள்ளன. கோயிலைச் சூழ நந்தவனம் யாகசாலை முதலியனவும் இருக்கின்றன.

சாந்தினி சௌக்கைப்போலவே—அதைவிடவும் பிரபலமானது கானுட்பிளேஸ் என்ற கடைவீதி. அரை வட்டவடிவில் உள்ள இக்கட்டிடம் 1920-ல் இந்தியா வந்த டியூக் கன்னுட் என்பவரின் நினைவாக உருவாக்கப் பட்டது. கன்னுட் பிளேசில் கிடைக்காத பொருள்களே கிடையாது. இங்கு நாங்கள் ஷாப்பிங் செய்து கொண்டு தூக்கமாட்டாமல் பொருள்களைச் சுமந்து

கொண்டு நடந்தபோது வேட்டி கட்டிய தமிழர் ஒருவர் வெறுங்கையுடன் வீசி நடை போட்டுப் போவதைக் கண்டோம். எங்களுக்கு அதிசயமான அதிசயம் ஒரு தமிழர் டெல்லி வந்து, அதுவும் கன்னுட் பிளேஸில் ஒன்றும் வாங்காமல் கைவீசி நடந்து போகிருரே என்று நெருங்கி விசாரித்ததில், அவர் செங்கல்பட்டுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு மோகனரங்கம் என்பதைத் தெரிந்து கொண்டோம். பழகுவதற்கு இனியவரான அவர் கொஞ்ச நேரத்தில் எங்கள் நண்பராகிவிட்டார். அவரிடம் பாராளுமன்றம் காணவேண்டுமென்ற எங்கள் ஆவலைத் தெரிவித்தோம். "உங்கள் ஆவலைப் பூர்த்தி செய்விப்பது என் கடமை. நாளை காலை ஒன்பதுமணிக்கு வாருங்கள். ஏற்பாடு செய்கிறேன்" என்ருர்.

எங்களுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அங்கு போனேம். திரு மோகன ரங்கம் எம்.பி. அவர்கள் எங்களுக்காகக் காத்திருந்து எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்து, சிற்றுண்டி அளித்து உபசரித்ததோடு—என்னல் இன்னும் ஏதாவது உதவி தேவையானல் டெலிபோன் செய்யுங்கள் என்று கூறித் தம் டெலிபோன் நம்பரையும் கொடுத்தார். அவர் அன்பை, பண்பை எங்களால் மறக்கவே முடியாது.

1927-ம் ஆண்டில் ராபர்ட் இர்வின் துரையினுல் கட்டப்பட்டது பார்லிமெண்ட் கட்டிடம். அரை மைல் சுற்றளவில் அமைந்துள்ள இக்கட்டிடத்தினுள்தான் லோக்சபை ராஜ்யசபை அங்கத்தினர்கள் கூடுகிருர்கள். மூன்று பெரிய தனித்தனி அமைப்புக்களைக் கொண்ட பகுதிகள் (சேம்பர்) உள்ளன. தோட்டங்களும், நீர்நிலைகளும் இப்பகுதிகளைப் பிரிக்கின்றன.

பார்லிமெண்ட் தவிர செக்ரடேரியட் கட்டிடமும் பார்க்கவேண்டியவைகளுள் ஒன்று. 1929-ல் சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இங்கு ஆயிரம் அறைகள் உள்ளன. இதன் வராண்டாவின் நீளம் எட்டுமைல்கள். வெயில் காலத்தில் குளு குளு படுத்தவும் பனிக்காலத்தில் கத கதப்பு ஏற்படுத்தவும் வசதிகளைக் கொண்டது. அரசாங்க அலுவலகக் கட்டிடங்களிலேயே மிகப் பெரியதும், சகல வசதிகளும் நிரம்பியதுமான இதுபோல உலகிலேயே வேறு கிடையாது என்கிறார்கள். இக் கட்டிடத்தின் வடக்குப் பகுதியில் போர், சமாதானம் கால மாறுதல்களைக் குறிக்கும் ஓவியங்களும்—தென்பகுதியில் புண்ணிய ஸ்தலங்களும், பண்டைய மன்னர்களின் ஓவியங்களும் அலங்கரிக்கின்றன.

அடுத்து டெல்லியில் நாங்கள் பார்த்து மகிழ்ந்தது ராஷ்டிரபதி பவனம். 320 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ள இங்குதான் ராஷ்டிரபதியான பாரத நாட்டின் பிரசிடெண்ட் வசிக்கிறார். மாளிகையின் பின் பக்கத்திலே அற்புதமான தோட்டம், எம்மதத்தினரும் விரும்பிக் களிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இரவு நேரத்தில் இதன் அழகை எழுத வார்த்தைகள் கிடையாது.

முதல் உலகப் போரில் உயிர்நீத்த இந்திய வீரர்களுக்கு நினைவு அஞ்சலியாக எழுப்பப்பட்டுள்ளது இந்தியா கேட் என்னும் வாசல் வளைவு. 1912-ல் கட்டப்பட்ட இதையும் பார்த்தோம்.

டெல்லி செங்கோட்டையில் ஒருநாள் இரவு ஒலி ஒளிக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தோம். மொகலாயர்கள் இந்தியாவிற்கு வந்தது, அதன் பிறகு வெள்ளையரின்

வருகை, அவர்களுடன் போராடி சுதந்திரம் பெற்றது வரை ஒப்பற்ற முறையில் தத்ரூபமான காட்சியாக விசேஷ ஒலி உதவியுடன் (ஸ்டீரியோ ஃபோனிக் சவுண்ட்) சித்திரித்துக் காட்டுகிறார்கள். திறந்த வெளி அரங்கில் அமர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் காணும்படி வசதி செய்திருக்கிறார்கள். இந்திய வரலாற்றைச் சரித்திரச் சான்றுகளோடு, கண்டு களிக்க ஒரு வாய்ப்பு இப்படி ஒளி ஒலிக் காட்சிகள்.

எங்கள் டெல்லி விஜயத்தின்போது இப்போதைய பிரதமராக இந்திராகாந்தி அம்மையாரை அவரது இல்லத்துக்குப் போய் எங்களை நாங்களே அறிமுகப் படுத்திக் கொண்டு சில நிமிஷங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அந்தக் கொஞ்ச நேரத்தில் அங்கு பல அரசியல் தலைவர்களைக் காணும் வாய்ப்பும் கிடைத்தது.

பிர்லா மாளிகைக்குப் போய் காந்தி மகாத்மா கடைசியாக வாழ்ந்த இடம், அவர் பிரார்த்தனை நடத்திய மைதானம், சுடப்பட்ட இடம் ஆகியவற்றையும் அவர் புழங்கிய பொருள்கள், அமர்ந்திருந்த திண்டு முதலியவற்றையும் முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான புகைப்படங்களையும் கண்டு களித்தோம். காந்தியடிகள் கடைசியாக நடந்த பாதையில் அவர் காலடிகளைச் சிமிண்டினால் அடி அடியாக அமைத்திருக்கிறார்கள். பவித்திரமான அக்காலடிகளையும் கோட்ஸே சுட்டு விழுந்த பூமியையும் கண்டு கண் கலங்கினோம்.

இதேபோல நேரு கடைசியாகப் பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த இடமான தீன் மூர்த்தி

பவனுக்கும் போய்ப் பார்த்தோம். நேருவின் பிறப்பிலிருந்து இறப்பு வரையுமான எண்ணற்ற புகைப் படங்கள் இங்குள்ளன. அவரது படுக்கையறையில்—கடைசி காலத்தில் அங்கிருந்த பொருட்களை அப்படியே வைத்து நினைவுச் சின்னமாக்கியுள்ளார்கள். நேரு இங்கிலாந்தில் படிக்கும்போது அவர் படித்த யுனிவர்சிடியின் நான்கு வாயில்களிலும் நேருவை ஏற்றிச் செல்ல நான்கு கார்கள் நிறுத்தப்பட்டிருக்குமாம். மாணவர் நேரு எந்த வாயில் வழியாக வருகிறாரோ என்று புரிந்து கொள்ள முடியாமல் நான்கு வாயில்களிலுமே கார்களை நிறுத்தி வைக்குமளவுக்குச் சீமானாக வாழ்ந்தவர் நேரு. இங்கிலாந்தின் இளவரசருக்கே ஒரு கார்தான் வருமாம். அப்படிப்பட்ட பெருமகனார் தம் சொத்து சுகங்களை இழந்து பாரத நாட்டின் விடுதலைக்காக எப்படியெல்லாம் பாடுபட்டிருக்கிறார் என்பதை, தீன் மூர்த்தி பவனிலுள்ள புகைப்படக் காட்சிகள் கதை கதையாகச் சொல்லுகின்றன.

காந்தி, நேரு, லால்பகதூர் ஆகியோர் தகனம் செய்யப்பட்ட புண்ணிய பூமிகளைத் தரிசனம் செய்து கொண்டு டில்லியிடம் விடை பெற்றுக் கொண்டோம்.

பம்பாயைவிட டில்லியில் வியாபாரமும் பணப் புழக்கமும் குறைவு. டாக்ஸிக்காரர்கள் ஓரளவு நாணயமுடனிருக்கிறார்கள். தென்னகத்தைவிட சினிமா விளம்பரங்கள் குறைவாகவே இருக்கின்றன. டெல்லியின் முதல் தரமான ஒரு தியேட்டரில் போய்ப் படம் பார்த்தோம். அது சென்னை பெங்களூரின் ஒரு சாதாரணத் தியேட்டரைப் போலிருந்தது. கோயில்களிலும், சினிமா தியேட்டரிலும் நம் தமிழகத்துக்கு இணையாக வேறு எங்குமே காண முடியவில்லை.

ஜெய்ப்பூர்

டெல்லியிலிருக்கும்போதே இடையில் ஜெய்ப்பூர் போய் வந்தோம். ஒரு காலத்தில் 15,600 சதுர மைல்களைக் கொண்ட தனி சமஸ்தானமாக இருந்தது இது. ஜெய்ப்பூர் சமஸ்தானத்துக்கு ஜெய்ப்பூர் தலைநகராக விளங்கியது. நகரைச் சுற்றிக் கோட்டை; அதில் ஏழு நுழைவாசல்கள். தெருக்களின் அகலமும் சுத்தமும் அழகும் நமக்குப் பிரமிப்பூட்டுவனவாக உள்ளன. பிரதானமான சாலைகள் நூறுஅடிகளுக்கும் மேலான அகலமுடையவை. கலகலப்பான கடை வீதிகள் கண் கொள்ளாக் காட்சியளிக்கின்றன. பித்தளையில் எனுமல் பதித்த வேலைப்பாட்டுக்குப் புகழ் பெற்றது ஜெய்ப்பூர். வான ஆராய்ச்சி நிலையங்களான ஐஸ்தில் (ஐந்த்ரா) மிகப் பெரியது இங்குதானிருக்கிறது. மகாராஜா இரண்டாம் ஜெய்சிங் அவர்களால் 1728ல் அமைக்கப்பட்டது இது. இதன் முற்றத்தில் விநோதமான வடிவங்களைக் கொண்ட அமைப்புக்களைச் செங்கல்லினுல் கட்டி, சுண்ணும்பு பூசி உருவாக்கி இருக்கிறுர்கள். இவைகளைக் கொண்டு எப்படி நட்சத்திரங்களையும் கிரகங்களையும் ஆராய்கிறுர்கள் என்பது எங்களுக்குத் தெரியாவிட்டாலும், உலகப் புகழ் பெற்ற இவைகளைக் கொண்டு துல்லியமான கணிப்புக்களை உணர முடியுமாம்.

சரித்திரத்திலே அழியாத இடம் ஜெய்ப்பூருக்கு உண்டு. முகலாயர்களுக்கு நண்பர்களாக, சேனுபதிகளாக, சம்பந்திகளாக வாழ்ந்து புகழ் பெற்றவர்கள் ஜெய்ப்பூர் சமஸ்தானத்து மன்னர்கள். ராணி காயத்ரி தேவி இம் மன்னர்களின் வழி வந்தவர்தானே. செல்வம் கொழிக்கும் சமஸ்தானமாக விளங்கியது ஜெய்ப்பூர். ஜெய்ப்பூரில் காணவேண்டிய கட்டடங்களுள்

முக்கியமானது ஹவாய் மகால்—காற்று மாளிகை. ஏராளமான ஜன்னல்களைக் கொண்ட நெடுதுயர்ந்த அழகு மிக்க கட்டிடம் இது.

ஜெய்ப்பூர் டவுனிலிருந்து ஐந்தாவது மைலில் மன்னர் வாழ்ந்த அரண்மனை இருக்கிறது. ஆம்பர் அரண்மனை என்று பெயர். மலை வரிசையினிடையே ஒரு சிறிய குன்றில் கட்டப்பட்டிருக்கிறது ஆம்பர் அரண்மனை. அங்கு ஒரு கூடத்தில் ஏராளமான சிறுசிறு கண்ணாடிகளைச் சுவர்களில பதித்திருக்கிறார்கள். நம் சிறுசிறு உருவங்களை ஆயிரக்கணக்கில் பிரதிபலிக்கின்றன. ராஜாமான்சிங்கும் அவர் புதல்வர் ஜெய்சிங்கும் வாழ்ந்த மாளிகைகள் உள்ளன. இங்குள்ள ஓர் அறையில் வண்ணக்கற்களில் உலகின் முக்கிய தலங்களையும் அங்குள்ள தல மூர்த்தங்களையும் ஓவியங்களாக வரைந்து வைத்திருக்கிறார்கள். இத் தெய்வங்களைத் தரிசித்துவிட்டுத்தான் மன்னர் உணவு உட்கொள்ளுவாராம். கைடு இதை எங்களுக்கு விளக்கிய போது பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன், திருச்செந்தூர் முருகப்பெருமானுக்குக் காலை அபிஷேக ஆராதனை நடந்ததை அறிவிக்க மைலுக்கு ஒரு முரசாக வைத்து அதன் சத்தம் கேட்டதும் திருச்செந்தூர்க் கந்தவேளை மானசிகமாகத் தியானித்த பிறகே உணவு அருந்தச் செல்லுவார் என்று சொல்லிக் கேட்டிருந்தது நினைவுக்கு வந்தது. அரசர்களின் பிரதேசம் வேறுபட்டாலும் பக்தி ஒன்றுதான் என்பது கண்டு வியந்தோம்.

அரண்மனையில் ஓர் அம்பிகையின் கோயில் உள்ளது. அதன் கதவு, வாசல்படி, டமாரம் எல்லாமே வெள்ளியினால் ஆனது. கோயில் முழுதும் சலவைக்கல்

பதிக்கப்பட்டுள்ளது. அழகிய கோயில். அரண்மனை மலையில் இருப்பதினால் யானையின்மீது செல்லலாம். நடந்தும் போகலாம். நாங்கள் "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்றபடி அம்பாரி வைத்த யானைக்கு ஐம்பது ரூபாய் வாடகை பேசிக் கொண்டு மன்னர்களாகப் போனோம். சில வெளிநாட்டுக்காரர்களிடம் நூறுரூபாய் வாங்கி இருந்தார்கள் யானைச் சவாரிக்கு. நாங்கள் இந் நாட்டு மன்னர்கள்! அவர்களோ வெளி நாட்டு மன்னர்கள்! அதனால்தான் இரட்டிப்பு வாடகை.

ஜெய்ப்பூரிலிருந்து உதயப்பூர் போவதாக உத்தேசம். ஆனால் உதயப்பூருக்கு விஜயம் செய்யும் வாய்ப்புக் கிட்டவில்லை. டெல்லியிலிருந்து ஜெய்ப்பூர் மீட்டர்கேஜ் பாதை. ஆகவே எங்கள் சொகுசுக் கோச்சை டெல்லியிலேயே விட்டுவிட்டு, மீட்டர்கேஜ் ரயிலில் ஜெய்ப்பூர் வந்திருந்தோம். முதல் வகுப்பு டிக்கட் இருந்தும், அது ஓபன் டிக்கெட்டானதினாலும் உதயப்பூர் செல்லும் ரயிலில் ஏகக் கூட்டமாக இருந்த தாலும முதல் வகுப்பில் எங்களுக்கு இடம் கிடைக்க வில்லை. ஆகவே உதயப்பூர் பயணத்தை ரத்து செய்யும் படியாயிற்று. டில்லி திரும்பிவிட முடிவு செய்தோம். அதிலும் ஒரு சங்கடம். டெல்லி போகப் பாதிப் பேருக் குத்தான் முதல் வகுப்பில் இடமிருந்தது. நாங்கள் மொத்தம் பதினொரு பேர்கள். ஆறு பேருக்கு மட்டுமே முதல் வகுப்பில் இடம் இருந்தது. என்ன செய்வது? ஸ்டேஷன் சூப்பிரண்டைப் பார்த்து எங்கள் நிலைமையை விளக்கினோம். ஒரே குழுவாகப் பயணம் செய்யும் எங்களில் ஐவருக்கு இடமில்லையே என்ன செய்ய என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே, எங்களில் ஒருவர் சீடை(பட்சணம்)யைக் கடுக்கென்று கடிக்க, அது படக்கென்று அவர் பல்லிலிருந்து விடுபட்டு சூப்பிரண்

டின் வழுக்கைத் தலையில் பட்டென்று தாக்க விபரீதம் விளைந்துவிட்டது. ஆறு இடங்களையுமே மூன்ருகக் குறைத்துவிட்டார்! அந் நிலையில் என்ன செய்ய முடியும்? பெண்களை முதல் வகுப்பில் அனுப்பிவிட்டு, ஆண்கள் அனைவரும் இரண்டாம் வகுப்பில் உட்கார்ந்த படியும் நின்றுகொண்டும் பிரயாணம் செய்து டெல்லி போய்ச் சேர்ந்தோம்.

அமிர்தசரஸ்

சீக்கியர்களின் புனித க்ஷேத்திரமான அமிர்த சரஸுக்கு இரவு டில்லியிலிருந்து கிளம்பி மறுநாள் காலை வந்து சேர்ந்தோம். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரம் அம்ருத்ஸர். அமிர்தம் நிறைந்த குளம் என்பது இதன் பெயர். இங்குதான் சீக்கியர்களின் புகழ் பெற்ற பொற்கோயில் உள்ளது. சீக்கியர்களின் நான்கா வது குருவின் பெயர் ராம்தாஸ் என்பது. இவர் 1577ல் இப்பகுதியிலுள்ள புனிதமான ஒரு குளத்தை விலைக்கு வாங்கினர். இக்குளத்தைச் சுற்றி ஒரு பெரிய நகரை நிர்மாணித்தார். குளத்தில் நடுவே ஒரு கோயிலையும் கட்டினர். இந்தக் குளத்துக்கே அம்ருத்ஸர் என்று பெயர். அதுவே நகரின் பெயராகிவிட்டது. ஸர் என்ருலே பஞ்சாபியில் குளம் என்று பொருள். இந்தக் கோயில் ஒரு முறை ஆப்கானியர்களால் 1761ல் அழிக்கப்பட்டது. ஆனல் 1764ல் மறுபடி நிர் மாணிக்கப்பட்டது. 1802ல் ரஞ்சித்சிங் இக்கோயிலின் விமானங்களுக்கும் சுவர்களுக்கும் பொன் வேய்ந்து பொற் கோயில் என்று எல்லோரும் புகழும்படிச் செய் தார். குளத்தின் நடுவிலுள்ள இக்கோயிலை அடைய இணைக்கும் பாதை ஒன்று சிமெண்டினுல் பாலம் போல

நிறுவி இருக்கிறார்கள். கோயிலுக்குப் போகிறவர்கள் வேறு மதத்தினராானாலும் தலையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டுதான் போகவேண்டும். கோயில் மிகவும் சுத்தமாக இருக்கிறது. கோவிலினுள் சீக்கியர்கள் தொடர்ந்து பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். கோயிலிலிருந்து வெளியே வரும்போது சேவார்த்திகளுக்கு (பக்தர்களுக்கு) இனிப்பு வழங்கு கிறார்கள்.

இக்கோயிலில் ஏராளமான செல்வம் குவிக்கப்பட் டிருக்கிறது. இதன் கதவுகளெல்லாம் கனமான வெள்ளித் தகடுகளால் மூடப்பட்டிருக்கின்றன. சுத்தத் தங்கத்தினால் செய்து உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பல்லக்குகள், பீடங்கள் எல்லாமிருக்கின்றன. ரஞ்சித் சிங்கின் பேரன் அணிந்த பொற்கிரீடம் முத்தும் வைர மும் பதித்திருக்கின்றன. இந்தப் பொக்கிஷங்களை யெல்லாம், சீக்கியர்களின் வேதமான கிரந்த் ஸாஹிப்பை ஊர்வலமாக வெளியே கொண்டுவரும்போது அத்துடன் பவனி வருமாம்.

அமிர்தசரஸில் அவசியம் காணவேண்டிய இடம் ஜாலியன் வாலாபாக்—பிரிட்டிஷார் படுகொலை நிகழ்த் திய பயங்கரமான இடம் இது. ஈவு இரக்கமற்ற ஜெனரல் டயர் என்ற ஆங்கிலேய அதிகாரி— சுதந்திர தாகம் கொண்ட இந்திய மக்கள் கூடி இருந்த இடத்தில் சுட்டுக்கொல்லும்படி உத்திரவிட, வெளியேற ஒரே ஒரு வழி மட்டுமே இருந்த அந்த இடத்திலிருந்து பீதி கொண்ட மக்கள் தப்பி ஓட முயற்சிக்க, ஆனால் வெள்ளையர்களின் குண்டுகளுக்கு இரையாகிச் சுருண்டு விழுந்த பரிதாபம் பாரதப் பிரசித்தமாயிற்றே. இங் குள்ள கைப்பிடி இல்லாத ஒரு கிணற்றில் தவறி

விழுந்து இறந்தவர் அநேகர். வெள்ளையர் சுட்ட துப்பாக்கிக் குண்டுகளின் வடுக்களைத் தாங்கிய சுவர்களை இன்றைக்கும் காண்கிறோம்; கண் கலங்குகிறோம். மௌன அஞ்சலி செலுத்துகிறோம் தியாகிகளுக்கு.

கால்சா காலேஜ் காணவேண்டிய கட்டிடம். கால்சா கல்லூரி கம்பீரமானதும்கூட. அம்ருதசர் ரத்ன கம்பளங்களுக்குப் பெயர் போனது. வெள்ளி, தங்க இழைகளைக் கொண்ட பூவேலைகள் செய்வோர் ஏராளம். காஷ்மீர் அருகே இருப்பதால் கம்பளி தாராளமாகக் கிடைக்கின்றது. ராணுவ வீரர்களின் நடமாட்டமும் அமிர்த சரஸில் அதிகம்.

காஷ்மீர்—ஸ்ரீநகர்

அமிர்தசரஸிலிருந்து பகல் **2-15**க்கு விமான மூலம் புறப்பட்டு மூன்று மணிக்கு ஸ்ரீநகர் வந்து சேர்ந்தோம். கனவு உலகம்—சொர்க்க பூமி என்று வழங்கும் காஷ்மீரத்தின் தலைநகர்தான் இந்த ஸ்ரீநகர்—சூரிய நகரம் என்று பொருளாம் **(City of the Sun).**

'முத்துக்களிடையே பதிக்கப்பட்ட மரகதக் கல்' என்று காஷ்மீரைக் கவிகள் வர்ணித்திருக்கிறார்கள். பனி மூடிய மலைமுடிகள், பசுமையான கானகங்கள், சலசலத்து ஓடும் நதிகள், கொள்ளை அழகோடு கூடிய தோட்டங்கள்-இத்தனையும் கொண்டது காஷ்மீர். இமய மலையின் மேற்குப் பகுதிச் சிகரங்களின் நடுவே அமைந்துள்ளது காஷ்மீர். காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரின் வீதிகளின் இருபக்கத்திலும் நெடுதுயர்ந்த மரங்கள் வரிசை கட்டி நிற்கும் அழகு கண் கொள்ளாக் காட்சியாகும்.

காஷ்மீரின் சரித்திரம் மிகமிகத் தொன்மையானது. கி. மு. 2000 வருஷங்களுக்கு முற்பட்ட இலக்கியங்களில் காஷ்மீர் பற்றிய குறிப்பு வருகிறது. காஷ்மீரின் மண் வளப்பம் மகத்தானது. சுவை மிக்க பழங்களும், கண்கவர் மலர்களும், பயிர்களும் செழித்து வளருகின்றன. இப்படிச் செழிப்பு மிக்க நாட்டை நாடி அன்னியர்கள் படையெடுத்து வருவதில் அதிசயம் உண்டா? கி. மு. 245ல் அசோக சக்கரவர்த்தி காஷ்மீருக்கு விஜயம் செய்திருக்கிறார். இங்கு பல கோயில்களைக் கட்டி இருக்கிறார். காஷ்மீரின் புகழுக்குப் பெருமை சேர்த்தவர் கி. பி. 700ல் இங்கு ஆண்ட மன்னன் லலிதாதித்யன். கால்வாய்களையும், பாலங்களையும் கட்டினான் இந்தியா மீதும் திபெத்தின் மீதும் படையெடுத்தான். அங்கிருந்து கொண்டு வந்த தங்கம் மற்றும் விலை மதிக்க முடியாத பொருள்களைக் கொண்டு காஷ்மீரத்துக் கோயில்களை அழகுபடுத்தினான். லலிதாதித்யன் தன் நாட்டில் புகழ் மணக்கச் செய்தான்; வளம் கொழிக்கச் செய்தான். பயிற்சி பெற்ற பெரும் சேனை இருந்தது—நாட்டைப் பகைவர்களிடமிருந்து எந்த நேரமும் பாதுகாக்கத் தன் வலிமை மிக்க படைபலத்தினால் தம் சாம்ராஜ்யத்தை விஸ்தரித்தான். லலிதாதித்யனுக்குப் பிறகு காஷ்மீரின் புகழ் மங்கலாயிற்று. பரந்த சாம்ராஜ்யம் பல சின்னச் சின்ன பகுதிகளாகச் சிற்றரசர்களிடம் துண்டாடப் பட்டது. ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

இதனால் மகமதியர் காஷ்மீரில் புகுவது சுலபமாயிற்று. காஷ்மீர் இந்துக்களில் பலர் முஸ்லிம்களாக்கப் பட்டார்கள். இதன் பிறகு காஷ்மீரில் முஸ்லிம்களின் ஆட்சி நடந்தது. பல முஸ்லிம் மன்னர்கள் நல்லவர்

களாக இருந்தனர். காஷ்மீரின் பகுதிகளை திபெத்து, பாரதம் ஆகியவற்றிடமிருந்து திரும்பக் கைப்பற்றினர். காஷ்மீரின் புராதனமான கலையை, கைவினையை வளர்த்து உற்சாகப்படுத்தினர்.

1586ல் மீண்டும் காஷ்மீர் முற்றுகைக்குள்ளாயிற்று. இந்தத் தடவை முற்றுகையிட்டவர்கள் மொகலாயர். காஷ்மீரத்து முஸ்லிம் மன்னரைத் தோற்கடித்துத் தம் மொகல் சாம்ராஜ்யத்துடன் அதை இணைத்துக் கொண்டவர் அக்பர் சக்கரவர்த்தி. காஷ்மீரை வெற்றி கொண்ட அக்பர் அங்கேயே தங்க முடியவில்லை. தலைநகர் டெல்லி அவரை அழைத்தது. ஆனாலும் மொகல் மன்னர்கள் அடிக்கடி காஷ்மீருக்கு வரத் தவறியதில்லை. காஷ்மீரின் குளுகுளுத் தன்மையும் கண்ணுக்கினிய காட்சிகளும் அவர்களைக் கவர்ந்திழுத்தன. கவலைகளை மறந்து நிம்மதி நாடி இங்கு வரலானார்கள். இப்படி வந்த மொகலாய மன்னர்களில் முக்கியமானவர் ஜஹாங்கீர். ஆண்டுதோறும், அடிக்கடியும் இங்கு வந்து முகமிட்டுத் தங்குவாராம். இவரது துணைவியாரான நூர்ஜஹான் எனப்படும் நூர்மஹால் காஷ்மீரிடம் காதலே கொண்டிருந்தாள். அவர் உருவாக்கிய பூந்தோட்டங்கள் இங்கு ஏராளம். ஒன்றன்மீது மற்றொன்றாக மாடித் தோட்டங்கள் பல உண்டு. பளிங்குக் கல் மண்டபங்கள், நீண்ட நெடும் சாலைகள், விதவிதமான மலர்க்குவியல்கள். நீரூற்றுக்கள் சூரிய ஒளியில் ஜ்வலிக்கும் அழகே அழகு. இங்குள்ள தோட்டங்களின் அழகும் அற்புதமும் மொகலாயர்களின் ஆட்சிக் காலத்தை நமக்கு நினைவூட்டுகின்றன.

இங்குள்ள எழுநூறுக்குமதிகமான பூந்தோட்டங்களை உருவாக்கியவர்கள் மொகலாய மன்னர்கள். இவற்

றில் புகழ் பெற்றது ஷாலிமார் கார்டன். மொகலாய சாம்ராஜ்பத்தின் ஒரு பகுதியாக 200 ஆண்டுகள் விளங்கியது காஷ்மீர். இதன் பிறகு இதை வெற்றி கொண்டவர்கள், ஆப்கானியர். அவர்களிடமிருந்து 1834ல் கைப்பற்றியவர் சீக்கிய மன்னரான ரஞ்சித்சிங்.

ஸ்ரீநகரில் ஏராளமான இந்துக் கோயில்களும் மசூதிகளும் உள்ளன. பால்கனி இல்லாத வீடுகளைப் பார்ப்பது அரிது. கதவுகளும் ஜன்னல்களும் மரவேலைப் பாடுகளைக் கொண்டதாக இருக்கும். பூத்துக் குலுங்கும் செடிகள் வீடுகளின் பக்கங்களில் பற்றி உயரச் சென்றிருப்பது அழகுக்கு அழகாக விளங்குகிறது.

காஷ்மீரிகளில் பாதிக்கு மேல் முஸ்லிம்கள். பண்டிட்ஸ் எனப்படும் இந்துக்கள் புராதன காஷ்மீரிகளின் சந்ததிகள். சிவப்பும் அழகும் ஆரிய இனத்தவரின் அங்கங்களும் கொண்டவர்கள் இந்த இந்துக்கள்.

காஷ்மீரிகளின் முக்கிய உணவு அரிசிதான். ஏரிகளை அடுத்துள்ள வயல்களில் நெல் பயரிடப்படுவதைக் காணலாம். காஷ்மீரிகளுக்கு மலர்கள் என்றால் ரொம்ப ரொம்பப் பிரியம்! பீச் மரங்களும் லிலாக்கும் பூத்துக் குலுங்கும் அழகுக் கொள்ளையைக் கண்டு களிக்க மைல் கணக்கில் நடந்து போவார்களாம்.

வில்லோ மரங்கள், சைப்ரஸ் மரங்கள், வெண்பனி மூடிய மலைமுடிகள், பளிங்கு நீர் ஏரிகள், நதிகள், பூத்துக் குலுங்கும் மரங்கள், கண்கவர் நந்தவனங்கள் இவையே காஷ்மீர். இதை வாழ்நாளில் எங்களால் மறக்கவே முடியாது.

காஷ்மீரின் அருகே டால் என்னும் பிரபலமான பெரிய ஏரி உள்ளது; மிக அழகு வாய்ந்தது. இதில்தான்

ஏராளமான படகு வீடுகள் உள்ளன. உல்லாசப் பயணிகளின் சுவர்க்க பூமி இந்த டால் ஏரி. இந்த ஏரியில் மிதக்கும் தோட்டங்கள் இருக்கின்றன. ஒருவகைக் கழிகளை நெருக்கமாகப் பிணைத்து அதில் ஏரியின் சேற்றையும் புற்களையும் நிரப்பித் தோட்டமாக்கி அதில் காய்கறிகளைப் பயிர் செய்கிறார்கள். தர்பூசணி, புடல், தக்காளி எல்லாம் இப்படி மிதக்கும் தோட்டங்களிலேயே பயிர் செய்கிறார்கள். விந்தையான காட்சி. இதே மாதிரி மிதக்கும் படகு வீடுகள் அதிசயமானவை; சகல வசதிகளுடன் கூடிய வீடுகள். இங்கு சமையல் செய்யலாம்; குளிக்கலாம்; விளையாடலாம் அவ்வளவுக்குப் பெரியதும் பல அறைகளையும் பகுதிகளையும் கொண்டதாக இருக்கின்றன இந்த சொகுசுப் படகு வீடுகள். படகு வீடுகளுக்கு வாடகை ரொம்ப அதிகம். டால் ஏரியில் படகு வீட்டிலிருந்தபடி ஸ்ரீநகரின் எழிலை இரவில் கண்டு களிப்பது சுவையான அனுபவம். வாடகை குறைவாகவும், அதே நேரத்தில் சௌகரியம் கூடுதலாகவும் பாதுகாப்பாகவும் இருக்கவேண்டுமானால் முன்பாகவே கடித மூலம், அரசாங்கத்தார் நடத்தும் பயணிகள் பங்களாக்களில் (டூரிஸ்ட் பங்களா) இடம் ரிசர்வ் செய்துகொண்டு போய்த் தங்குவதுதான் சிறந்தது; எங்களில் சிலர் படகு வீடுகளிலும் சிலர் ஹோட்டல்களிலும் தங்கினோம்.

நாங்கள் தங்கி இருந்த ஹோட்டல் இருபது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தது. ஆங்கில ஆட்சிக் காலத்தில் வைஸ்ராய்கள் வந்தால் தங்குவதற்காகக் கட்டப்பட்ட பங்களாவை இப்போது ஹோட்டலாக மாற்றி இருக்கிறார்கள். நிறையக் காலி இடமும் பூந்தோட்டமும் டி. வி. ஹீட்டர் ஆகிய சகல வசதிகளும் கொண்டது. அறைகளை மின்சார அடுப்பு கொண்டு கதகதப்பாக்கி வைத்திருப்பதால், காஷ்மீரின் குளிர் தெரிய

வில்லை. இந்த ஹோட்டலில் ரூம் ஒரு நாளைக்கு வாடகை ரூ 150/—படகு வீடுகளும் கிட்டத்தட்ட இதே மாதிரி தான் வாடகை.

அன்று இரவு கடை வீதியைச் சுற்றிப் பார்த்து விட்டு ஓய்வெடுத்துக் கொண்டோம். காஷ்மீர் புடவை கள் புகழ் பெற்றதாயிற்றே. கண்கவர் வண்ணங்களில் கிடைக்கின்றன. கைவேலைப்பாட்டுப் பொருள்கள்— மரம் உலோகம் ஆகியவற்றில் அழகும் அற்புதமு மானவை குறைந்த விலையில் கிடைக்கின்றன. இடறி விழுந்தால் ஆப்பிள் குவியலில்தான் விழவேண்டும். ஆப்பிள்களில்தான் எத்தனை நிறம், வகைகள்? டாக்ஸிக் காரர்களும், படகு வீட்டுக்காரர்களும் பயணிகளைக் கடைகளுக்கு அழைத்துப் போய் அங்குள்ள சாமான் களை நாம் வாங்கும்படி செய்து கடைக்காரரிடமிருந்து கணிசமான கமிஷன் தட்டிக் கொள்ளுகின்றனர். சால் வைகள் தயாரிப்பு இன்றும் காஷ்மீரின் புகழ் மிக்க கைத்தொழிலாக இருக்கிறது. காஷ்மீர் ஆட்டு ரோமம் பட்டுப் போன்ற கம்பளியைத் தருகிறது. அற்புதமாக வண்ண வண்ண நூல்களால் வனப்பு மிக்க கோலங் களைப் பூப்பின்னல் வேலைப்பாடு செய்து கம்பளி நூல் களையும் விரிப்புக்களையும் தயாரிக்கிறார்கள். காஷ்மீர் பட்டும் பேர் போனதாயிற்றே. பட்டுச் சேலைகள் அங்கிகள் அழகானவை.

வெள்ளியினால் வேலைப்பாடு செய்த பண்டங்களும். மரம், மண் பாண்டங்களும் நிறையக் கிடைக்கின்றன.

விமானத்தைவிட்டு இறங்கியதும் நாங்கள் பார்த்த காஷ்மீரிப் பெண்களெல்லாம் நிறைமாதக் கர்ப்பிணிகளாக இருந்தார்கள். ஏதோ பிரசவ காலம் போலிருக்கிறது என்று எண்ணினேன். பிறகு பார்த்த

ஆண்களுக்கும் வயிறு பெரிதாக இருந்தது. எங்களுக்குக் கவலையாகப் போயிற்று. காஷ்மீருக்கு வந்தால் வயிறு பெரிதாகப் போய்விடுமோ என்று. அருகில் இருந்த காஷ்மீர்க்காரரை விசாரித்த பிறகுதான் விஷயம் விளங்கியது. பிரம்பினால் பின்னப்பட்ட சிறு கூடைக்குள் மண் சட்டியை வைத்து அதற்குள் தணலை நிறப்பி அப்படியே அதை வயிற்றோடு சேர்த்துக் கட்டிக் கொண்டு மேலே சட்டை கம்பளி முதலியவற்றைப் போர்த்திக் கொண்டுவிடுகின்றனர். இப்படிச் செய்து கொள்ளுவதால் காஷ்மீரின் குளிரைத் தாங்கிக் கொள்ள முடியுமாம். இதற்கு காங்கடி என்று சொல்கிறார்கள். வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தேன் என்பர்களே கவலைப்படுவதைக் காட்ட, இங்கே நிஜமாகவே எல்லாரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் பயப்படாமல்—குளிரை வெற்றி கொள்ள.

காஷ்மீரில் நாங்கள் முக்கியமான மூன்று தோட்டங்களைப் போய்ப் பார்த்தோம். முதலாவது ஸ்ரீநகரிலிலேயே உள்ள ஷாலிமார் கார்டன். அடுத்தது ஸ்ரீநகரிலிருந்து 78 கி. மீ. தொலைவிலுள்ள பகல்ஹாம் என்னுமிடத்திற்கு மூன்று டாக்சிகளில் போனோம். மலைகள் சூழ்ந்த பகல்ஹாமிலிருந்து பனி மூடிய மலைகளைக் காண்பது மிகமிக அழகு. அங்கிருந்து இரண்டு கி. மீ. தொலைவிலிருந்த லிங்கேஸ்வரர் கோயிலுக்குக் குதிரைகளில் சென்று தரிசித்தோம். பகல்ஹாம் கடைத் தெருவிலே பாடம் செய்யப்பட்ட புலித்தலை முதலிய அரும் பொருள்களை வாங்கிக்கொண்டு ஸ்ரீநகர் திரும்பி மறுநாள் ஐம்பது கி. மீ. தொலைவிலுள்ள குல்மார்க் என்னுமிடத்துக்குப் போனோம். குல்மார்க்கிலிருந்து பனிமலைகளை அருகில் சென்று காணக் குதிரைகளில்

புறப்பட்டோம். கடுமையான குளிர்! இப்படி எழுதினால் புரியாது. அதை அனுபவித்தால்தான் அந்த 'கடகட' தந்தியடிக்கும் கடுமை தெரியும். பிரயாணிகளுக்குக் குளிரை வெற்றி கொள்ள அங்கு கம்பளி கோட், குல்லாய், கிளவுஸ், சாக்ஸ், பூட்ஸ் எல்லாம் வாடகைக்குக் கிடைக்கின்றன. நாங்களும் இவற்றையெல்லாம் வாடகைக்குப் பெற்று அணிந்துகொண்டதும் ஒருவரை மற்றவர் பார்த்து மருண்டுவிட்டோம். அப்படியொரு தோற்றம் போங்கள்.

இந்த அலங்காரங்களுடன் குதிரைகளில் ஏறி ஒரு மணி நேரம் பனிமலையில் பிரயாணம் செய்தோம். குதிரைகள் எங்களைச் சுமந்து மலையில் ஏறும்போதும் இறங்கும்போதும் எங்களுக்குப் பயமாக இருந்தது. ஆனால் குதிரைகள் பழக்கப்பட்டவை. பயடபடத் தேவையில்லைதான். சுற்றுப்புறக் காட்சிகள், ஓடைகளைக் கடக்கும்போது உண்டாகும் த்ரில்லும் புதுமையான அனுபவங்கள். ஒவ்வொரு குதிரையுடனும் இருவர் வருகிறார்கள். குதிரையை நடத்திப்போக ஒருவரும் நம்மைப் பிடித்துக்கொள்ள ஒருவருமாக.

பனிக்கட்டிகளில் நடந்து போய் ஒருமணி நேரம் தங்கி இருந்து அந்தக் குளிரையும் குளுமை நிறைந்த காட்சிகளையும் கண்டு களித்துவிட்டுத் திரும்பினோம்.

காஷ்மீரைச் சுற்றிலும் மலைகள்தான். இதில் மிக மிக உயரமானது ரங்காபிரபா—27,000 அடிகள். மற்றவை நுன் குன் ஹாரமோக், கோலாஹாய், அபார்வாட் ஆகியவையாகும்.

கடல் மட்டத்துக்கு மேல் 8000 அடிகள் உயரத்திலிருக்கிறது குல்மார்க். இது கோடை காலத்துத் தலை

நகரம். மகாராஜாவும், உயர் அதிகாரிகளும் கோடையில் இங்குதான் தங்குவார்களாம். இங்கிருந்து ரங்கா பிரபாவைக் கண்டுகளிக்க முடிகிறது. சூரியன் உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் மலைகள் மீதான வானம் மஞ்சள், செங்நீலம், சிவப்பு இப்படியாகக் காட்சி தருகிறது. மலைகளும், பள்ளத்தாக்கும் கருநீலமாகத் தெரிகின்றன. ஏரிகள் வெள்ளியாகப் பளபளக்கின்றன. இந்த அற்புத எழிலைக் கண்டு நாம் மெய்சிலிர்த்துப் போகிறோம். காஷ்மீரில விதவிதமான மான்கள், மலை ஆடுகள் கரடிகள், சிறுத்தைகள் எல்லாமிருக்கின்றனவாம்.

ஸ்ரீநகரில் அபூர்வமான வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தினாலான டின்னர் செட் ஒன்று வாங்கினேன்; பார்ப்பதற்கு அன்னப்பறவை போலிருக்கும் இது. இதன் இறக்கையை எடுத்தால் ஒவ்வொரு இறக்கையிலும் கத்தி, ஃபோர்க், ஸ்பூன் இப்படியே மற்ற சாமான்களும் அடங்கி இருக்கும். இந்த அழகான அபூர்வமான அன்னப்பறவை டின்னர் செட்டை விமான அதிகாரிகள் நான் எடுத்துவர அனுமதிக்கவில்லை. ஏனென்றால் அதில் கத்தி இருந்ததே காரணம். அப்போது விமானங்களை ஹைஜாக் செய்யும் பீதி அதிகமாக இருந்ததால் இந்தக் கட்டுப்பாடு. ஆனால் எனக்கோ அந்த அபூர்வப் பொருளை விட்டுவர மனமில்லை. ஆகவே அதைப் பைலட்டிடம் ஒப்படைத்துவிட்டு, அமிர்தசரஸ் போனதும் வாங்கிக்கொள்ளுவதாக விமானநிலைய அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டேன். அவர்களும் அதற்கு இணங்கி அனுமதித்தார்கள். ஸ்ரீநகரிலிருந்து கிளம்பி மாலை அமிர்தசரஸ் வந்து சேர்ந்தோம். நினைவாக அன்னப்பறவை டின்னர் செட்டை பைலட்டிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

காஷ்மீரில் ஏமாற்றுபவர்கள் அதிகம். காரணம் வறுமை. அதிகம் முஸ்லிம்கள். ராணுவத்தினர் எங்கும் ரோந்து சுற்றுவதைக் காணலாம். மொழி காஷ்மீர். மக்கள் தங்களை இந்தியர் என்றோ பாகிஸ்தானியர் என்றோ கூறிக்கொள்வதில்லை. தாங்கள் ஒரு தனி நாட்டினர் காஷ்மீரிகள் என்றஉணர்வுடனேயே பேசிப் பழகுகின்றனர். அன்று இரவு ரயிலில் புறப்பட்டு மறுநாள் காலை ஹரித்துவார் வந்து சேர்ந்தோம்.

ஹரித்வார்

ஹரித்துவார் ரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள கங்கையை அடைந்து குளித்து சுவாமி தரிசனம் செய்து கொண்டோம். பனிக்கட்டி உருகி தண்ணீராக வருகின்ற காரணத்தினால் தண்ணீர் மிக சுத்தமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது. தண்ணீரின் வேகம் மிக அதிகம். குளிர்ச்சியும் வேகமும் சேர்ந்து நாம் கங்கையில் குளிக்கின்றபோது ஏதோ எலக்ட்ரிக் ஷாக் அடித்தது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகின்றது. குளிரின் காரணமாக நீண்ட நேரம் குளிக்கவில்லை.

அதன் பிற்கு சுவாமி தரிசனம் செய்து கொண்டு அங்கிருந்து மூன்று டாக்சிகளில் 20 மைல் தூரத்திலுள்ள ரிஷிகேசிற்குப் புறப்பட்டுச் சென்று சிவன்கோவில், பெருமாள் கோவில் முதலிய ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு விட்டு அங்கிருந்து ஆற்றின் மறுகரையில் உள்ள லெட்சுமணர் கோவிலுக்கு இரும்புக் கம்பிகளினால் ஆன ஊஞ்சல் போன்ற தொங்கு பாலத்தின் மூலம் கடந்து சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு எங்கள் டாக்சிகளில் ஹரித்துவாருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தோம். குறிப்

பாக நாங்கள் வந்த டாக்சியில் பிரேக் சரியில்லை என்பது எங்களுக்குத் தெரியாது. டிரைவர் மிகவும் மெதுவாகக் காரை ஓட்டிக்கொண்டுவந்தார். நிதானமாகப் போகிறார் என்று நாங்கள் எண்ணினோம். ஒரு ரயில்வே கிராசிங் அருகில் வந்தபொழுது ரயில்வே கேட் (மேலிருந்து கீழே இறங்கும் கம்பிக் கதவு) இறங்கிக் கொண்டிருந்தது. எங்கள் டிரைவர் பிரேக்கை மிதித்து, மிதித்துப் பார்க்கிறார்.

கார் நிற்கவில்லை. பாதி இறங்கிக் கொண்டிருந்த கேட்டின் அருகே எங்கள் கார் போனதும் கேட்டை இறக்கியவர் நிலைமையைப் புரிந்து கொண்டு கேட்டை மீண்டும் மேலே தூக்கிவிட்டார். கேட்டின் கம்பிக்குக் கீழே தொங்குகின்ற வலை எங்கள் கார் டாப்பில் டமார் என்று அடித்து காரும் கிராசிங்கில் போய் நின்றது. அந்த நேரத்தில் ரயிலும் வந்து கொண்டிருக்கின்றது. உடனே பக்கத்தில் இருந்தவர்கள் காரைப் பிடித்து வெளியே தள்ளி விட்டார்கள். முன் சீட்டில் நானும் எனது நண்பர் ப. வ. அழகப்ப செட்டியாரும் அமர்ந்திருந்தோம். கேட்டை இறக்கியவர், சமயோசிதமாக மீண்டும் அதை ஏற்றாமல் இருந்திருந்தால் எங்கள் தலைக்கு ஆபத்து வந்திருக்கலாம். அந்த ஆபத்தில் தப்பித்து ரயில் வருகின்ற நேரத்தில் கிராசிங்கிலிகிருந்து அருகிலிருந்தவர்கள் காரை பின்னே தள்ளிவிடாமல் இருந்திருந்தாலும், எங்களுக்கு ஆபத்து வந்திருக்கும். காரில் இருந்து குதிக்கலாம் என்று நினைத்தாலும், காரின் கதவிற்குக் கைபிடி கிடையாது. அந்த அளவிற்குப் பழமையான கார். காரில் இருந்து கீழே இறங்கியதும் ஆண்டவனை நினைந்து உருகினேன். நாங்கள் வந்தது ஆண்டவனை வழிபட. துன்பங்கள் வருவது இயற்கை. அதிலிருந்து விடுபடுவது ஆண்டவனுடைய

அருள். ஆகவே அவன் அருளால் உயிர் தப்பினேம். அதன் பிறகு சிந்தித்தேன்.

வாரியார் சுவாமிகளின் அறிவுரைகள் நினைவிற்கு வந்தன. ஒருவன் சம்பாதிக்கின்ற பணத்தை வங்கியில் சேமித்து வைத்துவிட்டு அவன் இறந்துவிட்டால் அவனுக்குப் பிறகு அந்தப் பணங்கள் அவனுடைய வாரிசுகளுக்கு எப்படிப் போய்ச் சேருகின்றனவோ அதுபோலவே அவன் செய்த நல்ல காரியங்களும் புண்ணிய காரியங்களும் தர்ம காரியங்களும் அவன் கணக்கிலே போய் பேங்கில் டிப்பாசிட் செய்வது போல செய்யப்பட்டு, அவனுக்கு மட்டுமல்ல அவனுடைய சந்ததியார்களையும் காப்பாற்றும் என்பது வாரியார் சுவாமிகளின் வாக்கு. அதன்படி என்னுடைய முன்னோர்களும் ப. வ. அழகப்ப செட்டியாரின் முன்னோர்களும் செய்த புண்ணியத்தாலேயே எங்கள் உயிர் காபபாறறப்பட்டதாக எண்ணினேன். சிந்தனைகளிலிருந்து நான் விடுபட்டபோது எங்கள் எதிரே காரை வளைத்துக்கொண்டு ஒரு போலீஸ்காரர் டிரைவருடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவர்கள் பேசிக் கொண்ட பாஷை எனக்குப் புரியவில்லை. நான் பேசிய பாஷை அவர்களுக்குப புரியவில்லை. டிரைவர் ஏதோ கையை விரித்துச் சொன்னதால் போலீஸ்காரர் பணம் கேட்டு, டிரைவர் தன்னிடத்தில் இல்லை என்று சொல்கிருர் என நினைத்துக்கொண்டு, நான் ரூபாய் 50ஐ எடுத்து போலீஸ்காரரிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்க மறுத்து அந்தப் பணத்தை என்னிடமே கொடுத்துவிட்டு டிரைவரின் சட்டையைக் காட்டினர்.

அவருடைய கிழிந்த சட்டையில் ஐந்தாறு இடங்களில் ஒட்டுப் போட்டு, தைத்திருந்தார். அப்படி ஒரு

ஏழைக்காக நான் கொடுத்த பணத்தையும் வாங்க மறுத்து இனிமேல் பிரேக்கை சரியாக வைத்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்து எங்களை அனுப்பி வைத்தார். திரும்ப ஹரித்துவாருக்கு வந்துசேர்ந்து பேசியபடி டாக்சிவாடகையையும் கொடுத்துபோலீஸ்காரரிடம் கொடுத்துத் திரும்பி வந்த ரூ. 50ஐயும் டிரைவரிடம் கொடுத்தோம். அந்த டிரைவருக்கு பேச்சு வருவதற்குப் பதிலாகக் கண்களில் நீர் சுரந்து வருவதைக் கண்டேன்.

எங்களுக்கோ உயிர்தப்பியதிலே மகிழ்ச்சி. ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து பார்த்ததில் எங்கள் கோச்சைக் காணவில்லை. முதல் நாள் சென்ற ரயிலுடன் கோச் டேராடூன் சென்று அங்கு அந்த கோச்சைத் தனியாகப் பிரித்து அடுத்த ரயிலில் சேர்த்துவந்து இருக்க வேண்டும். விசாரித்ததில் டேராடூனிலேயே எங்கள் கோச் இருப்பதாகச் செய்தி வந்தது. இரவு ஹரித்துவார் வெயிட்டிங் ரூமிலேயே தங்கி மறுநாள்காலை வேறு ரயிலில் டேராடூன் வந்து எங்கள் கோச்சில் குளித்துவிட்டு, திரும்ப வேறு ரயிலில் மீண்டும் ரிஷிகேஷ் வந்து ஆனந்தா ஆசிரமத்திற்கு வந்தோம். மிகவும் அமைதியான இடம். நம் நாட்டிலிருந்து வருபவர்களைவிட வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் மிக அதிகம். அதிலும் காவி உடுத்திக்கொண்டு அமைதியாக தியானத்தில் இருப்பவர்கள் மிக அதிகம். உலகத்தில் எல்லா இன்பங்களையும் அநுபவித்தவர்கள் மன அமைதிக்காக ஆனந்தா ஆசிரமத்திற்கு வருகிறார்கள். அப்படி வந்த ஓரிரு வெளி நாட்டுக்காரர்களை அணுகிப் பேசிப் பார்த்ததில், மன அமைதியில் கிடைக்கின்ற நிறைவு நாங்கள் அனுபவித்த இன்பங்களில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.

அதன் பிறகு பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளைத் தரிசித்துவிட்டு, அக்கரையில் உள்ள கிருஷ்ணன் கோவிலுக்கு மோட்டார் படகு மூலம் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு, திரும்ப டாக்சி மூலம் டேராடூன் வந்து எங்கள் கோச்சைப் பிடித்து மறுநாள் காலையில் லக்னோ வந்து சேர்ந்தோம்.

லக்னோ

ஆயிரத்தோரு இரவு அரபுக் கதைகளைப் பற்றி நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள். அரசர்கள், ராஜகுமாரர்கள், ராஜகுமாரிகள், சீமானான வியாபாரிகள், ஏழை எளியவர்களைப் பற்றியெல்லாம் அக் கதைகளில் வருமில்லையா? அலாவுதீன், அலிபாபா, சிந்துபாத் ஆகிய கதைகளிலெல்லாம் வரும் மாடமாளிகைகள் கூடகோபுரங்களைப் பற்றியெல்லாம் ஒரு மாயாஜாலம் இருக்குமில்லையா? லக்னோவிற்குப் போகிறவர்கள் அரபுக்கதைகளில் வரும் கற்பனை நகரங்கள் நிஜ வடிவில் இருப்பதை அங்கு காணலாம். லக்னோவில் எங்குபார்த்தாலும் மசூதிகளும், மினாரட்ஸ் என்னும் கல்லறைக் கோபுரங்கள், டோம்ஸ், அரண்மனைகள், எல்லாவற்றிலும் ஏதோ ஒரு மாயாசக்தி இருப்பது போன்ற பிரமையை :ஏற்படுத்தும். குறுகலான கடை வீதிகள், தலைக்குமேலே கவிழ்ந்து நிற்கும் மரத்தாலான பால்கனிகள், மஞ்சள் மணம், குங்குமப்பூ வாசனை, இலவங்கத்தின் இனிய நெடி—இப்படியாக வாசனைத் திராவியங்களின் நறுமணம் கமழும். அத்தர், புனுகு, ஜவ்வாது விற்கும் வாசனை திரவியக் கடை, தங்கம் வெள்ளி வேலைப்பாடுகளைச் செய்யும் கைவினைஞர்களின் கடைகள், துணிக்கடைகள், தொழிலாளிகளின் சுறுசுறுப்பு எல்லாமாக நாம் ஏதோ

ஒரு கற்பனை உலகில் நடமாடுவது போன்ற பிரமையை ஏற்படுத்தும்.

கோமதி நதிக்கரையில் அமைந்துள்ள லக்னோ நகரம் புராதனப் பெருமை கொண்டது. ஆதியில் இதை தசரதனின் புதல்வன், இராமபிரானின் தம்பி லக்ஷ்மணன்தான் கட்டினனும். அப்போது இதன் பெயர் லக்ஷ்மணபுரி. முகமது கஜினி இந்தியா விற்குள் கொள்ளையிடப் புகுந்தபோது அவனது ஆட்களில் சிலர் லக்ஷ்மணபுரியிலேயே தங்கிவிட்டனர். இதன் பிறகு இது முஸ்லிம்களின் இருப்பிடமாக மாறியது. பெயரும் லக்னோவாயிற்று. அருகிலுள்ள ஔத் (அயோத்தி)யின் அரசர்கள் இங்கு தங்கள் தர்பாரை நிகழ்த்தி இருக்கிறார்கள். அழகிய கட்டிடங்களைக் கட்டி இருக்கிறார்கள்.

இமாம்பரா அரண்மனை என்பது மிகப் பெரிய வெள்ளை டோமுடன் கூடியது. கியாஸுதீன் ஹைதர் என்பவரால் கட்டப்பட்டது. இவர் அயோத்தியின் முதல் முஸ்லிம் மன்னர். இம்மன்னரின் சமாதி இதனுள்ளேயே உள்ளது. வெள்ளியினாலும் பச்சைக் கண்ணாடிகளாலும் அழகு செய்யப்பட்டுள்ளது.

சத்தர் மன்ஸில் (குடை அரண்மனை) என்ற கட்டிடத்தை கியாஸுதீனால் ஆரம்பிக்கப்பட்டு அவரது மகன் நாஸிருதீன் ஹைதரால் முடிக்கப் பட்டிருக்கிறது. அரண்மனை ராணிகளின் இருப்பிட மாக இருந்தது இது.

கிரேட் இமாம்பரா—பெரிய இமாம்பரா—வின் நுழைவாயில் அற்புதமானது—அதிசயிக்கவைக்கிறது.

வளைவுகளும், கோபுரங்களுமாக இது, அரபுக்கதை களில் வர்ணிக்கப்படும் அற்புதக் கட்டிடமாக இருக் கிறது. இதன் பிரதான கூடம் 162 அடி நீளம் 54 அடி அகலமுடையது. இதன் விதானத்திலிருந்து நூறு லஸ்தர் கொத்துக்கள் டாலடித்தபடி தொங்குகின்றன. இந்தப் பெரிய இமாம்பராவினுள் அஸா∴ப்ரத் தௌலா வின் சமாதியிருக்கிறது. இந்தச் சமாதியைச் சுற்றி வெள்ளியினால் வேலி இட்டிருக்கிறார்கள். சமாதியின் அருகே நவாபின் தலையணி (டர்பன்)யும் கிரீடமும் வைக்கப்பட்டுள்ளன. பல அழகிய டாஸியர்கள் (வெள்ளியினால் ஆனவை) இந்த இமாம்பராவில் காணப் படுகிறது. இந்த இமாம்பராவின் முற்றத்தில் மிகப் பெரிய மூன்று மாஸ்க்குகள் உள்ளன. இவை மூன்று டோம்களையும் இரண்டு மிக உயரமான மினாரட்டுகளை யும் கொண்டது.

மொகரம் பண்டிகையின்போது பத்தாம் நாள் மிகப் பெரிய ஊர்வலம் இமாம்பராவிலிருந்து கெர்பலா விற்குப் போய் அங்கு டாஸியர்களைப் புதைத்து விட்டுத் திரும்புவார்களாம்.

பெரிய இமாம்பராவிலிருக்கும் போது நம் கவனத்தைத் தங்கத்தினலான டோம்களும், மினாரட்டு களும் கவருகின்றன. இது ஹுஸைனபாத் இமாம் பராவினுடையவை. கடைவீதி வழியே நாங்கள் அதைக் காணப் போனோம். இதன் நுழைவாயிலுக்கு நௌபத் கானு என்று பெயர். நுழைவாயிலின் மீதுள்ள பால் கனியில் நாயனம் போன்ற ஒருவகை வாத்தியமிசைப் போர் உட்கார்ந்து நாளைக்கு மூன்று தடவை சோககீத மிசைக்கிறார்கள். இது நீண்ட நாளாக நடந்து வரும் பழக்கமாம். இறந்தவர்களுக்கான மரியாதை இது.

இமாம்பராவின் முற்றத்தில் நுழைந்ததுமே நம் கவனத்தை ஈர்ப்பது நடுவில் உள்ள நீரோட்டம். இரும்புக் கிராதிகள் இருபக்கமும்; முடிவில் தாஜ் மகாலின் வடிவமைப்பில்—ஆனால் சின்னஞ் சிறிய வடிவில் இரு சமாதிகள். இமாம்பராவிலுள்ள மன்னர் சமாதி அற்புதமான கட்டிடம். இதன் தங்கக்கலசம் (டோம்) குறையில்லாதது; வேலைப்பாடு மிக்கது. இந்தக் கட்டிடத்தை பாலஸ் ஆஃப் லைட்ஸ் (ஒளி மாளிகை) என்கிறார்கள். மொகரம் பண்டிகையின் போது ஆயிரக்கணக்கான எண்ணெய் விளக்குகள் மூன்று நாள் இரவு வேளையில் ஏற்றிவைக்கப்பட்டு ஜ்வலிக்குமாம். கதைகளில் வரும் மந்திர மாளிகை போலக் காட்சி தரும் இதைக் காண மக்கள் வெள்ளம் வந்து போகுமாம்.

இங்கும் ஒரு ஜும்மா மசூதி இருக்கிறது. ஜும்மா மசூதி கட்டாத முஸ்லீம் அரசரே இருக்கமாட்டார் போலிருக்கிறது. ஜும்மா மசூதி என்றால் பெரிய பள்ளி வாசல் என்று பொருள். லக்னோவிலுள்ள ஜும்மா மசூதி மிகச் சிறப்பான கட்டிடமாகக் கருதப்படுகிறது. இதற்கு அழகிய மூன்று டோம்கள்.

கோமதி நதியின் மறுகரையில் கம்பீரமான லக்னோ சர்வகலாசாலைக் கட்டிடங்கள் உள்ளன. கிங் ஜார்ஜ் ஹாஸ்பிடல் என்ற பெரிய வைத்தியசாலை உள்ளது. இத்துடன் மருத்துவக் கல்லூரியும் இணைக்கப்பட்டிருக்கிறது. லக்னோவில் பார்க்கவேண்டிய சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்கள் பல இருக்கின்றன. தில்குஷ் அரண்மனை, கெய்ஸர் பாக், மச்சிபவன் அரண்மனை, மிருகக்காட்சி சாலை ஆகியவை முக்கியமானவை.

இதையெல்லாம்விட எங்களுக்கு நினைவில் நிற்பது லக்னோ ஹோட்டலின் சாம்பார்தான்! கோமதி ஆற்றுத் தண்ணீருக்கும், அதற்கும் மாறுபாடே தெரியவில்லை. சாம்பார் தண்ணீராக இல்லை; கோமதி ஆற்றுத் தண்ணீர் சாம்பார் மாதிரி இருந்தது. லக்னோ கடைவீதியில் அத்தர், செண்ட் முதலியவைகளை வாங்கிக் கொண்டு அங்குள்ள அனுமான் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்துவிட்டு ரயிலுக்கு வந்து பைசாபாத் வந்து அங்கிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள அயோத்தியை அடைந்தோம்.

அயோத்தி

அயோத்தியில் சரயு நதியில் தீர்த்தமாடி ராமர் பிறந்த இடத்தைப் போய்ப் பார்த்தோம். ராமர் அவதரித்த இடத்திற்குப் பக்கத்தில் முகலாய மன்னன் பாபர் காலத்தில் கட்டப்பட்ட மசூதி ஒன்று இருக்கிறது. இப்போது அந்த இடம் ஹிந்துக்களுக்குச் சொந்தமா, அல்லது முஸ்லீம்களுக்குச் சொந்தமா என்ற வழக்கு கடந்த ஐம்பது ஆண்டுக் காலமாக கோர்ட்டில் நடந்து வருவதாகச் சொன்னார்கள். ராமர் பிறந்த இடத்திலிருந்து பத்தடி தூரத்தில் அந்த மசூதி இருக்கிறது.

ஒருபக்கத்தில் ஹிந்துக்கள் ராமர் பிறந்த இடத்தை வணங்கிக்கொண்டு இருக்கிறார்கள். மறுபக்கத்தில் மசூதியில் முஸ்லீம்கள் தொழுதுகொண்டு இருக்கிறார்கள். இடையில் கம்பிவேலி மட்டும் இருக்கிறது. ஒரு இடத்திலிருந்து பார்த்தால் மறுபக்கம் தெரிகிறது. இரு மதத்தினரும், அருகருகே இருக்கின்ற காரணத்தினால் பலமுறை கலகம் வந்து அந்தக் கலகம் அதிகப்படாமல் இருப்பதற்காக அங்கு நிரந்தரமாகப் போலீஸ்காரர்கள்

நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இருபாலாரும் தங்களுக்கே அந்த இடம் முழுவதையும் தரவேண்டும் என்று சொல்வதால், கோர்ட் முடிவு தெரிகிற வரையில் ஹிந்துக்கள் ராமர் பிறந்த இடத்தில் இரவும் பகலும் 20 பேர் மாறி மாறி இருந்துகொண்டு கீர்த்தனை பாடிக்கொண்டே காவல் காத்து வருகிறார்கள். இந்தக் கீர்த்தனை 1949 டிசம்பர் 27உயிலிருந்து தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த பூஜை செலவிற்கு நாம் கொடுத்ததை வாங்கிக் கொண்டு ரசீதும் தருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு ரூ. 1800 செலவாகிறது.

இராமாயணம் நடந்த கதையா அல்லது கற்பனைக் கதையா என்ற ஆராய்ச்சியில் இறங்குவதற்கு முன்னால் பல நூற்றாண்டுகளாக ராமர் அவதரித்த புனிதபூமியாகக் கருதப்பட்டு ஹிந்துக்களால் பூஜிக்கப்பட்டு வருகின்ற அந்தஇடத்தில், இடையிலேவந்த முஸ்லீம்கள் மசூதியை நிறுவித் தகராறை உண்டு பண்ணாமல், அவர்களது ஆட்சிக்காலத்தில் வேறு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து மசூதியை நிறுவி மதத்தை வளர்த்திருக்கலாம். இது தான் ஆங்கிலேயர்களுக்கும், முகலாயர்களுக்கும் உள்ள வித்தியாசம். ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றி அரசாண்ட காலத்தில் அவர்களும் சர்ச்சுகளைக் கட்டினார்கள் நமது ஆலயங்களுக்குப் பாதுகாப்பும் தந்து, அவர்களின் மாதாகோயில்களையும் நமது கோயில்களுக்குக் குறுக்கீடு இல்லாமல் கட்டிக்கொண்டு அவர்கள் மதத்தை வளர்த்துக் கொண்டார்கள். அயோத்தியில் நமக்கு ஏற்பட்ட நிலைமை முகம்மதியர்களால் மதுரா, காசி, பழனி, திருப்பரங்குன்றம், மைசூரில் ஸ்ரீரங்கப்பட்டினம் இன்னும் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. இந்து முஸ்லீம்களின் நிரந்தரக் கலவரங்களுக்கு இதுவும் ஒரு காரணம்.

ராமர் பிறந்த இடத்தை வணங்கிவிட்டு ராமர் அரண்மனைக்கு வந்தோம். அங்கு ராமருக்கு பட்டாபிஷேகம் நடந்த இடம் முதலியவைகளைப் பார்த்தோம். அரண்மனை சிறியதாக இருக்கிறது. அங்கு ராமரின் விக்கிரகங்களை வைத்திருக்கிறார்கள். அங்கு சென்ற போது மனதிற்கு நிம்மதியாக இருந்தது. மற்றும் ஆஞ்சனேயர் கோவில் முதலியவைகளுக்குப் போய் வந்தோம். அங்கு ராமர் கையில் கோதண்டம் வைத்திருப்பதால் ராமரை கோதண்டராமன் என்றே அழைக்கிறார்கள். பின்பு நாங்கள் நம் நகரச் சத்திரத்திற்கு வந்து அங்குள்ள ராமரை வழிபட்டுவிட்டுத் திரும்பினோம். நம் நகரச் சத்திரத்திலுள்ள ராமர் விக்ரகம் மிக அழகாக இருக்கிறது.

அலகாபாத்

மறுநாள் அதிகாலை 3–30க்கு பைசாபாத்திலிருந்து புறப்பட்டுக் காலை 8-30க்கு அலகாபாத் வந்து சேர்ந்தோம். தாராகஞ்ச் மோரி பகுதியில் உள்ள நமது நகரச் சத்திரத்திற்குச் சென்றுவிட்டு அங்கிருந்து பிரயாகை நதிக்கரைக்குச் சென்றோம். ஒரு படகு எடுத்துக்கொண்டு ஆற்றில் போய் கங்கை யமுனை சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் சங்கமமாகும் இடத்தில் குளித்தோம். அதற்கு 'திரிவேணி சங்கமம்' என்று பெயர். வேணி என்று சொன்னால் ஜடை என்று பொருள். மூன்று நதிகளும் ஒன்றை ஒன்று பின்னி ஓடுவதால் திரிவேணி சங்கமம் என்ற பெயர் ஏற்பட்டது. இங்கு வர இயலாதவர்களுக்கு அந்தப் புண்ணிய நதியின் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். அந்தத் தீர்த்தத்தை காசி, ராமேஸ்வரம் போன்ற இடங்களில் மூலவருக்கு அபிஷேகமும் செய்கிறார்கள்.

நதிக்கரைக்குப் பக்கத்தில் ஒரு கோட்டை இருக்கிறது. அந்தக் கோட்டைக்குக் கீழே ஒரு கோவில் இருக்கிறது. அதற்குப் பாதாள பூரி கோவில் என்று பெயர். அதையும் பார்த்துவிட்டு வரும்போது ஒரு பெரிய ஆஞ்சநேயர் கோவில் ரோடு மட்டத்திற்குக் கீழே இருக்கிறது. அதையும் தரிசித்துவிட்டு நகர விடுதிக்கு வந்துவிட்டு நேரு பிறந்த இடமான ஆனந்த பவனத்திற்கு வந்தோம். ஆனந்தபவனமும், சுயராஜ்ய பவனும் அடுத்தடுத்து இருக்கின்றன. பண்டித மோதிலால் நேரு காலத்திலேயே சுயராஜ்ய பவனம் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனந்த பவனத்தை டில்லியில் உள்ளதுபோல மியூசியமாக மாற்றி, நேரு பெருமகன் பிறந்தது முதல் இயற்கை எய்தியதுவரை உள்ள போட்டோக்களை வைத்து இருக்கிறார்கள். பார்க்கவேண்டிய சரித்திரச் சின்னம் இது.

அதைப் பார்த்துவிட்டு ஆறு மணிக்கு ரயிலுக்கு வந்தபோது எங்கள் கோச் காசிக்குச் செல்லவேண்டிய ரயிலுடன் சேர்க்கப்படவில்லை. விடிந்தால் தீபாவளி. இரவே காசி போய்ச் சேரவேண்டும். மீண்டும் ரயில்வே அதிகாரிகளைக் கண்டு பேசினோம். தீபாவளிக்குக் காசியில் இருக்கவேண்டிய அவசியத்தை அந்த அதிகாரியிடத்தில் நீண்ட நேரம் பேசி உணர்த்தினோம்.

அதன் பிறகுதான் அவர் நிச்சயமாக எங்கள் வண்டியைச் சேர்க்க முடியாது என்று சொன்னார். நாங்கள் விவரம் புரியாமல் திகைத்தோம். பக்கத்தில் இருந்த ரயில்வேகிளார்க் எங்களைத் தனியே அழைத்து, "நீங்கள் இவ்வளவு தூரம் விவரம் சொன்னதுதான் தவறு. அந்த அதிகாரி ஒரு முஸ்லீம். நீங்கள் தீபாவளியைக் காசியில் கொண்டாடுவது அவருக்குப் பிடிக்காத கார

ணத்தால், கோச்சை காசிக்குச் செல்லும் ரயிலில் இணைத்துவிட மறுக்கிறார். ஆகவே ரயில்வே போலீஸ் அதிகாரியிடத்தில் புகார் செய்து அடுத்த வண்டியிலாவது சேர்க்க முயற்சி செய்யுங்கள்'' என்று சொன்னார்.

அதன்படி நாங்கள் ரயில்வே போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து, எங்களது தஸ்தாவேஜுகளையும் நாங்கள் செல்லவேண்டிய அவசியத்தையும் உணர்த்தியபோது, அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு 10 மணி ரெயிலில் எங்களது கோச்சைச் சேர்க்கச் சொல்லி எங்களுடன் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளையும் அனுப்பினார்கள். கான்ஸ்டபிள் வந்து ரயில்வே அதிகாரியிடத்தில் சொன்னதும் அவரும் ஒப்புக்கொண்டார். கான்ஸ்டேபிளும் சென்று விட்டார். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எங்களது கோச்சைச் சேர்ப்பதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. மீண்டும் அதிகாரியிடத்தில் சென்று கேட்டதற்கு "போலீசைக் கூட்டிக்கொண்டு வா'' என்று சொன்னார்.

கோபமே வராத எங்கள் ப. வ. அழகப்ப செட்டியாருக்குக் கோபம் வந்து பணம் கட்டிய ரசீது பைல்களைத் தூக்கி எறிந்துவிட்டார்கள். உடனேநான் மீண்டும் போலிஸ் அதிகாரியிடத்திலே சென்று நடந்ததைச் சொன்னபோது, அந்தப் பெரிய அதிகாரியே வந்து அந்த ரயில்வே அதிகாரியைக் கண்டித்துப் புறப்பட இருந்த ரயிலை இருபது நிமிடம் தாமதிக்க வைத்து எங்கள் கோச்சை அந்த ரயிலில் சேர்த்து, ரயில் புறப்படும் வரையில் அந்த அதிகாரி அங்கேயே இருந்து எங்களை அனுப்பி வைத்துவிட்டுப் புறப்பட்டார். அந்த போலீஸ் அதிகாரி ஒரு ஹிந்து. வடநாட்டில் ஹிந்து முஸ்லீம் மத வெறிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

காசி

காசி யாத்திரையும் கங்காஸ்நானமும் ஒவ்வொரு இந்துவும் காணும் கனவுகள். தம் வாழ்நாளில் நிறைவேருதா என்று ஏங்கிக்கொண்டிருந்தனர் முற்காலத்தில். அப்போது போக்குவரத்து வசதி கிடையாத காலம். காசிக்குப் போனவர் திரும்புவது அபூர்வம் என்று எண்ணப்பட்ட காலமும் உண்டு. ஆனால் இப்போதோ காலையில் கிளம்பி மாலையில் காசிக்குப் போய்விடமுடியும்—விமான மூலம். நாங்கள் தீபாவளித் திருநாளன்று நிஜமாகவே கங்காஸ்நானம் செய்யக் காசிக்கு ஒருவழியாகப் போராடி வந்து சேர்ந்தோம் அதிகாலை ஐந்து மணிக்கு. எங்களுக்கு முன்னமேயே ரயில், பஸ் முதலியவற்றில் வந்திருந்தவர்கள் நகர விடுதியில் 250 பேர் இருந்தார்கள். குறிப்பாக புதுக்கோட்டையைச் சேர்ந்த ஆடிட்டர் திரு எம். சின்னையா அவர்களும் அவர் தந்தையார் திரு. ஸி. முத்துச் செட்டியார் அவர்களும் வந்திருந்தார்கள்; தீபாவளியன்று காலை ஏழு மணிக்குக் கங்கையில் ஸ்நானம் செய்தோம். கங்கையில் நாகசதுர்த்தி ஸ்நானம் முடித்துக் கொண்டு (காசி) விஸ்வநாதர் ஆலயம் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டோம்.

சின்னஞ்சிறிய கோயில்; வளைந்து வளைந்து செல்லும் குறுகலான சந்துப் பாதையில் கோயிலை அடைய வேண்டும். கோயிலின் மையத்தில் சிவலிங்கமிருக்கிறது. நான்கு பக்கங்களிலிருந்தும் சிவனைத் தரிசிக்கலாம்; தொட்டு மகிழலாம்; கட்டிக் கண்ணீர் மல்கலாம்; நாமே லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யலாம். பூ வைத்து அலங்கரித்துப் பார்க்கலாம். லிங்கமும் மரகத நிறத்தில் பளபளவென்று சுடர் விடுகிறது.

சுவாமி தரிசனம் ஆயிற்றல்லவா? ஊர் சுற்று வதற்கும் மற்ற ஆலயங்களைப் பார்ப்பதற்கும் முன்னல் காசி க்ஷேத்திர மகிமையைப்பற்றி என் சிந்தனை அசை போடலாயிற்று.

கங்கைக் கரையில் இருக்கிறது காசி. பனாரஸ் என்று இதற்குப் பெயர். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமை வாய்ந்த நகரம் காசி. ஹரிச் சந்திர மன்னன் காலத்திலேயே காசி இருந்திருக்கிறது. இந்து மதம் தோன்றிய காலத்திலேயே காசி தோன்றி விட்டது. இந்து மதத்தின் மத்திய கேந்திரம் காசி! இந்துக்களுக்கு மிகவும் புனிதமான ஓர் இடம் உலகில் உண்டானல் அது காசிதான். புராண இதிகாசங்களில் இதை வாரணசி என்றும் குறிப்பிட்டிருக்கிறர்கள். எத்தனையோ மன்னர்களின் வாழ்வையும் தாழ்வையும் அழிவையும் கண்டிருக்கிறது இந்த வாரணசி! வாரணசியை சிவபிரான் தன் இருப்பிடமாகக் கொண் டிருக்கிறர். அதனல்தான் இதற்கு இவ்வளவு பெருமை! பனாரஸில் ஏராளமான கோயில்கள் இருக் கின்றன.

ஓர் இந்து ஆணே பெண்ணே வயோதிகமடைந் தால் காசியில் போய் வாழ்ந்து உயிர் நீத்தால் மோக்ஷத் துக்குப் போகலாம் என்று நம்பப்படுகிறது. கங்கை யில் குளித்தால் பாவங்கள் விலகும்; மறுபிறப்பு ஒழி யும். இப்படி ஒரு நம்பிக்கை.

காசியின் குறுகலான கடைவீதிகளில் ஜனநெருக் கடியென்றல் கங்கை நதிக் கரைகளிலே அதைவிட ஜன நெரிசல் ஒரு கட்டத்தில் கலியாண ஊர்வலம் கோலாகலமாக வரும். மங்களவாத்தியங்கள் முழங்கத் தம்பதிகள் கங்காதேவிக்குப் பூஜை செய்வார்கள். மகிழ்ச்சியும் சிரிப்பும் குதூகலமுமாக இருப்பார்கள்.

அடுத்த கட்டத்தில் இதற்கு நேர்மாறான காட்சி இறுதி யாத்திரைக்கான கட்டம். அழுகுரல், விம்மல், விசும்பல், ஒப்பாரி. கங்கைக் கரையில் இப்படி வெவ்வேறான காட்சிகளைக் காணலாம். உடலெங்கும் சாம்பல் பூசிய சாதுக்கள், போவோர் வருவோரிட மெல்லாம் பிச்சை கேட்கும் கும்பல், கூட்டத்தினரை லட்சியமே செய்யாமல் முட்டித் தள்ளிக் கொண்டு போகும் காளைகள், பசுக்கள்!

கூட்டத்திலிருந்து விடுபட்டுப் பல படிகளைக் கடந்து இறங்கி ஒரு படகில் ஏறி அமருகிறோம். அது ஒரு நாட்டுப்படகு! அதில் வீடுபோலக் கட்டப்பட்டுள்ள கேபினின் மீது போய் அமர்ந்து கொள்ளுகிறோம். படகுக்காரன் துடுப்புப் போட்டுத் தள்ளுகிறான்; படகு நகருகிறது! கங்கை நதியில் படகில் மிதந்துகொண்டே நதிக்கரையைப் பார்க்கிறோம்; அற்புதமான காட்சி! கரை நெடுகிலும் எத்தனை எத்தனைக் கட்டிடங்கள், அரண்மனைகள், மசூதிகள், கோயில்கள்! அதன் கலசங்களும், விமானங்களும், டோம்களும் மினாரட்டுகளும் சூரிய ஒளியில் தகதக வென்று பிரகாசிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக உயரமாக பதினேழாம் நூற்றாண்டில் கட்டிய அவுரங்கசீப்பின் மசூதியின் மினாரட்டுகள் தலை நிமிர்ந்து நிற்கின்றன.

யாத்திரிகர்கள் ஒவ்வொருவரின் கையிலும் பித்தளைச் செம்பு. அதில் கங்கா ஜலம். கங்கைக் கரையின் கட்டங்கள் ஒவ்வொன்றின் படியிலும் தாழங்குடைகள். அதனடியில் அந்தணர்கள்—யாத்திரிகர்களின் தேவைகளை, பூஜைகளை, சங்கல்பங்களை, செய்து தர, ஆசி வழங்கத் தயாராக இருக்கிறார்கள். இதேபோல வாடிக்கைக்காரர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நாவிதர்கள்,

மணிகர்ணிகா கட்டத்தில் ஆங்காங்கே புகை மூட்டங்கள்—சடலங்கள் பாதி எரிந்தும், முழுதும் சாம்பலாகியும், தீ வைக்கப்போகும் நிலையிலும்—இறந்தவர்களை எரியூட்டும் இடம் இது. எரிந்தும் எரியாமலுள்ள சடலங்களை இழுத்து இழுத்துக் கங்கையில் வீசுகிறார்கள்—பாவங்களையும் பாபிகளையும் சடலங்களையும் ஏற்றுக்கொண்டு புனிதப்படுத்துகிறாள் கங்கா மாதா.

அஸ்வமேத கட்டத்துக்கு அருகிலிருக்கிறது காசி விஸ்வநாதர் ஆலயம். காசி விஸ்வநாதர் ஆலயத்துக் துக்குப் பின்னால் ஒரு மசூதி கட்டி இருக்கிறார்கள். மசூதி இருந்த இடத்தில்தான் முன்பு விஸ்வேஸ்வரருடைய கோயில் இருந்ததாம். அதை இடித்துத்தான் மசூதி கட்டப்பட்டிருக்கிறது. நமது பழைய கோயிலின் சின்னங்களைக் காண முடிகிறது மசூதியின் பகுதியில். கோயில் இடிக்கப்பட்டபொழுது விஸ்வநாதர் (லிங்கம்) அங்கிருந்த ஒரு கிணற்றில் போடப்பட்டது. இதற்கு ஞானவாபி என்று பெயர். இன்னமும் ஆதி விஸ்வநாதர் அந்த வாபியில்தான் இருக்கிறாராம். இப்போதுள்ள விஸ்வலிங்கம் பின்னால் நாராயணபட்டர் என்ற குருக்களினால் புதிய கோயிலில் பிரதிஷ்டை செய்யப் பட்டது. இந்தக் கிணற்றுநீர் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. காரணம் அதனுள் ஆண்டவன் மூழ்கிக் கிடக்கிறானே! இக்கிணற்றின் அருகே ஒரு குருக்கள் உட்கார்ந்துகொண்டு அதன் புனித நீரைக் கொஞ்சம் கொஞ்சம்—நாள் முழுதும் யாத்திரிகர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார். சிரம் தாழ்த்திக் கைகுவித்து ஏந்தி அவர் அளிக்கும் புனித நீரைப் பய பக்தியோடு வாங்கி அருந்தி உடலில் தலையில் தடவிக் கொண்டு போகிறார்கள். தாங்கள் கொண்டு வந்துள்ள

பாத்திரத்திலும் அந்தப் புண்ணிய புனித நீரை வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஞான வாபியின் நீர் விஸ்வ நாதரின் புனிதமான உடல் உறையும் கிணற்று நீராயிற்றே.

காசிநகரிலிருந்து நான்கு மைலில் பனாரஸ் ஹிந்து சர்வகலாசாலை உள்ளது. இந்தியாவில் அப்போதிருந்த ஹிந்து அரசர்களும் இந்த சர்வகலாசாலை அமைக்கப் பண உதவி செய்திருக்கிறார்கள். இந்தியாவில் பல பகுதிகளிலிருந்தும் இங்கு கல்வி பயில மாணவர்கள் வருகிறார்கள்.

பித்தளைப் பாத்திரங்களுக்குப் புகழ் பெற்றது காசி. காசிப் பட்டு உசத்தி. எம்பிராய்டரி செய்த பனாரஸ் புடவைகள் பிரபலம்.

காசி விஸ்வநாதர் ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்ட நாங்கள் அன்னபூரணி அம்மையைத் தரி சனம் செய்யக் கிளம்பினோம். விஸ்வநாதர் ஆலயத் துக்குப் பக்கத்திலேயேதான் இருக்கிறது அன்ன பூரணியின் அழகிய ஆலயம். வெள்ளியினாலான அம்மையாரின் திரு உருவம் மிகவும் அழகியது. சந்நிதி மேற்கு நோக்கி அமைந்திருக்கிறது. பிரகாரத்தில் பற்பல மூர்த்திகளின் திருஉருவம் அமைந்திருக்கிறது. சுற்றுப்பிரகாரத்தில் இருந்து வேதபாராயணம் செய் கின்றவர்களின் ஒலி நமது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

விசாலாட்சி

விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் காசிவிசாலாட்சி கோவில் அமைந்திருக்கிறது.

நகரத்தார்கள் இக்கோவிலைப் புதுப்பித்துள்ளார்கள். விசாலாட்சியின் திருஉருவம் சிறியதாக இருந்தாலும் உற்சவமூர்த்தி மிக அழகாக அமைந்திருக்கிறது.

தீர்த்தம்

காசியில் உள்ள 64 தீர்த்தக் கட்டங்களிலும் தீர்த்தம் ஆடுவதற்குப் படகுகள் எடுத்துக்கொண்டு சென்றோம். குறிப்பாக ஐந்து தீர்த்தக் கட்டங்களில் மட்டும், படகை நிறுத்தி இறங்கி தீர்த்தம் ஆடினோம். மற்ற இடங்களிலே குருக்கள் இன்ன இடம் என்று சொல்வார்; நாங்கள் படகில் இருந்தபடியே, செம்பால் கங்கை தீர்த்தத்தை எடுத்து ஊற்றிக் கொள்வோம். காசியைப் பற்றி எழுதும்போது ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. காசியைச் சுற்றி ஐம்பது மைல் தொலைவில் யாராவது இறந்தால் காசியில் எரித்தால் மோட்சம் என்ற காரணத்தினால் காசிக்குக் கொண்டு வந்து எரித்துக் கங்கையில் தள்ளிவிட்டுப் போய் விடுகிறார்கள்.

கொடைக்கானல் ஏரியில் படகில் செல்பவர்களுக்கு ஒரு அனுபவம் உண்டு. படகில் செல்லும்போது கையை நீரில் நனையவிட்டுக் கொண்டே செல்வார்கள். அதே பழக்கத்தில் கங்கையில் செல்லும்போதும் கையைத் தண்ணீரில் நனைய விட்டுக்கொண்டே சென்றோம். பிணங்கள் மூட்டைகளாகவும் தனியாகவும், தலைகளாகவும், கைகளில் பட ஆரம்பித்தது. எங்களையும் அறியாமல் கையைப் படகுக்குள் இழுத்துக் கொண்டோம். தீர்த்தம் ஆடிவிட்டு வெளியில் வந்து வீதிகளில் வந்த கார்களைப் பார்த்தபோது சற்றே அதிர்ச்சியடைந்தோம். அப்போது ஒரு ஆங்கிலேயர் காரில் உள்ள லக்கேஜ் காரியரைப் பற்றிக்

கேட்டது என் நினைவிற்கு வந்தது. உங்கள் நாட்டில் கார் தயாரிக்கும்போது லக்கேஜ் காரியருடனேயே தயாரிக்கிறீர்களா? என்று கேட்டார். அந்த அளவுக்கு நமது காரிலே லக்கேஜ் காரியர்கள் பொருத்தப்பட்டு சாமான்களும் ஏற்றப்படுகின்றன. வெளிநாட்டில் லக்கேஜ் காரியர் இருந்தாலும் இந்த அளவிற்குப் பொருத்தப் படுவதுமில்லை, சாமான்கள் ஏற்றப்படுவதுமில்லை.

காசிக்கு வந்து அந்த ஆங்கிலேயர் பார்த்திருந்தால் வெளிநாடுகளிலே இந்தச் செய்திக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருப்பார்கள். காரணம் லக்கேஜ் காரியரிலே ஒரு பிணத்தை வைத்துக் கட்டிக்கொண்டு காசிக்கு வருகின்ற அநேக கார்களைப் பார்த்தோம். இன்னும் பிணத்தை ரிக்ஷாவில் வைத்துக்கொண்டு ஒருவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு வருவதையும் பார்த்தோம். இது நமக்குப் புதிய அநுபவமாக இருந்தாலும் அங்குள்ளவர்களுக்கு இது பழகிப்போன சர்வ சாதாரணமான காட்சியாக இருக்கிறது.

காசி சேலைகள், பித்தளை சாமான்கள் வாங்கினோம். பிறகு நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் காசிக் கயறு,விபூதிபிரசாதம் முதலியவைகளை அனுப்பினோம். நீண்ட நாட்களாகப் பேனா பிடிக்காமல் இருந்த கைகளுக்கு வேலை கிடைத்ததும் ஏதோ ஒரு மாதம் லீவுக்குப் பிறகு ஆபீசுக்குச் சென்று வேலை பார்த்த உணர்வு ஏற்பட்டது. அங்கு காசிக்கு வந்த நகரத்தார் களுக்கு நகர விடுதியில் எனது நண்பர் ப. வ. அழகப்ப செட்டியாரவர்கள் தனது சொந்தச் செலவில் மதிய விருந்து அளித்தார்கள். அந்த ஆண்டுமட்டும் இல்லாது ஒவ்வோர் ஆண்டும் நகரத்தார்களுக்கு ஒருவேளை சாப்பாடு செய்து வைக்கும்படியும், அதற்குள்ள செலவு

களைத் தான் ஏற்றுக் கொள்வதாகவும் நகர விடுதி ஏஜென்ட்டிடம் சொல்லி ஏற்பாடு செய்துஇருக்கிறார்கள்.

காசி அரண்மனை

ஒரு டாக்சி எடுத்துக்கொண்டு ராம் நகரில் உள்ள காசி ராஜாவின் அரண்மனையையும் கோட்டையையும் போய்ப் பார்த்தோம். அரண்மனை சிறியதாக இருக்கிறது. பழைய அரசர்கள் உபயோகித்த ஆயுதம், பல்லக்கு, உடைகள் முதலியவைகளை வைத்து சிறு மியூசியமாக வைத்து இருக்கிறார்கள். பிர்லாமந்திர் பார்த்தோம். பிர்லா டிரஸ்டுகளிலிருந்து வட நாட்டில் நிறைய கோவில்கள் கட்டியிருக்கிறார்கள். துர்க்கை கோவில், துளசிமந்திர் முதலியவைகளைப் பார்த்தோம். துளசி மந்திரில் ராமாயணத்தில் ஐந்து காட்சிகளை எடுத்து, மின்சாரத்தின் உதவியால் பொம்மைகள் move ஆவதுபோல் செய்து ஸெட் போட்டு டிராமா நடப்பது போல் ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது போல் நமது பகுதியிலும் செய்யலாம்.

காசி நகர விடுதி

1800ம் ஆண்டு முதல், நகரத்தார்கள், கல்கத்தாவில் பல வியாபாரங்கள் செய்தபொழுது, கப்பல் கம்பெனியார்கள் ரிபேட்டாகத் தந்த துகையைத் தனியாகச் சேமித்துவைத்து, அதை தர்ம காரியங்களுக்குச் செலவிடுவதென முடிவு செய்தார்கள். அந்த ரிபேட் மட்டும் ஆண்டுக்கு சுமார் ரூ. இருபத்தையாயிரம் வந்தது. அதிலிருந்து சுமார் 50 ஆண்டு காலங்கள் பக்தர்களுக்கு அன்னதானமும், ஸ்ரீ விஸ்வேஸ்வரருக்கு அபிஷேக ஆராதனைகளும் செய்து, மீதமுள்ள பணத்

ளைதக் கொண்டு 1863ம் ஆண்டு நகரசத்திர கட்டிடத்தை விலைக்கு வாங்கினர்.

காசி விஸ்வேஸ்வரருக்கு மலர்கள் அனுப்ப 1894ம் ஆண்டு சிக்ரா பகுதியில் ஒரு இடம் வாங்கி, நந்தவனம் அமைக்கப்பட்டது. காசி விஸ்வ ஞதர் கோவிலுக்கு நகர விடுதியிலிருந்து அபிசேக அலங்காரப் பொருள்கள் ஒரு நாளைக்கு மூன்று முறை பூஜைக்கு அனுப்பப்படுகிறது. அப்பொழுது நாதஸ்வர இசையுடன் சாமான்கள் எடுத்துக்கொண்டு ஊர்வல மாகக் கோவிலுக்குச் செல்வார்கள். அதற்கு சம்போ என்று பெயர். வழியில் சம்போவைக் கண்டவர்கள், வணங்கி மரியாதை செலுத்துகின்றனர். 1942 ஆகஸ்ட் கலவரத்தின்போதுகூட, ஊரடங்குச் சட்டம் அமுலி லிருந்த காலத்திலும்கூட, அன்றைய ஆங்கிலேயஅரசு, சம்போ ஊர்வலத்திற்கு விதிவிலக்கு அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த நேரத்தில் நடைபெறுகின்ற பூசைக்கு நகரத்தார்களை முன்னே உட்கார வைத்து பூசை நடைபெறுகிறது. அந்த மரியாதை நகரத்தார் களுக்கு இன்றும் கிடைத்து வருகிறது. இந்த பூஜையை நகரத்தார்களிடமிருந்து பெறுவதற்கு எத்தனை இலட்சம் வேண்டுமானலும் கொடுப்பதற்கு பிர்லா, டிரஸ்ட் காத்திருக்கிறது.

வருமானவரி, சொத்துவரி, சமீப காலங்களிலே அரசினல் கொண்டு வரப்பட்டது. ஆனல் நகரத்தார் களோ, கடல் கடந்து வாணிபத்தை மேற்கொண்ட காலத்திலே சுமார் 200 ஆண்டு காலமாக இந்தியாவில் மட்டுமல்ல, வெளி நாடுகளிலும் ஆண்டுக்கொரு முறை கூடி அவரவர்களின் வருமானத்திற்கு ஒரு வரியையும், அவரவர்கள் சொத்துக்கு ஒரு வரியையும், தாங்களே முன்வந்து மறைக்காமல், ஓலைகளில் எழுதிக் கொடுத்து

அதற்குரிய பணங்களையும் செலுத்தியிருக்கின்றனர். அந்தப் பணங்களெல்லாம் தெய்வ வழிபாட்டிற்கும் அன்னதானத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் பல கோவில்கள் உருவானதிற்கு இதுவே காரணம். செட்டி மகன் கப்பலுக்குச் செந்தூரான் துணை என்று அந்த முருகன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, பாய்மரக் கப்பல்களிலே செல்வது வழக்கம். அவன் அருளால் கப்பலும் ஒழுங்காகப் போய்ச் சேரும். அவன் என்றும் நமக்குத் துணையிருக்க, வெளிநாடுகளிலே பல கோவில்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. நகரத்தார்கள்வகுப்புப் பெண்களை, அப்பொழுது வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதில்லை.

அதேபோல் முருகனுக்கு ஆலயம் அமைத்த பொழுது தமிழ் நாட்டிலே தெய்வானையையும், வள்ளியையும் விட்டுவிட்டு, வெளிநாடுகளிலே முருகனுக்குத் தெண்டாயுதபாணியாக ஆலயம் அமைத்து வழிபடுகிறோம். அப்படி, ஆலயப்பணி, அறப்பணி, நம்மவர்களின் ரத்தத்தில் ஊறிப்போன காரணத்தினால் விஸ்வேஸ்வரருக்குச் செய்கின்ற பூசையை விலை கூறி விற்க விரும்பவில்லை. நகர விடுதியில் நகரேஸ்வரர் ஆலயம், பாதாளேஸ்வரர் ஆலயம், அன்னபூர்ணிக்கு ஆலயம் அமைந்திருக்கிறது. அதை வழிபடுகின்றபொழுது, தமிழகத்தில் இருக்கின்ற ஒரு உணர்வு நமக்கு ஏற்படுகின்றது. தீபாவளி மகாசிவராத்திரி முதலிய காலங்களில், தங்கவிசாலாட்சி அம்மனுக்குப் பூஜை செய்யப்படுகிறது. மற்ற நாட்களில் ரூ. 51—கட்டினால் பூஜை செய்கிறார்கள்.

காசி நகர சத்திர மேலாளராக புதுவயல் வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் இருந்து வரு

கிருர்கள். சிவந்த மேனி, இனிமையாக, அன்பாக, பண்பாக, பேசுகின்ற தன்மை, எந்த நேரமும் சிரித்த முகம். அந்தச் சிரிப்பு யாவரையும் காந்தம் போல் கவர்ந்து விடும். உரக்கப் பேசத் தெரியாது; கோபம் வந்து நான் கண்டதில்லை. யாரும் கண்டதாகச் சொல்லவுமில்லை. பார்த்த மாத்திரத்திலேயே நமது உறவினர் ஒருவரோடு உறவாடுகின்ற ஒரு உணர்வு, நமக்கு வருகிறது. புண்ணிய ஸ்தலத்தில், கப்பல்போன்ற நகர விடுதிக்கு, கண்யமான மேலாளர் கிடைத்தது நகரத்தார்கள் செய்த பாக்கியம். காசியிலிருந்து புறப்பட்டுக் கயாவிற்கு வந்து சேர்ந்தோம்.

கயா—புத்தகயா

கயா ரயில் நிலையத்தில், நகரத்தார் விடுதி ஏஜண்டு வந்து எங்களை அழைத்துச் சென்று வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தார். பல்குனி நதியில் நீராடிவிட்டு ஆலயங்களைக் காண ஆயத்தமானோம்.

சாக்கிய வமிசத்தில் உதித்த இளவரசர் இவ்வுலக சுகங்களைத் துறந்து மோட்சம் பெறும் பாக்கியம் தேடி அரண்மனை வாழ்வை உதறிவிட்டு ஆண்டியாகித் துறவறம் மேற்கொண்டு தவமிருந்து தன்னை வருத்திக் கொண்டு இப்படி யெல்லாம் பாடுபட்டும் முக்தி மார்க்கம் புலப்படாத நிலையில் தாமே புது வழியில் ஒரு மதத்தை ஸ்தாபித்தார். அதுவே புத்தமதம். இந்தக் கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும். கௌதமபுத்தர் துறவியாக வாழ்ந்த காலத்தில் தங்கிய இடம்தான் புத்தகயா எனப்படுகிறது.

மக்கள் கடைத்தேற அவர்களுக்கு என்ன போதனை செய்யவேண்டும் என்ற ஞானோதயம் ஏற்படும்போது அவர் ஒரு போதிமரத்தடியில் அமர்ந்திருந்தார்.

இதுவே இன்று புத்தகயா—போதிகயா என்று அழைக்கப்படுகிறது. புத்தகயாவில் அவர் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகே மிகப்பெரிய புத்தவிஹாரம் (கோயில்) உள்ளது. ஆதியில் அசோக சக்ரவர்த்தி எடுப்பித்த கோயிலின் மீதாக எழுப்பப்பட்டுள்ளது. இதன் கோபுரம் 160 அடி உயரம்! உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள புத்தர்கள் இப்புனிதமான இடத்தைத் தரிசிக்க வருகிறார்கள். இக்கோயிலைச் சுற்றிக் கல்லால் ஆன வேலைப்பாடுமிக்க கைப்பிடிச்சுவரை அசோக சக்ரவர்த்தி கட்டி இருக்கிறார்.

கயா நகரில் புத்தர் கோயிலைப் போலவே புகழ் பெற்ற விஷ்ணு கோயிலுமிருக்கிறது. விஷ்ணு பாதம் கோயில் என்று பெயர். விஷ்ணுவின் பெரிய பாதங்கள் இரண்டு இக்கோயிலில் உள்ளன. இப் பாதங்களிலிருந்து நீர் சொட்டுகிறது. எப்படி, எங்கிருந்து சொட்டுகிறது என்பது தெரியவில்லை. கீழே விழுந்த நீர்த்துளி உலர்ந்ததும் மறுபடியும் நீர் சொட்டுகிறது. இது அதிசயம்! ஆனால் உண்மை.

கயையில் பிதுர் காரியம் செய்வது விசேஷம். இராமபிரானே தன்னுடைய மூதாதையர்களுக்கு (பிதிர்களுக்கு) இங்கு பிண்டம் போட்டதாக ஐதீகம். பிராயாகையில் முண்டம் (முண்டனம்—மொட்டையடித்துக் கொள்ளல்), காசியில் தண்டம் (தண்டனிடல்—வணங்குதல்), கயையில் பிண்டம் (திதி கொடுத்தல்) என்று ஒருமொழி இந்துக்களிடையே நிலவிவருகிறது. அந்த முறைப்படி கயாவில் நாங்களும் திதி கொடுத்தோம்.

விஷ்ணுபாத ஆலயத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள அட்சய வடம் சென்றோம். இங்கு

மிகப் பழைமையான ஆலவிருட்சத்தின் கீழ் ஒரு லிங்கமிருக்கிறது. மனிதன் தனது இச்சைகளைக் களையவேண்டும் என்பதற்காக இங்கு வருபவர்கள் ஒரு பிரதிக்ஞை—உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற வழக்கமுள்ளது. உணவுப் பொருள்களில் எதில் மிக ஆசை வைத்திருக்கிறார்களோ அவற்றில் ஒரு பழம், ஒரு காய், ஒரு இலை இம்மூன்றையும் இனி உண்பதில்லை என்று கைவிடுவதாக உறுதி செய்து கொள்ளுகின்றனர். ஆனால் மனிதன் சாமர்த்தியசாலி அல்லவா! தனக்குப் பிடிக்காத அல்லது கிடைக்காத பழம், காய், இலைகளையே தள்ளுவதாகச் சொல்லிவிடுகிறார்கள். சராசரி மனிதனில் "ஒருவன் தானே நானும். நான் எப்படிப்பட்ட உறுதி செய்து வந்திருப்பேன் என்று ஊகித்துக் கொள்ளுங்களேன்.

கயாவிலிருந்து ஏழாவது மைலில் புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடமான புத்த கயா இருக்கிறது. அங்குள்ள புகழ் பெற்ற போதிமரத்தைப் போய்ப் பார்த்தோம். புத்தர்பிரான் ஞானம் பெற்ற பிறகு நடந்து சென்ற பாதையைச் சிற்ப வேலைப்பாடுகளுடன் கட்டியிருக்கிறார்கள். ஞானம் பெறுகிறபோது அவர் அமர்ந்திருந்த ஆசனமும் போதிமரமும் காணவேண்டிய காட்சிகள். புத்தம் சரணம் கச்சாமி என்ற ஒலி நமது காதுகளில் ரீங்காரம் செய்யும்போது நம்மையறியாமல் நமது மனம் நெகிழ்கிறது. 2700 ஆண்டுகளுக்குமுன்பு அசோகன் கட்டிய புத்தர் கோயிலையும் தரிசித்தோம்.

புத்தரை வழிபடுகின்ற ஒவ்வொரு நாட்டினரும் கயாவில், புத்தருக்கு ஒரு கோவில் கட்டி, அந்தந்த நாட்டினரே இருந்து நிர்வகித்து வருகின்றனர். திபேத், சீனு, இலங்கை, ஜப்பான், தாய்லாந்து, பர்மா, நேப்பாளம், பூடான் முதலிய நாட்டுக் கோவில்

களைப் பார்த்ததில், தாய்லாந்துக் கோவில் மிகவும் நன்றாக இருக்கிறது. பௌத்தம் பிறந்தது இந்தியாவாக இருந்தாலும், செழித்தோங்குவது வெளிநாடாக இருப்பதால், தங்கள் மதம் பிறந்த நாட்டைக் காண வெளி நாட்டுப் பக்தர்கள் பலர் வந்துபோவது ஒரு காஸ்மோ பாலிட்டன் நகரைப் பார்ப்பது போல இருக்கிறது. ஒவ்வொரு நாட்டுத் தலைநகரத்திற்குச் செல்லுகின்றபோது, அயல் நாட்டுத் தூதராலயங்கள் அமைந்து பல நாட்டு மக்களை அந்த ஊரில் காணலாம். ஆனால் புத்தகயாவிலோ, நாடுகளால் வேறுபட்டு, மதத்தால் ஒன்றுபட்டு, தூதராலயங்களைப்போல ஒவ்வொரு கோவிலை அமைத்துக்கொண்டு மக்கள் உலா வருகின்ற காட்சி, காணக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். புத்தன் சித்தார்த்தனாக இருந்திருந்தால், அவன் அரசன்தானே! அயல் நாட்டுத் தூதராலயங்கள் இருக்கவேண்டிய இடம்தானே! அரசனாக இருந்திருந்தால் ஒன்றிரண்டு தலைமுறைக்குத்தான் இருக்கமுடியும். ஆண்டவனாக இருப்பதால் ஆண்டாண்டுக்கும் அழியாத ஆலயங்களாக அமைந்திருக்கின்றன.

கல்கத்தா

கயாவிலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்தோம். புகழ் பெற்ற ஹௌரா ஜங்ஷன் மிகப் பெரியது. நகரத்தார் சத்திர மானேஜருக்கு நாங்கள் முன்னதாக எழுதி இருந்ததால் அவர் ரயில் நிலையத்தில் எங்கள் வருகைக்காகக் காத்திருந்தார். எங்களை வரவேற்று அழைத்துப் போய்ச் சகல சௌகரியங்களும் செய்து தந்தார். கண்டவராயன்பட்டி க. வி. ராம.வுக்கு இங்கு பூர்வீகமாகக் கடை இருந்து வருகிறது. நாங்கள் கல்கத்தாவில் தங்கி இருந்த மூன்று நாட்களும் கருப்பன் செட்டியாரவர்களும் எங்களுடனேயே

இருந்தது மிக்க உதவியாக இருந்தது. வேந்தன் பட்டி. மு. ராசப்ப செட்டியாரவர்களின் தோல் கடையில் பணி புரிகின்ற வலையபட்டி ராமனுதன் அவர்களும் எங் களுக்கு உறுதுணையாக இருந்தார்கள். கல்கத்தாவில் நகரத்தார் சங்கம், நகர விடுதியிலேயே ஆரம்பித்து அதற்குத் தலைவராக க. வி. ராம. மா. கருப்பையா செட்டியாரவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்.

இந்த நகரத்தார் சங்கம் எங்களுக்கு ஒரு வர வேற்புக் கொடுத்துக் கௌரவித்தது.

இனி ஊர் சுற்றக் கிளம்புவோமே. அதற்கு முன் கல்கத்தா நகரைப் பற்றிய சில குறிப்புகளைக் கூறு கிறேன். சுற்றுலாவுக்கு வசதியாக இருக்கும் இக் குறிப்புகள்.

வங்காளத்தில் மிகப் பெரிய நகரம் கல்கத்தா. பெரிய பெரிய கட்டிடங்களும் அழகிய சாலைகளும், பெரிய துறைமுகமும் கொண்டது கல்கத்தா. பல காலம் பாரதத்தின் தலைநகராகவும் (பிரிட்டிஷாரின் ஆட்சியில்) இருந்திருக்கிறது. அரண்மனைகளின் நகரம் ("The city of palaces") என்றும் இதற்கு ஒரு பெயர். கல்கத்தாவில் பெரும் பணக்காரரையும் காண லாம்; பரம ஏழையையும் பார்க்கலாம். வானளாவும் கட்டிடங்களுண்டு. மண் குடிசைகளும் ஏராளம். இந்துக் கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள், இரவு பகல் எந்நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் யந்திரசாலைகளின் இரைச்சல் எல்லாமும் உண்டு இங்கே. இந்தியாவின் பல பகுதி மக்களையும் இதன் கடைவீதிகளில் காணலாம்.

சின்னஞ்சிறிய கிராமமாக இருந்த காளிகட்டா இத்தகைய கல்கத்தா நகரமாக மாறியது ஒரு சுவை யான வரலாறு. 1690 வாக்கில் ஆங்கில வியாபாரிகள் ஹூக்ளி நதியில் படகில் வந்து கொண்டிருந்தார்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இவர்களின் தலைவரின் பெயர் ஜாப்சார்நாக் என்பது. சுதாநதி (Sutanati) என்ற சிறிய கிராமத்தில் இவ்வியாபாரிகள் தங்கினார்கள். சுதாநதிக்கு அருகே வேறு இருகிராமங்கள்: ஒன்றின் பெயர் காளிகட்டம், மற்றது கோவிந்தபூர். 1698ல் அவுரங்கசீப்பின் மகன் ஆஸம் இவ்வியாபாரிகளுக்கு இம் மூன்று கிராமங்களை யும் வாடகைக்குக் கொடுத்தான். கொஞ்சநாளில் இவர்கள் இங்கு உறுதியானதோர் கோட்டையைக் கட்டிக்கொண்டார்கள். இந்தக் கோட்டையை 1756ல் மூர்ஷிதாபாத்தின் நவாப் சிராஜ் உத்தெளலா கைப் பற்றினார். அடுத்த ஆண்டு ஆங்கிலேயர் இதை மீட்டனர்.

பிளாசிச் சண்டைக்குப் பிறகு வெற்றிவீரனான கிளைவிற்குப் புதிய நவாபான மீர்ஜாபர் பரிசளித்தான் தனக்கு உதவியதற்காக. கிளைவிற்கு என்றால் அவன் சார்ந்த கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு—பரிசு என்ன தெரியுமா? மிகப் பெரிய ஜில்லாவான இருபத்து நான்கு பர்காணுக்கள். அது மட்டுமல்ல; சிராஜ்வுத் தெளலா காலத்தில் வாடகைக்குக் கொடுக்கப்பட்ட மூன்று கிராமங்களையும் சேர்த்துப் பரிசளித்தான் மீர் ஜாபர். கி. இ. கம்பெனி இப்போது புதிய கோட்டையை விஸ்தாரமாகக் கட்டியது இரண்டு மிலியன் பவுன் மதிப்பில். இதற்கு வில்லியம் கோட்டை (Fort William) என்று பெயர். இன்றும் இது இருக்கிறது. புதிய கோட்டையைச் சூழ்ந்த அடர்ந்த காடுகள் அழிக்கப்பட்டபோது பரந்த மைதானமாயிற்று. இந்த மைதானமே இன்றைய கல்கத்தாவின் புகழ் பெற்ற மைதானம். இந்தப் பரந்த வெளிக்கு அப்பால் பல மாளிகைகள் எழும்பின. நகரம் வளரலாயிற்று—இன்று

நாம் காணும் நிலைக்கு. பாரதம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருந்தபோது அதன் இரண்டாவது பெரிய நகரமாகக் கல்கத்தா விளங்கியது. ஜாப் சார்நாக் (Job charnock) இன் சமாதியை இன்றும் கல்கத்தாவில் காணலாம்.

காளிகட்டா என்பதே கல்கத்தா ஆயிற்று. காளி கோயில் இருப்பதால் காளிகட்டாவாக இருந்தது. இந்தப் புகழ் பெற்ற காளி கோயிலைப் போய்ப் பார்த் ஏகக் கூட்டம்...நெரிசல். ஒழுங்குமுறையில்லாமல் இடித்துப் புடைத்துக்கொண்டு எல்லாரும் செல்கிறார்கள். காளிதேவியின் அருகே சென்றாலோ அம்மையின் கோர ரூபத்தைவிட பண்டாரங்கள் பணம் பிடுங்கும் கோரம் அதி பயங்கரமாக இருக்கிறது. கோயிலின் அருகிலுள்ள நதியான ஹூக்ளியிலிருந்து வந்து நிறப்பப்படும் நீரில் யாத்திரிகர்கள் ஸ்நானம் செய்துவிட்டுத் தரிசனம் செய்ய வருகிறார்கள். ஹூக்ளி நதி கங்கையின் கிளைநதி.

கல்கத்தா காளி தரிசனத்துக்குப் பிறகு ராமகிருஷ்ண மடத்துக்குச் சென்றோம். ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆலயம், அன்னை சாரதா மணியின் ஆலயம், விவேகானந்தர் ஆலயம் முதலியவைகளைப் பார்த்துவிட்டு அருகிலிருந்த ராமகிருஷ்ணர் வழிபட்ட காளி கோயிலையும் அதன் அருகிலுள்ள பன்னிரெண்டு லிங்கங்களையும் பார்த்தோம்.

மறுநாள் காளி கிருஷ்ண தாகூர் தெருவிலுள்ள வெங்கடாஜலபதி கோயிலுக்குப் போய் தரிசனம் செய்தோம். மார்வாரிகளால் நடத்தப்படும் இக் கோயிலில், தென்னகத்துச் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவர்கள் அர்ச்சகர்களாகப் பணி புரிகிறார்கள். கோயில் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது.

சிரிகானு (Chiri Khana) எனப்படும் மிருகக்காட்சி சாலை பார்க்கவேண்டிய ஒன்று. குழந்தைகளைப் போல நாங்கள் குதூகலத்துடன் சுற்றிப் பார்த்தோம். புகழ் பெற்ற வெள்ளைப்புலி இருப்பது இங்குதான். துறை முகத்துக்குப் போய்ப் பார்த்தோம். ஹூக்ளி நதியில் ஏராளமான பெரிய கப்பல்கள் நிற்கின்றன. என்ன சுறுசுறுப்பு! ஸ்டீமர்களிலும் கப்பல்களிலும் ஏற்ற இறக்க எவ்வளவு பொருள்கள் வந்து குவிக்கப் பட்டிருக்கின்றன.

அடுத்துக் காணவேண்டிய கட்டிடம் விக்டோரியா மெமோரியல். வெள்ளைச் சலவைக் கல்லினுல் கட்டப் பட்ட இக் கட்டிடம் பெரிய மைதானத்தை அடுத் துள்ளது. சுற்றிலும் ரமணீயமான தோட்டம். இத னுள்ளே—விக்டோரியா மகாராணியாரோடு தொடர் புடைய அபூர்வப் பொருள்களெல்லாமிருக்கின்றன. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தது முதல் சுதந் திரம் கொடுத்துவிட்டுப் போனது வரையிலான புகைப் படக் காட்சி பார்க்க வேண்டியதோர் மாட்சி. ஆங்கில மன்னர்கள் இந்திய வைசிராய்களுக்கு எழுதிய கடி தங்கள், ஆங்கில ஆட்சி இங்கு வேரூன்ற உதவியவர் களின் சிலைகள், உடைகள், ஆயுதங்கள் முதலியவை களைக் காட்சிப் பொருள்களாக வைத்திருக்கிறார்கள். இதன் உள்ளே இருக்கும்போது இருநூறு ஆண்டுகளுக் கும் முன்னுல் போய்வருகிறோம். ஜாதுகர் எனப்படும் பொருட் காட்சி (மியூசியம்) புகழ் பெற்றதாயிற்றே, பார்க்காமலிருக்கலாமா? தொல் பொருள் களஞ்சியமாக விளங்கும் இங்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அபூர்வப் பொருள்கள், சிலைகள், சிற்பங்கள், ஆபரணங் கள் எல்லாமிருக்கின்றன. வருஷத்தில் அறுபது லட்சம் மக்கள் இதைக் கண்டு களிக்க வருகிறார்களாம்.

டல்ஹௌசி சதுக்கத்திலுள்ள ஜெனரல் போஸ்டாபிஸ் கட்டிடம் கம்பீரமானது. எப்போதும் கஜகஜ வென்று கூட்டம். இதை அடுத்து வியாபார கேந்திர மான க்ளைவ் தெரு இருக்கிறது. ஏராளமான வங்கி களும், இன்ஷியூரன்ஸ்கம்பெனிகளும் தொழிலகங்களும் இந்தத் தெருவின் விசேஷம். க்ளைவ் தெருவுக்கு சமீபத் தில்தான் புகழ் பெற்ற ஹௌரா பாலம் உள்ளது. கல்கத்தாவில்தான் டிராம் வண்டி ஓடுகிறது. ஹூக்ளி நதியின் மறுகரையில்தான் ஹௌரா நகர் இருக்கிறது. நதியைக் கடக்கவே பாலம். மிக அகலமான பாலம். நடுவே டிராம், கார்களும் அதன் இருபக்கமும் மற்ற போக்குவரத்துக்குமாக உள்ளது. பாதசாரிகளுக்கும் தனிப் பாதை உண்டு இப் பாலத்தில்.

கல்கத்தா சர்வ கலாசாலை புகழ் பெற்றது. புகழ் பெற்ற டாக்டர்கள், வக்கீல்கள், ஆசிரியர்கள், விஞ்ஞா னிகள், பொறியியல் நிபுணர்கள், இலக்கிய கர்த்தாக்கள் பலரை இந்த சர்வ கலாசாலை உருவாக்கி இருக்கிறது.

கல்கத்தாவின் வடக்குப் பகுதியில்—ஷாம்பஜார் அருகே ஜைனர்களின் ஆலயமிருக்கிறது. ஏராளமான வெள்ளி போன்று பளபளக்கும் வண்ணக் கண்ணாடிக் கற்களால் அழகு படுத்தப்பட்டிருக்கிறது. கண்ணாடி மாளிகை எனப்படும் சீனர்களின் கோயிலையும் பார்த் தோம். நகரத்தார் கட்டி இருக்கும் நகரேஸ்வரர் ஆலயத் தையும் கண்டு களித்தோம்.

கல்கத்தாவின் மைதானமும், ஏரிகளும் ரொம்பப் பிரபலமானவை. பொழுது போக்குக்கும் கூட்டங்கள், போட்டிகள் நடத்தவும் இது பயன்படுகிறது.

ராயல் பொடானிகல் கார்டன் பிக்னிக் போகிறவர் களுக்கு உகந்த இடம். தாவர இயல் தொடர்பான

ஏராளமான மரங்களும் மலர்ச் செடிகளும் உல்லாச மான இடம். இருநூறு ஆண்டு வயதான ஆலமரம் ஒன்று ஆயிரம் அடிகள் சுற்றளவுக்குப் பரந்திருக் கிறது.

நகரின் வடக்கே எட்டாவது மைலில் டம்டம் விமான நிலையமிருக்கிறது. நியூ மார்க்கெட் என்பது கல்கத்தாவிலேயே மிகப் பெரிய அங்காடி—இங்கு கிடைக்காத பொருள்களே கிடையாது.

கல்கத்தா நகரம் காண்பதற்கு அசுத்தமாக இருக் கிறது. கை ரிக்‌ஷாக்களும், டிராமும் அதிக அளவில் சத்தத்தை உண்டாக்குகின்றன. ஆட்டோ அதிகமில்லை. ஓட்டை உடைசல்களே அதிகம். நல்ல கார்கள் அபூர்வமாகத் தென்படுகிறது. சினிமாத் தியேட்டர் களும் மோசம்; ஹோட்டல் சாப்பாடு படுமோசம்! நகரத் தார் சத்திரம் மிகப்பெரியது. பெரும்பாலான பகுதிகளை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள்.

பூரி—ஜகன் நாத்

கல்காத்தாவிலிருந்து ஒரிஸ்ஸா மாகாணத்தி லுள்ள பூரி க்ஷேத்திரத்துக்கு வந்து சேர்ந்தோம். ஜகந் நாதர் ஆலயமிருக்கிறது இங்கு. உலகப் புகழ் பெற்றது பூரி ஜகன்நாதரின் தேர்த் திருவிழா. ஜகன்நாதரின் கோயிலும் கதையும் பழைமையானவை.

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே இந்திர யும்னன் என்ற ஓர் அரசன் இங்கு ஆண்டு வந்தான். நல்லவன்; பக்திமான். ஒரு நாள் அவன் கனவில் விஷ்ணு தோன்றினார். தனக்கு ஒரு கோயில் எழுப்பு மாறு கூறினார். கடலில் ஒரு மரம் மிதந்து வந்து கரை யில் ஒதுங்கும். அதில் தன் சிலையை வடித்துப் பிர திஷ்டை செய்யுமாறும் கூறி மறைந்தார் திருமால்.

கனவில் கண்டபடியே கடற்கரையில் ஒரு பெரிய மரக்கட்டை வந்து ஒதுங்கி இருந்தது. ஆறு அடி நீள மிருந்த அது இரும்பைவிடக் கனமாக உறுதியாக இருந்தது. சிலைவடிப்போரின் சிற்றுளிகள் அதில் பட்டு மூளியாயின. அதைச் செதுக்கி உருவம் அமைக்க முடியவில்லை. மன்னருக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. அந்த மரத்தில் யார் எப்படி சிலை வடிப் பார்கள்?

அதில் சிலை வடிக்கும் வல்லமை பெற்றவர் ஒருவர் இருந்தார். அது தேவசிற்பி விஸ்வகர்மாதான். ஒரு கிழவராக உருமாறி விஸ்வகர்மா மன்னிரிடம் வந்தார். அந்த மரத்தில் தன்னால் அழகிய ஜகந்நாதர் உருவை வடிக்க முடியும் என்றார். "ஆனால் இரண்டு வாரம் அவகாசம் வேண்டும். இடையில் யாரும் என்னையோ நான்செய்யும் உருவங்களையோ வந்து காணக்கூடாது" என்று நிபந்தனை விதித்தார். மன்னர் சம்மதித்தார். விஸ்வகர்மா வேலையைத் தொடங்கினார்.

இரண்டு வாரங்கள் முடியும் தருணம். மன்னரால் ஆவலை அடக்க முடியவில்லை. கிழட்டு சிற்பி என்ன தான் செய்திருக்கிறார் என்று பார்க்கும் ஆவலில் அவரது சிற்ப க்கூடத்துக்குப் போனார். மெள்ள எட்டிப் பார்த்தார். அவ்வளவுதான். மன்னரின் தலை யைக் கண்டதும் விஸ்வகர்மா மறைந்தார். சிலை முற்றுப் பெறவில்லை. முகமும் கண்களும் வாயும் மூக்கும் மட்டுமே. கையில்லை—காலில்லை. அதிசயத்தி லும் அதிசயமாக! அதே மாதிரி இன்னும் இரண்டு கட்டைகள் அருகே கிடந்தன.

மன்னருக்கு வேதனையான வேதனை. முற்றுப் பெறாத சிலைகளுக்காக மிகப் பெரிய கோயிலை எழுப்

பினர். மற்ற இரு கட்டைகளையும் பலராமராகவும் சுபத்திரையாகவும் கோயில்களில் பிரதிஷ்டை செய்தார்.

பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயத்திலிருக்கும் தெய்வங்களின் கதை இதுதான்-பன்னிரண்டாம் நூற்றுண்டில் கட்டப்பட்டது இப்பெரிய கோயில். இப் பெரிய கோயிலினுள், பல சிறிய கோயில்கள் இருக்கின்றன. பூரி ஜகந்நாதருக்கான ரதோத்ஸவம் மிகப் பிரபலமானது. மூன்று பிரும்மாண்டமான அலங்கரிக்கப்பட்ட தேர்களில் ஜகந்நாதர், பலராமர், சுபத்திரை மூவரும் வைத்து நீண்ட வடம் கொண்டு இரண்டு மைல் தூரம் பக்தர்கள் கூடி இழுப்பார்கள். கண் கொள்ளக் காட்சி! ஊருக்கு வெளியே தோப்பில் மண்டபத்தில் எட்டு தினங்கள் இக் கடவுளர்களை வைத்திருப்பார்கள். லட்சக்கணக்கில் யாத்திரிகர்கள் வந்து அலை மோதுவார்கள். பிறகு மறுபடியும் சுவாமியைத் தேரில் வைத்துக் கோயிலுக்குள் கொண்டு செல்லுவார்கள். ‘ஜெகன்னுத் கீ ஜெய்’ கோஷம் ஒரிஸ்ஸாவையே கலக்கும். இந்தப் பெரிய திருவிழாவுக்காக நகரம் பல மாதங்கள் தன்னைத் தயார்ப் படுத்திக்கொள்ளும். கடை, கடைத்தெரு, சந்தை எல்லாம்தான். கோலாகலம்!

பூரி கோயில் கோபுரச் சிற்பங்களும், தேரிலுள்ள சிற்பங்களும் கஜுரஹோவை நினைவுபடுத்தும் வகையில் சிற்றின்ப லீலைகளையும் நிர்வாணக் கோலத்திலுள்ள உருவங்களும் காட்சி தருகின்றன. அதைக் காணவும் ரசிக்கவுமே ஒரு கூட்டம் வருகிறது.

பூரியிலிருந்து 53 கல் தொலைவிலுள்ள கோனரக் என்னுமிடத்திற்கு டாக்சியில் சென்று வந்தோம். இது 13ஆம் நூற்றுண்டில் கட்டிய கோவில். சிற்ப வேலைப்பாடுகள் அதி அற்புதமாக அமைந்திருக்கின்றன.


மூலவரை சூரியக் கடவுள் என்று சொல்லுகின்றனர். மூலவிக்ரகத்தை லண்டனுக்குக் கொண்டு போய்விட்டார்களாம். கோபுரத்தைச் சுற்றிலும் நிர்வாணச் சிற்பங்களும் மிக அதிகமாக அமைத்திருக்கிருர்கள். கடற்கரை ஓரத்தில், கல்லே கிடைக்காத ஊரில், பன்னிரெண்டு ஏக்கர் நிறைய, கற்கோயில்களைக் கட்டி அதை விஞ்ஞான முறைப்படியும் அமைத்திருப்பது அற்புதம். சூரிய உதயமே மூலவர் முகத்தில் விழும்படியாக அமைத்துள்ளார்கள். அழிந்தது, அழித்தது போக இன்று நான்கு கோயில்கள் தான் மிஞ்சியிருக்கின்றன. வட இந்தியாவில் கஜுராஹோ, கர்நாடகத்தில் பேலூர் போன்ற கோவில்களுக்கு இணையாகச் சிற்ப வேலைப்பாடுகள் கோனரக்கில் அமைந்திருக்கின்றன.

கோனரக்கிலிருந்து பூரி வந்து பூரியிலிருந்து புறப்பட்டு வால்டேர் வந்து சேர்ந்தோம். இங்கிருந்து 14 மைல் தொலைவிலுள்ள சிம்மாசலம் என்ற சிறிய மலைக்கு 1,000 படிகள் ஏறிச்சென்று அங்குள்ள அருவியில் குளித்துவிட்டு, வராக மூர்த்தியைத் தரிசனம் செய்து கொண்டோம். மூர்ததியை நிரம்பவும் சந்தனம் போட்டு மறைத்து சிவலிங்க உருவில் வழிபடுகின்றனர். ஆண்டிற்கு ஒரு முறை சந்தனத்தை எடுத்துவிட்டு மீண்டும் சந்தனக் காப்புச் செய்கிருர்கள். வால்ட்டேரில் கடற்கரை அழகாக இருக்கிறது. கப்பல் கட்டும் இடமும் யுனிவர்சிட்டியும் பார்த்தோம். புதிதாகக் கட்டியுள்ள பண்டரிநாதன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்தோம். கோவில் சிறியது; மூர்த்தி பெரியது. அன்று இரவு புறப்பட வேண்டிய ரயில் ஆந்திராவில் வீசிய புயலின் காரணமாகக் குறித்த நேரத்தில் புறப்படவில்லை. எப்பொழுது புறப்படும் என்ற நம்பிக்கையும் இல்லை. ஸ்டேஷனில் குளிர் தாங்க முடியவில்லை.

ஸ்டேஷனிலிருந்த சாப்பாட்டுச் சாமான்களெல்லாம் தீர்ந்துவிட்டன. எங்கள் கோச்சில் மேலும் 20 நாட்களுக்கு வேண்டிய சாப்பாட்டுச் சாமான்கள் இருந்ததால் நிம்மதியாகச் சமைத்துச் சாப்பிட முடிந்தது. இரண்டு நாள் கழித்து வால்டேரிலிருந்து புறப்பட்டு ரேணிகுண்டா வந்து திருப்பதிக்குப் போய் சுவாமி தெரிசனம் செய்துகொண்டு சென்னை வந்து சேர்ந்தோம். சென்னையிலிருந்து புறப்பட்டு ராமேஸ்வரம் வந்து சுவாமி தெரிசனம் செய்துகொண்டு, சௌகரியமாக மதுரை வந்து சேர்ந்து மீனுட்சி அம்மனைத் தெரிசனம் செய்து கொண்டு, எங்கள் புனிதப் பிரயாணத்தை நல்லவிதமாக முடித்துக் கொண்டோம்.

பொதுவாக தென் இந்தியக் கோவில்களுக்கு இணையான பெரிய கோவில்கள் வட இந்தியாவில் இல்லை; தென் இந்தியக் கோவில்களிலே ஒலிக்கின்ற மங்கள வாத்தியங்களும், இனிய இசைகளும், பாசுரங்களும் மனதை ஆண்டவனிடத்திலே ஐக்கியப் படுத்துகின்றது. வட இந்தியக் கோவில்களிலேயுள்ள மாக்கல் விக்ரகங்கள் ஏதோ கொலு பொம்மையைப் பார்க்கின்ற உணர்வைத்தான் நமக்கு ஏற்படுத்துகின்றன. தென் இந்தியக் கோவில்களிலுள்ள கல் விக்ரகங்கள் ஆண்டவனை நினைவுபடுத்துகின்றன. மேலும் இங்குள்ள சுத்தம் மனதையும் பரிசுத்தப்படுத்துகின்றது. வட இந்தியாவில் கோவில்களிலேயே குடும்பம் நடத்துகிறுர்கள் மாடுகளெல்லாம் கோவிலினுள்ளே திரிகின்றன. சில கோவில்களிலே அர்ச்சகர்களும் பண்டாக்களும் நம்மை ஏய்க்கின்றனர். கோவில்களைப் பொறுத்தவரையில் சுத்தம், மங்கள இசை, பக்தி முதலியவைகளுக்கு தென்னிந்தியக் கோவில்களுக்கு இணை தென்னிந்தியக் கோவில்களே.


முற்றும்



வி. என். சிதம்பரம்

"பணம் ஒன்றையே பெரிதென மதித்து அல்லும் பகலும் அயராது உழைக்கும் மனித சமுதாயம் அற்ப நேரத்தில் அழியும் செல்வத்தைவிட்டு அழியாத நித்தியப் பொருளான அருட் செல்வத்தைப் பெறவேண்டும்; இந்தியத் திருநாட்டின் இயற்கைச் செல்வங்களைக் கண்டு களிக்க வேண்டும்" என்ற நற்கருத்துடன் திரு. வி. என். சிதம்பரம் இந்நூலை எழுதியுள்ளார்.

—வானதி திருநாவுக்கரசு



wrappe
prabhu printi